விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalāikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 09, சனிக்கிழமை 24.12.2016 | கதிர் 49

மீண்டும் புதுப் பொலிவுடன்
சாறிகளின் சாம்ராஜ்ஜியம்
சரவணா
ரெக்ஸ்
இல.526,529 பருத்தித்துறை வீதி,
நல்லூர்,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0778448045
இல.171, பிரதான வீதி,
நெல்லியடி.
தொ.பே.: 021 226 2992

# 3,000 முஸ்லீம்களுக்கு காணி முதல்வர் விக்கி வழங்கினாரா?

## நிருபித்துக்காட்டக் கோரி சவால் விடுக்கிறார் எதிரணி உறுப்பினர்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 24

**முஸ்லிம்களை வடக்கு மாகாண சபை அரவணைத்துச் செல்வதாகக் கூறும் முதல்வர் விக்னேஸ்வரன், வடக்கு மாகாண சபை பதவியேற்ற பின்னர் இதுவரை மூவாயிரம் முஸ்லிம் குடும்பங்களுக்கு காணிகளை வழங்கியிருகின்றது என்றும் சபையில் கூறியிருக்கின்றார். அது அப்பட்டமான பொய். மூவாயிரம் குடும்பங்களுக்கு அல்ல, மூன்று முஸ்லிம் குடும்பங்களுக்காவது முதலமைச்சர் காணிகளை வழங்கியிருந்தால் அதனை நிருபித்துக் காட்டவேண்டும்."**

**-இவ்வாறு முதலமைச்சருக்கு சவால் விடுத்திருக்கின்றார் வடக்கு மாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்ட எதிரணி உறுப்பினரான யாசீன் ஜவாகீர்.**

வடக்குமாகாணசபைப்'பட்ஜெட்' விவாதத்தின்போது பேசிய முஸ்லிம் உறுப்பினர்கள் சிலர் வடக்கு மாகாண சபை முஸ்லிம்களை அரவணைத்துச் செல்லவில்லை எனக் குற்றம் சுமத்தியிருந்தனர்.

அதற்குக் கடந்த புதனன்று விவாதத்தின்போது பதிலளித்த முதலமைச்சர், வடக்கு மாகாண சபை அமைக்கப்பட்ட பின்னர் மூவாயிரம் முஸ்லிம்களுக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளன என்று சபையில் கூறியிருந்தார்.

அது குறித்தே சீற்றத்துடன் நீண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கின்றார் ஜவாகீர்.

மத்திய அமைச்சர் ரிஷாத்

பக்கம் 20 >>>

## நிறைவேறியது 'பட்ஜெட்'!

யாழ்ப்பாணம், டிசெ.24

2 ஆயிரத்து 272 கோடி 81 லட்சம் ரூபா உள்ளீட்டுடனான வடக்கு மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் வடமாகாண சபையில் நேற்று ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் நான்கு நாள்கள் நடந்த விவாதத்தின் பின்னர் நேற்று வெள்ளிக்கிழமை மாலை அது நிறைவேற்றப்பட்டது.

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முன்மொழிய எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா வழிமொழிய எவ்வித எதிர்ப்புக்களோ ஆட்சேபனைகளோ இன்றிய நிலையில் அது ஏகமனதாக சபையால் ஏற்று அங்கீகரிக்கப்பட்டது. (உ)

## பட்ஜெட்டின் இறுதிக்கட்டத்திலும் நேற்று சீறினார் சிவாஜிலிங்கம்

### ரெலோ உறுப்பினரிடையே முறுகல்

யாழ்ப்பாணம், டிசெ.24

நேற்றுவடக்குமாகாணசபையில் மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக - வாணிப, கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சின் 2017ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு மீதான விவாதத்தின் இறுதிக் கட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் ரவிகரன் மற்றும் யாழ். மாவட்ட உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஆகியோர் மேற்படி அமைச்சுக்களுக்குப் பொறுப்பான அமைச்சர் பா.டெனிஸ்வரனுக்கு எதிரா

பக்கம் 19 >>>

## அதிபர்கள் நியமன விவகாரம்: நீதிமன்றம் செல்லும் சாத்தியம்!

கொழும்பு, டிசெ.24

புதிய அதிபர் சேவை தரம் 3இல் சித்தியடைந்தோருக்கு பாட சாலைகளில் அதிபர் பதவிகளை வழங்கி நிலைப்படுத்துவதில் தொடர்ந்து தாமதம் காட்டப்படுமானால் அதற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வது என வட.மாகாண புதிய அதிபர் சங்கம் தீர்மானித்துள்ளது என்று அறியவருகின்றது.

அதிபர் போட்டிப் பரீட்சையில்

பக்கம் 19 >>>

## நேற்றைய அமர்வைச் சூடாக்கிய அதிபர்கள் நியமன விவகாரம்

யாழ்ப்பாணம், டிசெ.24

அதிபர்கள் நியமன விடயத்தில் நேற்று கொஞ்சம் சூடாகியது வடக்கு மாகாண சபை.

நேற்றுமுன்தினம் வடக்கு மாகாணசபை முன்றிலில் போராட்டம் நடத்திய வடமாகாணத்தைச் சேர்ந்த கடமை நிறைவேற்று அதிபர்கள் மற்றும் நேற்று வெள்ளிக்கிழமையும் வடக்கு மாகாண சபைக்குள், வடமாகாணசபையின் சில உறுப்பினர்களின் ஆதரவுடனும் அவைத் தலைவரின் அனுமதியுடனும் பார்வையாளர் பகுதிக்குள் உட்

பக்கம் 19 >>>

## ரவிராஜ் படுகொலை பற்றிய விடயம் உளவுத் துறைக்கு முன்பே தெரியுமா?

### அரச சட்டத்தரணியிடம் அது குறித்துக் கேள்வி

கொழும்பு, டிசெ.24

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடர்ராஜா ரவிராஜ் படுகொலையுடன் தொடர்புடைய தகவல் ஒன்றைத் தேசிய உளவுத்துறைமுன்கூட்டியே அறிந்திருந்தது என இலங்கை அரசாங்கத்தின் சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் றொஹந்த அபே சூரிய மேல் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அத்துடன், நடராஜா ரவிராஜ் படுகொலை தொடர்பில் மேலதிகாரிகளுடன் அப்போதைய

பக்கம் 19 >>>

அளப்பு அருணாசலம்



அப்ப அங்க வீரம்...!
இப்ப அங்க சரசம்...!!

## 7.30 மணிக்கு பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு சபையில் எதிர்ப்பு

### மாகாண உறுப்பினர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.24

வடக்கு மாகாண பாடசாலைகளை ஆரம்பிக்கும் நேரத்தை 7.30 மணியாக மாற்றும் திட்டத்தை மாகாணசபை உறுப்பினர்கள் நேற்று கடுமையாக எதிர்த்தனர்.

இது மக்கள் பிரதிநிதிகள் எடுத்த தீர்மானம் அல்ல. அமைச்சர்களும் அதிகாரிகளும் எடுத்த தீர்மானம் என்று பல உறுப்பினர்கள் விசனம் தெரிவித்தனர்.

இது மாகாணசபையின் முடிவு அல்ல. அமைச்சர்களின் முடிவு மட்டுமே - என்றார் அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானம்.

8 மணி தான் பாடசாலை நேரத்துக்குப் பொருந்தும். கொழும்பு செய்கிறது, கண்டி செய்கிறது, காலி செய்கிறது என்று கூறி எல்லாவற்றையும் காலி செய்துவிடாதீர்கள் - என்றார் அவர்.

முல்லைத்தீவில் பல கல்விப் பிரச்சினைகள் உள்ளன அம்பலவன் பொக்கணை, முள்ளிவாய்க்கால் முதலிய கிராமங்களில் பல மைல் தூரங்கள் நடந்து மாணவர்கள் பாடசாலைக்குச் செல்கிறார்கள். 7.30 மணிக்கு பாடசாலை ஆரம்பிக்கும் திட்டம் வருகிறது. முஸ்லிம் பாடசா லைகள் ஆரம்பிக்கும் நேரத்தை 7.00 மணி ஆக்

பக்கம் 20 >>>

## கச்சதீவு ஆலயம் நேற்றுத் திறப்பு

### தமிழகத்திலிருந்து 82 பேர்

யாழ்ப்பாணம், டிசெ.24

இலங்கைகடற்படையினரின் நிதிஅனுசரணையில்கச்சதீவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயம் யாழ்.மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு.கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் நேற்று ஆசீர்வதிக்கப்பட்டு திறந்து வைக்கப் பட்டது.

பின்னர் அவரின் தலைமையில் சிறப்புபூசையும் இடம்பெற்றது. இதன்போது இவ்வாலயத் திறப்பு விழாவுக்கு தமிழ்நாடு

பக்கம் 20 >>>



## மாணவ — மாணவி சோடிகள் யாழ். கோட்டைப் பகுதியில்!

யாழ்ப்பாணம், டிசெ.24

"யாழ்.நகருக்குரியூஷனுக்கு வரும் மாணவ, மாணவியர் வகுப்புகளுக்குச் செல்லாமல் சோடி, சோடியாக யாழ். கோட்டைக்குள்சென்றுசீரழிகிறார்கள். இச்சீரழிவு மாணவர் கல்வியையும் சமூக ஒழுங்கையும் குழப்பி அழிக்கின்றது."

–இவ்வாறு நேற்று மாகாண சபையில் விசனத்துடன் கவலை தெரிவித்தார் சபையின் ஒரேயொரு பெண் உறுப்பினரான அனந்தி சசிதரன்.

"பெருந்தொகையானபெண்கள்பணியாற்றும்கல்வித்துறையில் பெண்களுக்குப் பாதுகாப்பு போதுமானதாக இல்லை. பெருமளவிலான ஆண் அதிகாரிகள் பெண்களின் பாதுகாப்பு நலன்களை விளங்கிக் கொள்கிறார்களில்லை. இடமாற்ற விடயங்களில் கர்ப்பமான பெண்கள், கருச்சிதைவுக்கு உட்பட்டவர்கள் முதலிய ஆரோக்கிய விடயங்களுடன் போராடுவோர் கூட தூர இடங்களுக்குஅனுப்படுகின்றார்கள்." என்றார் அவர்.

"இங்குள்ள கல்வி அதிகாரி

பக்கம் 19 >>>

தமிழ்பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

# வடக்கின் அபிவிருத்திச் செயற்பாடுகளில் மக்களின் கருத்துக்களை அறியவேண்டும்

## வடமாகாண சுகாதார அமைச்சர் சபையில் வலியுறுத்தல்

கைதடி டிசெ.24

வடக்கில் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் மக்களின் கருத்தறிந்து, அவர்களின்பங்குபற்றுதலோடு முன்னெடுக்கப்பட வேண்டும் என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

மாகாண அரசோ மத்திய அரசோ, எவரால் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் அவை வெளிப்படைத் தன்மையோடு முன்னெடுக்கப்பட்டாலே மக்களுக்கு பயனுள்ளதாக அமையும் என்றும் அவர் கூறினார்.

வடக்கு மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் உரை நேற்று முன்தினம் இடம்பெற்ற போது, சுகாதார அமைச்சின் பட்ஜட் உரையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஒரு பலமான சமூகத்தால் மாத்திரமே ஒரு பலமான போராட்டத்தை முன்னெடுக்க முடியும் என்பதை நாம் அடிக்கடி மறந்து விடுகிறோம்.

எமது மக்களை ஒரு பலமான சமூகமாக வாழச் செய்ய வேண்டுமாக இருந்தால் அபிவிருத்தி சார்ந்த விடயத்தில் நாம் பின்வரும் நிலைபெறு அபிவிருத்திக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பது சிறப்பானதாக இருக்கும்.

எமது மக்களின் உழைப்பே எமது பலம். இதுவே எமக்கான அபிவிருத்தியின் அடிப்படைக் கோட்பாடாக இருத்தல் அவசியமாகும். இன நலன்களும், அரசியல் நலன்களும் அபிவிருத்தியோடு இணைத்து நோக்கப்படலாகா.

எல்லாவிதமான அபிவிருத்தி சார்ந்த செயற்பாடுகளும், அவை மத்திய அரசினதாயினும் மாகாண அரசினதாயினும் வெளிப்படைத் தன்மையோடு எமது மக்களின் கருத்தறிந்து, அவர்களுடைய பங்குபற்றுதலோடு முன்னெடுக்கப்பட வேண்டும்.

அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் எமது மக்கள் நலன் சார்ந்தனவாகவும் எமது பிரதேசத்திற்கு ஏற்புடையனவாகவும் இருப்பது உறுதி செய்யப்படுதல் வேண்டும்.

எமது உரிமைப் போராட்டத்துக் கும் எமது மக்களின் அபிவிருத்திக்கும் இடையிலான இடைத் தொடர்பு தெளிவாக வரையறுத்து முன்வைக்கப்பட வேண்டும்.

வடக்கு மாகாண மக்களின் அபிவிருத்திக்கும் அரசியல் கட்சிகளுக்குமிடையிலான தொடர்பும், இன ரீதியான அபிவிருத்தி என்ற கோட்பாடும் முற்றாகக் கைவிடப்படல் வேண்டும்.

எமது மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாடு என்ற பாரிய தொகுதியினுள் நேரடியாக போரில் பாதிக்கப்பட்டவர்கள், போரால் மறைமுகமாகப் பாதிக்கப்பட்டவர்கள், நேரடியாக போரில் ஈடுபட்டதன் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள், சந்தேகத்தின் பேரால் பாதிக் கப்பட்டவர்கள், இராணுவ ஆக்கிரமிப்புகளை எதிர்கொள்வோர், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் என எல்லோரும் உள்வாங்கப்பட்டு வடக்கு மக்களுக்கான அபிவிருத்தி என்ற ஒரு தொனிப்பொருள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

வடக்கு மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாட்டின் பிரதான அம்சமாக வீடமைப்பு, கல்வி, சுகாதாரம் என்பன பிரகடனப்படுத்தப்படல் வேண்டும், இதற்கமைவாக இவை சார்ந்து அனைத்து நடவடிக்கைகளும் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

மேற்படி விடயங்களை ஒழுங்கமைக்கின்ற விதத்தில் உட்கட்டமைப்பு வசதிகள், போக்குவரத்து சேவைகள், வீதியமைப்பு, தொடர்பாடல் சேவைகள், நீர் விநியோகம், வடிகாலமைப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற விடயங்கள் சீரமைக்கப்படல் வேண்டும்.

மாகாண மக்களின் அபிவிருத்தி இலக்குகளை அடைய உதவும் பொருட்டு மாகாண அரச ஊழியர் படை வினைத்திறன் கூடியதாக ஒழுங்கமைக்கப்படுதல் வேண்டும்.

அபிவிருத்தி விடயங்களைத் தீர்மானிக்கவும், மேற்பார்வை செய்வதற்கும் ஏதுவாக மாகாண அரசின் பிரதிநிதிகளையும், மத்திய அரசின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய பொறிமுறை உருவாக்கப்படுதல் வேண்டும். - என்றார். (ம)

## ஏபி பாடசாலைகளின் அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரல்

சுன்னாகம் டிசெ.24

யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி, வவுனியா தெற்கு பெரிய கோமரசங்குளம் மகாவித்தியாலயம் ஆகிய 1 ஏபி பாடசாலைகளின் அதிபர் பதவி வெற்றிடங்களுக்குப் பொருத்தமாவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தில் கடமையாற்றுகின்ற இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1, இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2 ஐச் சேர்ந்தவர்களே இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் அந்தந்தப் பிரதேச வலயக்கல்வி அலுவலகங்களில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று, வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசுடன் எதிர்வரும் ஜனவரி மாதம் 02 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு "செயலாளர், வடக்கு மாகாண கல்வி அமைச்சு, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-54)

# கச்சதீவில் இறங்கு துறையுடன் மலசல கூட வசதியுடம் விரைவில்!

## ரூ.60 லட்சத்தில் அமைக்க ஏற்பாடாம்



இலங்கை கடற்படையினரின் 77 லட்சம் ரூபா நிதி உதவியுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தில் எதிர்காலத்தில் யாழ். அரச அதிபரின் செயற்றிட்டத்தின் மூலம் 60 லட்சம் ரூபா செல வில் இறங்கு துறைமுகம் மற் றும் மலசலகூட வசதிகள் அமைக்கப்படவுள்ளன என யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட் திரு. கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்தார்.

நேற்று ஆலயத்தைத் திறந்து வைத்து ஆசீர்வதித்த பின்னர் வழங்கியவாழ்த்துரையிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

இலங்கை கடற்படையினரின் 77 லட்சம் ரூபா நிதி அனுசரணையில் இவ்வாலயம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்தக் குறைந்த பணத்தில் இந்த ஆலயத்தைக் கட்டி முடிக்க கடற்படையினரின் ஒத்துழைப்பே பிரதான காரணமாகும். கடற்படையினரே தமது ஆளணி உதவிமூலம் இப்பணியைச் செய்து முடித்திருக்கிறார்கள்.

நாங்கள் இப்பணியைச் செய்து முடிப்பதென்றால் அதற்குத் தேவையான கற்களை இங்கே இக்கடலால் கொண்டு வந்து சேர்ப்பதற்கே 77லட்சம்ரூபாவும் செலவழிந்து போயிருக்கும். கடற்படையினர் இச்சேவையைச் செய்திருக்கிறார்கள்.

இந்தப் பணி வேகமாக முடிவதற்கு இலங்கைக் கடற்படைத் தளபதி ஓய்வு பெற்றுச் செல்வதும் காரணமாக அமைந்திருந்தது. தான் வாக்குக் கொடுத்தமையை நிறைவேற்ற வேண்டுமென்று அவர் விடாப் பிடியாக இருந்தார். அவருக்கு எமது மனமாந்த நன்றியையும் பாராட்டுக் களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகம் 60 லட்சம் ரூபா செலவில் இங்கு இறங்கு துறையையும் மலசல கூட வசதிகளையும் அமைக்கவுள்ளார். அவர் அதற்கான செயற்றிட்டத்தை தயாரித்து சுற் றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பி அனுமதியையும் பெற்றுவிட்டார். (உ- 10)

# உத்தேச அபிவிருத்தி ஒழுங்கு சட்டமூலம் மூன்று மாகாண சபைகளில் தோற்கடிப்பு

## வடக்கு முதல்வர் இன்றி ரணில் கூட்டம்

உத்தேச அபிவிருத்தி விசேட ஒழுங்கு விதிச்சட்டமூலம் மூன்று மாகாண சபைகளில் தோற்கடிக்கப்பட்டுள்ளது. வடக்கு, வட மத்திய மற்றும் ஊவா மாகாண சபைகளிலேயே இந்த சட்டமூலம் தோற்கடிக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபையில் நேற்று வெள்ளிக்கிழமை முதலமைச்சர் சி.விக்கினேஸ்வரன் மேற்படி சட்டமூலத்தை எதிர்ப்பதற்கான பிரேரணையை சபையில் முன்வைத்தார். ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் அந்தப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்து சட்டமூலத்துக்குத் தமது ஒருமித்த எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

உத்தேச அபிவிருத்தி விசேட ஒழுங்கு விதிச்சட்டமூலம் நடைமுறைப்படுத்தப்படுமானால் மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்கள் குறைக்கப்படும் என்று தெரிவித்தே இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இந்த சட்டமூலத்தை அடியோடு நிராகரிப்பதாகவும், தாம் ஒருபோதும் இதற்கு ஆதரவளிக்கப்போவதில்லை என்றும் வட மாகாண சபை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், வடமத்திய மாகாண சபையில் இந்தச் சட்டமூலம் 09 மேலதிக வாக்குகளாலும் ஊவா மாகாண சபையில் 04 மேலதிக வாக்குகளாலும் தோற்கடிக்கப்பட்டது.

இதேவேளை, உத்தேச அபிவிருத்தி விசேட ஒழுங்கு விதிச் சட்டமூலம் தொடர்பாக மாகாண முதலமைச்சர்களுக்குத் தெளிவுபடுத்தும் வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று அனைத்து மாகாண சபைகளின் முதலமைச்சர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்தார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண முதலமைசர்சர் கலந்துகொள்ளவில்லை. அப்படி ஒரு கலந்துரையாடல் நடைபெற்றால் அதில் தான் கலந்து கொள்ளப்போவதில்லை.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தனக்கு எவரும் அழைப்பு விடுக்கவில்லை என்று வடக்கு முதலமைச்சர் விக்கினேஸ்வரன் தெரிவித்தார். (ம)

## யாழ்.வலய அதிபர்களுக்கு ஒருநாள் செயலமர்வு

யாழ்.கல்விவலயத்துக்குட்பட்ட அதிபர்களுக்கான கல்வி அபிவிருத்தி தொடர்பான ஒரு நாள் செயலமர்வு நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் என்.தெய் வேந்திராஜா அறிவித்துள்ளார்.

இந்தச் செயலமர்வில் 2017 ஆம் ஆண்டுக்கான கல்வித் திட்டமிடல், நிர்வாக நடவடிக்கைகள், கல்வி அபிவிருத்தி, கல்வி முகாமைத்துவச்செயற்பாடுகள் தொடர்பான முன்வைப்புக்கள், கருத்துரைகள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களால் வழங்கப்படவுள்ளன.

எனவே, இந்தச்செயலமர்வில் அதிபர்களைக் கலந்து கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-54)

## பொதுக்கூட்டம்

கல்வியங்காடு ஞானபாஸ் கரோதய சங்கத்தின் பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை மாலை 5மணிக்கு நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

********

அரியாலை,டிசெ.24

அரியாலை சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிறு முற்பகல் 10மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறும். இந்த கூட்டத்தில் புதிய நிர்வாகக் சபைத் தெரிவு உட்பட முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட வுள்ளன என்று சனசமூக நிலையத்தினர் அறிவித்துள்ளனர். (இ)

# அமெரிக்காவுக்கான முன்னாள் தூதுவரின் விளக்கமறியல் ஜனவரி 2 வரை நீடிப்பு

கொழும்பு டிசெ.24

அமெரிக்காவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்ரமசூரியவின் விளக்கமறியல் காலம் நீடிக்கப்பட்டுள்ளது. அவரை தொடர்ந்தும் எதிர்வரும் ஜனவரி 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அரசநிதியை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் இவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். நேற்று இவர் மீண்டும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோதே



விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

மேற்படி முன்னாள் தூதுவர், கடந்த நவம்பர் மாதம் 17 ஆம் திகதி இரவு 10 மணிக்கு வெளிநாட்டுக்குப் புறப்பட்டுச் செல்லவிருந்த சமயத்தில் நிதி மோசடி தொடர்பான பொலிஸ் விசாரணைப் பிரிவினால் கட்டு நாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

காலைக்கதிர் Kalaikkathir



# தொல்பொருள் வரலாற்று இடங்கள் வடக்கு, கிழக்கில் அதிகம் அழிவு

## பாதுகாக்க ஜனவரியில் விசேட நிகழ்ச்சித் திட்டம்

கொழும்பு, டிசெ.24

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் பெறுமதி வாய்ந்த வரலாற்று இடங்கள் அதிகம் அழிவுக்குள்ளாகியுள்ளன.

இந்த நிலையில் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாப்பதற்கு தொல்பொருள் திணைக்களமும் சிவில் பாதுகாப்புத் திணைக்களமும் இணைந்த ஒரு விசேட நிகழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி இந்தத்திட்டம் ஆரம்பிக்கப் படவுள்ளது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தொல்பொருள் பெறுமதி வாய்ந்த வரலாற்றுத்தளங்களைப் பாதுகாப்பது தொடர்பாக ஜனாதிபதியின் தலைமையில் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

தொல்பொருள் திணைக்களத்தின் நடவடிக்கைகளை முறையாகவும் வினைத்திறனுடனும் மேற்கொள்வதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இந்த சந்திப்பில் ஜனாதிபதி தெரிவித்தவை வருமாறு:-

தொல்பொருள் பெறுமதி வாய்ந்த வரலாற்றுத்தளங்களைப் பாதுகாப்பதற்கு ஒன்றிணைந்த நிகழ்ச்சித் திட்டம் அவசியம்.

பாதுகாப்பற்ற நிலையில் உள்ள தொல்பொருள் பெறுமதி வாய்ந்த இடங்களை கண்டறிந்து அவற்றை பாதுகாப்பது அவசியம். குறிப்பாக வடக்கு, கிழக்கில் தொல்பொருள்களுக்கு அச்சுறுத்தல் காணப்படுகின்றது. அது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும்.

இன வேறுபாடுகளின்றி இலங்கையர்கள் என்ற வகையில் எமது கீர்த்திமிக்க மரபுரிமைகளைப் பாதுகாத்து எதிர்கால தலைமுறைக்கு வழங்குவது தொடர்பாக அனைத்து இனங்கள் மத்தியிலும் உளப்பாங்கு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.- என்றார்.

இதேவேளை, திருகோணமலை, வவுனியா மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் பௌத்த மதத்துடன் தொடர்புடைய தொல்பொருள் பெறுமதி வாய்ந்த இடங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன என்று நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்த நிலையில், தெற்கில் எந்தவொரு கோவில்களோ பள்ளிகளோ தாக்குதலுக்கு உள்ளாகவில்லை எனவும் எனினும் பௌத்த மதவழிபாட்டுத் தளங்கள் மீது தமிழ் பேசும் மக்கள் தாக்குதல் நடத்துவதாக ஞானசார தேரர் இந்த சந்திப்பின்போது குற்றம்சாட்டினார். (ஐ)

## யாழ். கூட்டுறவுச் சங்க ஒளிவிழாவும் பணியாளர்கள் கௌரவிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம், டிசெ.24

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் ஒளிவிழா மற்றும் பணியாளர் கௌரவிப்பு நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு சங்க கேட்போர்கூடத்தில் சங்கத் தலைவர் மு.ஜெ. சுஜிந்திரன் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் மாவட்டக்கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொன்.மோகன் முதன்மை விருந்தினராகவும், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.கபிலன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் புனித யாகப்பர் ஆலய உதவி பங்குத் தந்தை அருட்பணி மௌலீஸ் அடிகளார் ஆசியுரை வழங்குவார். கிறிஸ்து பாலன் பிறப்பை முன்னிட்டு நடன நிகழ்வும் தொடர்ந்து கிளை நிலையங்களில் அதிகூடிய விற்பனையை மேற்கொண்ட பணியாளர்கள் கௌரவிப்பு மற்றும் சிறுவர்களுக்கான பரிசில் வழங்கலும் இடம்பெறும். (இ)

## எம்.ஜி.ஆர். நினைவு நிகழ்வும் எம் உறவுகளுக்கான அஞ்சலியும்



கொக்குவில், டிசெ.24

புரட்சித் தலைவர் அமரர் எம்.ஜி.இராமச்சந்திரனின் 29 ஆம் ஆண்டு நினைவு நாளும், தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நினைவு அஞ்சலி நிகழ்வும் பொன். மதிமுகராஜாவின் 18 ஆம் ஆண்டு நினைவு நாளும், சுனாமி அனர்த்தத்தால் உயிரிழந்த உறவுகளுக்குமான நினைவஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற உள்ளன.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இலங்கை தலைமைச் செயலகத்தில் இன்று மலர் மாலை அணிவித்தலுடன் நிகழ்வு ஆரம்பமாகும். குருநகர், பாசையூர் ஆகிய இடங்களில் உள்ள எம்.ஜி.ஆர். மற்றும் மறைந்த பேறிஞர் அண்ணாதுரையின் சிலைகளுக்கு மலர் மாலை அணிவிக்கும் நிகழ்வுகளும் இடம்பெறும்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் நாளை அமரர்களின் படங்களுக்கு மலர் மாலை அணிவிப்பதுடன் அறிஞர் பெருமக்காள் அஞ்சலி உரைகளும் இடம்பெறும்.

மூன்றாம் நாள் நிகழ்வுகள் திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும். கொக்குவில் சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் (புதுக்கோவில்) முன்றிலில் காலை 9 மணிக்கு முருகப்பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் மங்கல வாத்தியங்கள் முழங்க ஆரம்பமாகும்.

அன்றுபகல் 12மணியளவில் அன்னதான நிகழ்வுகள் இடம்பெறும். குருமார்கள் ஆசியுடன் நினைவு அஞ்சலிக் கூட்டம் இடம்பெறும்.

இயற்கை அனர்த்தத்தில் உயிர்நீர்த்த நம் உறவுகள் மற்றும் மறைந்த தலைவர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக சகல வர்த்தக நிறுவனங்களும் தமது வர்த்தக நிறுவன முகப்பில் கறுப்பு, வெள்ளைக் கொடிகளை பறக்க விடுமாறு ஏற்பாட்டுக் குழுவினரால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ)

## சந்தைக்கு சைக்கிளில் வந்தவர் வீடு திரும்பினார் கால் நடையாக!

சாவகச்சேரி, டிசெ.24

சாவகச்சேரி பொதுச் சந்தைக்கு சைக்கிளில் பொருள்களை வாங்கவந்தவர் கால்நடையாக கல்வயலுக்கு திரும்ப நேரிட்டது. காரணம் அவரது சைக்கிள் சந்தையில் களவு போய்விட்டது. மீன் சந்தைக்கு அருகில் அந்த நபர் சைக்கிளை விட்டுச் சென்றிருந்தார். மீனை வாங்கிக் கொண்டு வந்த போது சைக்கிள் மாயமாகியிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. சாவகச்சேரியில் கடந்த சில மாதங்களாக சைக்கிள் திருட்டுச் சம்பவங்கள் நடைபெறவில்லை தற்போது நத்தார் பண்டிகை நெருங்கி வருவதால் நகரில் மக்கள் கூட்டம் அதிகரித்துள்ளது. அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மீண்டும் திருடர்கள் தங்கள் கைவரிசையை காட்டத் தொடங்கியுள்ளனர் என்று சந்தை வியாபாரி ஒருவர் தெரிவித்தார். (இ-21)

## கலாசார விழா கரணவாய் ஆலய மண்டபத்தில்; இன்றைய நிகழ்வில் திருவுடையாள் மலர் வெளியீடும்

வடமராட்சி, டிசெ.24

வடமராட்சி தெற்கு மேற்கு (கரவெட்டி) பிரதேச செயலக கலாசார விழாவும் மற்றும் திருவுடையாள் மலர் வெளியீடும் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு, கரணவாய் மூத்த விநாய கர் ஆலய திருமண மண்டபத்தில் பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ தலைமையில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம், கரவெட்டி கோட்டக்கல்வி அதிகாரி கே.யோகநாதன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

விழா ஆரம்பத்தில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவிகள் வரவேற்பு நடனத்தையும், கலாசாரப் பேரவை உபதலைவர் கலாநிதி எஸ்.குணேஸ்வரன் வரவேற் புரையையும், அரங்கத் திறப்புரையை கலாசார அதிகாரசபை உறுப்பினர் செசிவப் பிரகாசமும் நிகழ்த்துவார்கள். "திருவுடையாள்" மலரை அதன் இணை ஆசிரியர் கி.நடராசா அறிமுகம் செய்து வைக்க, வெளியீட்டுரையை பேராசிரியர் செ.யோகராசா வழங்குவார்.

பிரதேசத்தைச் சேர்ந்த வைத்திய கலாநிதி ச.முருகானந்தன் (இலக்கியம்) கோ.கைலாசநாதன் (ஓவியம்) வே.ஜீவரத்தினம் (நாதஸ்வரம்) வைத்தியர் க.வேலும் மயிலும் (நாடகம்) சின்னவன் காசியன் (கிராமியக் கலை) ஆகிய 5 கலைஞர்களுக்கு "கலைஞான வாரிதி" விருது வழங்கிக் கௌரவிக்கப்படும். அத்துடன் கரவெட்டிப் பிரதேசத்தில் முன்னணி சமூக சேவையாளரான வி.சி.பொன்னம்பலத்துக்கு (உபாலி) சமூகச்சுடர் விருது வழங்கிக் கௌரவிக்கப்படும். இயல், இசை, நாடகம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெறும். (இ-30)

## சாயி நிலையத்தில் கிறிஸ்மஸ் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.24

யாழ்ப்பாணம் சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை ஞாயிறு பிற்பகல் 3.30 மணிக்கு கிறிஸ்மஸ் தின நிகழ்வுகள் இடம்பெறும்.

அன்றைய தினம் பால விகாஸ் மாணவர்களின் மேய்ப்பனின் கருணை நாடகம், குழு நடனம், நத்தார் பாடல் மற்றும் பாரதிபுரம் மனித மேம்பாட்டு மாணவர்களின் நத்தார் கீதங்களும் இடம்பெறும். யாழ். ஆயரின் செயலாளர் வணபிதா எஸ்.எம். சுதர்சன் அடிகளார் நத்தார் சிறப்புரையை நிகழ்த்துவார்.

# விவசாயப் போதனாசிரியர்கள் பயிற்சித் தரத்தில் நியமனம்

## 12பேருக்கு வடக்கு விவசாய அமைச்சு வழங்கியது

யாழ்ப்பாணம், டிசெ.24

வடக்கு விவசாயத் திணைக்களத்தில் பணியாற்றுவதற்கென பயிற்சித்தர விவசாயப் போதனாசிரியர்களாக 12 பேர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கினார்.

நியமனக்கடிதங்களை வழங்கி உரையாற்றும் போது அவர் தெரிவித்தவை வருமாறு:-

விவசாயிகளுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு விரிவாக்க சேவையை முன்னெடுப்பதில் விவசாயப் போதனாசிரியர்களின் பங்களிப்பு இன்றியமையாதது. எனினும், வடக்கு விவசாயத் திணைக்களத்துக்கு அனுமதிக்கப்பட்ட 161 விவசாயப் போதனாசிரியர்களது ஆளணியில் தற்போது 103 விவசாயப் போதனாசிரியர்களே கடமையாற்றி வருகின்றனர். 58 வெற்றிடங்கள் நிலவுகின்றன. இந்தப் பதவிக்கான ஆள்சேர்ப்புத் திட்டத்தில் கோரப்பட்டுள்ள தகுதியான விவசாய டிப்ளோமாவைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் போதிய எண்ணிக்கையில் வடக்கில் இல்லாத காரணத்தாலேயே இந்த வெற்றிடங்களை நிரப்ப முடியாத நிலை நீடிக்கிறது.





இந்த வெற்றிடங்களை ஓரளவுக்கேனும் பூர்த்தி செய்யும் நோக்கிலேயே க.பொ.த. உயர் தரத்தில் விஞ்ஞான பாடத்தில் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளில் இருந்து போட்டிப் பரீட்சையின் மூலம் 12 பேர் பயிற்சித்தர விவசாயப் போதனாசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பயிற்சிக் காலத்தில் இவர்கள் வவுனியா விவசாயக் கல்லூரியில் விவசாய டிப்ளோமா பயில்வதற்கு வேதனத்துடன் கூடிய விடுமுறை வழங்கப்படும், பட்டம் பெற்றவர்கள் பின்னர் நிரந்தரமாக பணிகளில் உள்ளீர்க்கப்படுவர். -என்றார்.

நியமனக்கடிதங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## 'தெரியாமல்' எழுதும் பத்திரிகைகள்!

அண்மையில் புத்தூரில் ஒரு நிகழ்வில் பேசிய மாவை சேனாதிராசா எம்.பி. சில விடயங்களைச் சுட்டிக் காட்டியிருக்கின்றார். ஒற்றையாட்சியை நீடிப்பது பிளவையே ஏற்படுத்தும் என்ற சாரப்படக் கருத்து வெளியிட்டிருக்கின்றார் அவர். அந்த நிகழ்வில் அவர் கூறிய விடயங்கள் சில இன்றைய கட்டத்தில் அவதானிக்கப்பட வேண்டிய அம்சங்களை உள்ளடக்கியிருக்கின்றன.

அவரது முதலாவது தாக்குதல் அம்பு ஊடகங்களுக்கு - குறிப்பாக பத்திரிகைகளுக்கு - எதிராக ஏவிவிடப்பட்டது. *"தீர்வுக்கான பேச்சுக்கள் இடம்பெறுகின்றன. அதையொட்டி பலரும் பலவிதமான கருத்துக்களை முன்வைக்கின்றார்கள். பத்திரிகைகளும் தங்களுக்கு ஏற்றவாறு தெரிந்தும், தெரியாமலும் எழுதிக் கொண்டிருக்கின்றன."* - என்பது அவர் வாய் மொழி வார்த்தைகள்.

உண்மைதான். பத்திரிகைகள் தெரிந்தும் தெரியாமலும்தான் எழுதிக் கொண்டிருக்கின்றன. அவர் கூறுகின்றமை போல சில பத்திரிகைகள் தங்களுக்கு ஏற்றவாறு விடயங்களை முன்வைக்க முயல்கின்றன என்பதும் மறுக்க முடியாத விடயம்தான்.

ஆனால், பல பத்திரிகைகள் அப்படியல்ல. அவை மாவை சேனாதிராசா கூறுகின்றமைபோல தெரிந்தும், தெரியாமலும் தான் எழுதிக்கொண்டிருக்கின்றன.

ஆனால், அப்படித் தமிழ்ப் பத்திரிகைகள் பல எழுதுவதற்குக் காரணமே, அவரையும் மூத்த தலைவராகக் கொண்ட கூட்டமைப்புத்தான் என்பதை அவர் மறந்து விட்டமையே வேடிக்கை.

இது தனி ஒருவரின் அல்லது தனிப்பட்ட ஒரு கட்சியின் அல்லது ஒரு தனிக் கூட்டமைப்பின் விவகாரம் அல்ல. தமிழினத்தின் தலைவிதி சம்பந்தப்பட்ட விடயம். தமிழ் மக்களின் ஆணை பெற்றவர்கள் என்ற வகையில் அது குறித்துப் பேசும் பிரதான அருகதை தமிழ்க் கூட்டமைப்புக்கே உண்டு என்பது வாஸ்தவம்தான்.

அடுத்த மூன்று வாரங்களுக்குள் தீர்வுத் திட்ட அடிப்படைகளைக் கொண்ட அரசமைப்பு நகல் வடிவம் நாடாளுமன்றில் வெளியாகப் போகின்ற நிலைமை வரை விவகாரம் முன்னேறிவிட்டது. இதற்குப் பின்னரும் பத்திரிகைகள் வெறுமனே வெறும் வாயை மென்று கொண்டு வாளாவிருக்க முடியாது. இந்த விடயம் பற்றிப் பேச வேண்டிய - தவிர்க்க முடியாத - கடப்பாடு அவற்றுக்கு உண்டு.

ஆனால், இவ் விடயத்தில் தமிழர்களின் பிரதிநிதியாக அரசுடன் பேசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன பேசினோம், எதுவரை பேசினோம், என்ன வரையறை வரை பேசினோம், எதுவரை இணக்கம் வந்துள்ளது, எதை விட்டுக் கொடுக்கிறோம், எதில் கண்டிப்பாக நிற்கிறோம் என்பன பற்றியெல்லாம் திட்டவட்டமான - தெளிவான- வெளிப்படையான - விளக்கமான - அர்த்தம் நிறைந்த - ஒரு தெளிவுபடுத்தலை இதுவரை மேற்கொள்ளவே இல்லை. அப்படியிருக்கையில், பத்திரிகைகளுக்குத் தெரிந்தும், தெரியாமலும் எழுதுவதைத் தவிர வேறு என்ன வழி உள்ளது?

இன்னமும் தேர்தல் கால விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட மாதிரியே *'ஒற்றையாட்சியை ஏற்கோம்; சமஷ்டித் தீர்வுக்கு மட்டுமே சம்மதிப்போம்; எமது மக்களின் இறைமையை அங்கீகரிப்பதான தீர்வுக்கு மட்டுமே உடன்பாடு; பிரிக்கப்படாத தமிழர் தாயகத்துக்கு உத்தரவாதம் அவசியம்'* - என்ற பாணியிலான வேட்டுகளே தமிழர் தரப்பின் பிரதிநிதிகளால் முழங்கப்படுகின்றன. ஆனால், அவை எல்லாவற்றையும் மறுக்கும் பிரதிபலிப்புகள் தென்னிலங்கையிலிருந்து தெளிவாகவும் உறுதியா கவும் உடனுக்குடன் வெளிப்படுத்தப்பட்ட வண்ணமே உள்ளன.

இந்தப் பின்புலத்தில், இவ்விடயம் பற்றிக் கட்டாயம் எழுத வேண்டிய ஊடகங்கள், பேச்சில் பங்குபற்றும் கூட்டமைப்பு தலைமை பேச்சுக் குறித்து மறைத்து வைத்திருக்கும் விடயங்களைத் தெரியாமல்தானே - அறியாமல் தானே - எழுத வேண்டியிருக்கும் ...! அதில் தப்பென்ன?

*"நேற்று அரசியலுக்கு வந்தவர்கள், ஆனா, ஆவன்னா படிக்காதவர்கள் இன்று மிகப் புலவர்கள் போல பேசுகின்றார்கள்"* என்றும் - *"ஒரு துளி வியர்வையை, ஒரு துளி இரத்தத்தைக்கூட காணாதவர்கள் இன்று பேசுகின்றார்கள்"* என்றும் - மாவை சேனாதிராசா அந்த உரையில் 'வேதனையுடன்' குறிப்பிட்டிருக்கின்றார்.

'நீண்ட காலம் தமிழர் அரசியலில் நின்று பிடித்து, நிலைத்திருந்து, வியர்வையும், இரத்தமும் சிந்திய' சுமந்திரன் இன்று தமிழர்கள் சார்பில் தீர்மானம் எடுக்கும் பிரதான சக்தியாக அரசுடன் பேசுவதை மனதில் வைத்து அவர் இப்படிக் கூறுகின்றாரோ?

இல்லை, 'அரசியலுக்கு நேற்று வந்த' சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றோர் தற்போதைய பேச்சு முயற்சி குறித்து வெளியிடும் அதிருப்தியை ஒட்டி அவர் இப்படிச் சொல்கிறாரோ? தெரியவில்லை.

மாவை அண்ணனின் அந்த உரையைப் பார்த்தால் தமிழர் தரப்பு இந்தத் தீர்வு முயற்சிக்கான கலந்துரையாடல்களில் பேரம் பேசுவதற்கான தன்டக்க வலிமையாக, ஆக, சர்வதேச அழுத்தத்தை மட்டும் வைத்துக் கொண்டு அதில் தங்கியிருப்பது வெளிப்படையாகத் தெரியும். அதை மட்டும் நம்பி வைத்துக் கொண்டு - 'ஒற்றையாட்சி நீடிப்பது பிளவையே ஏற்படுத்தும்' (அதாவது ஒற்றையாட்சி நீடித்தால் நாடு துண்டுபட்டு விடும், துண்டுபடுத்தும் காரணிகள் கைவசம் இருக்கின்றன) என்ற பாணியில், கனவுலகக் காட்சி போல, மனவுலக மருட்சி போன்று, கருத்துக் கூறி மக்களுக்கு கயிறு கொடுத்துக் கொண்டிருந்தால் தெரிந்தும், தெரியாமலும் அவற்றை அம்பலப்படுத்துவது பத்திரிகைகளின் தவிர்க்க முடியாத கடப்பாடாக இருக்கும். அதை மாவை அண்ணன் புரிந்து கொள்வது நல்லது.

# தமிழர்களின் பிரதேசங்களில் அபிவிருத்திக்கு முன்னுரிமை

### *ஜனாதிபதியின் செயலாளர் தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ.24

எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களை நாடு தழுவிய ரீதியில் நடைமுறைப்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட உள்ளன என ஊடகவியலாளர் மாநாட்டில் ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. அபேயகோன் தெரிவித்தார்.

இது 'நிலைபேறான யுகத்துக்கான மூன்றாண்டு கால அழைப்பு' வேலைத் திட்டம் என்று அழைக்கப்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

''எதிர்வரும் 2 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ள இந்த வேலைத் திட்டத்தின் தேசிய நிகழ்வு எதிர்வரும் 8 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வறுமை ஒழிப்பை நோக்காகக் கொண்டு இந்தத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.'' -என்றார்.

இதேவேளை இந்த மாநாட்டில் கலந்து கொண்ட ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் தர்ம சிறிபண்டாரநாயக்ககருத்துத் தெரிவித்தவை வருமாறு:-

"இது ஜனாதிபதியின் பதவியேற்பு ஆண்டு நிறைவை இலக்காகக் கொண்ட நிகழ்ச்சியல்ல. மாறாக மக்களின் நன்மையை நோக்காகக் கொண்டது என்று குறிப்பிட்டார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் ஜனாதி பதியாக மைத்திரிபால சிறிசேனபதவியேற்று 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதியுடன்,2 வருடங்கள் நிறைவடைகின்றன.

இந்த 'நிலையான அபிவிருத்தியுகம் மூன்றாண்டு கால ஆரம்பம்' என்ற தொனிப்பொருளில் பல்வேறான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வகள் எதிர் வரும் 4 ஆம் திகதி யாழ்ப் பாணத்திலும், 8 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்திலும், 19 ஆம் திகதி கண்டி - குண்ட்சாலையிலும், 25 ஆம் திகதி முல்லைத்தீவிலும் ஆரம்பித்து வைக்கப்படும். ''-என்றார். (எ)

# தரச்சான்றிதழ் அற்ற தலைக்கவசங்களை விற்பனை செய்வதற்கு ஜனவரிமுதல் தடை

கொழும்பு, டிசெ.24

தரச்சான்றிதழ் இல்லாத தலைக்கவசங்களுக்கு ஜனவரி முதலாம் திகதி முதல் தடை விதிக்கப்படவுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் தலைவர் வைத்தியர் சிசிர கோதாகொட இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

''தரச் சான்றிதழ் பெற்ற தலைக்கவசங்கள் தயாரிப்பதைப் பதிவு செய்வதற்காக எதிர்வரும் 31 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

அதன்படி எதிர்வரும் முதலாம் திகதி முதல் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையால் தரச்சான்றிதழ் அற்ற தலைக்கவசங்களை சந்தைக்கு விநியோகிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இலங்கையில் தலைக் கவசங்களைத் தயாரிக்கும் 6 நிறுவனங்களில் 2 நிறுவனங்கள் தரச்சான்றிதழைப் பெற்றுக் கொண்டுள்ளன.

இந்த மாத இறுதியில் ஏனைய நிறுவனங்களுக்கும் தரச்சான்றிதழ்களை வழங்கும் நடவடிக்கை நிறைவடையும்.

ஒவ்வோர் ஆண்டும் மோட்டார் சைக்கிள் விபத்துக்களால் உயிரிழக்கும் மற்றும் காயமடையும் வீதம் அதிகரிப்பதால், அதனைத் தடுக்கும் விதமாக புதிய தரமுறை ஒன்றை அறிமுகம் செய்யும் தேவை ஏற்பட்டுள்ளது.''- என்றார். (எ)

# சர்வதேச சந்தையில் இறப்பர் விலை உயர்வு

கொழும்பு, டிசெ.24

சர்வதேச சந்தையில் இறப்பர் விலைதற்போது அதிகரித்துள்ளது.

இதுதொடர்பாக இறப்பர் அபிவிருத்தித்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆர்.பி.பிறேமதாச தெரிவித்தவை வருமாறு:-

''அண்மைக்காலத்தில் ஒரு கிலோ இறப்பரின் விலை 280 ரூபா வரை உயர்ந்துள்ளது. எதிர்காலத்தில் இது மேலும் அதிகரிக்கக் கூடிய சாத்தியம் உள்ளது.

ஓர் ஏக்கருக்கு ஒன்றரை இலட்சம் ரூபாவும், மீள் நடுகைக்கு ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவும் நிவாரணமாக வழங்கப்படுகிறது.

இறப்பர்செய்கைக்காக பயன்படுத்தப் படும் மழை நீர் கவசத்துக்காகச் செலவாகும் தொகையில் பாதியை அரசாங்கம் நிவாரணமாக வழங்குகிறது. இறப்பர் செய்கையுடனான ஊடு பயிர்களுக்கும் நிவாரணம் வழங்கப்படுகிறது.

இந்தச் சலுகைகளைக் கருத்தில் கொண்டு, தொடர்ந்தும் இறப்பர் செய்கையில் இணைந்திருக்குமாறு கோருகிறேன்.

அண்மைய கால நிலவரத்தின் கீழ் உலகச் சந்தையில் ஒரு கிலோ இறப்பரின் விலை 4 டொலருக்கும், 5 டொலருக்கும் இடைப்பட்ட அளவில் காணப்படுவதாக சந்தை வட்டாரங்கள் கூறுகின்றன. இத்தகைய பின் னணியில் இறப்பர் செய்கைக்கான நிவாரணங்கள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.''- என்றார். (எ)

# உரிய தீர்வு கிடைக்காவிட்டால் நாடளாவிய ரீதியில் போராட்டம்

### *சுகாதாரப் போக்குவரத்து ஊழியர்கள் எச்சரிக்கை*

கொழும்பு, டிசெ.24

தமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கிடைக்காவிடில் நாடளாவியரீதியிலானபோராட்டம் முன்னெடுக்கப்படும் என்று மாகாண சுகாதார போக்குவரத்துச் சேவை ஊழியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பான கலந்துரையாடல்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சுகாதாரப் போக்குவரத்துச் சேவை ஊழியர்கள் சங்கத்தின் செயலாளர் ஆர்.பி. வசந்தகுமார தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

"தமது சேவையை திணைக்களத்துக்கு உள்வாங்கப்பட்ட சேவையாக மாற்றுமாறு கோரி வட மத்திய மாகாண சுகாதார போக்குவரத்து ஊழியர்கள் கடந்த புதன்கிழமை போராட்டம் ஒன்றை ஆரம்பித்திருந்தனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது.

தமது கோரிக்கைகளுக்கு அதிகாரிகள் உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்காவிட்டால் நாடளாவிய ரீதியில் போராட்டம் முன்னெடுக்கப்படும்.''-என்றார். இந்தப் போராட்டத்துக்கு வடமத்திய மாகாணத்தின் சிற்றூழியர்களும் தமது ஆதரவை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## நாளை

25.12.2016
ஞாயிற்றுக்கிழமை
திதி : துவாதசி [நாள் முழுவதும்]
நட்சத்திரம்: விசாகம்
பின்னிரவு 5.18 வரை
சுபநேரம் : 9.26 – 10.56
இராகுகாலம் : 4.56 – 6.26

# நீதி அமைச்சரின் செயற்பாடுகள் அச்ச உணர்வை ஏற்படுத்துகின்றன

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கண்டன அறிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.24

ஓர் அரசமைப்பு மாற்றம் தொடர்பாக பேச்சுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சூழலில், நீதி அமைச்சரின் கருத்துக்களும் செயற்பாடுகளும் ஏனைய தேசிய இனங்கள் மத்தியில் நம்பிக்கையீனங்களையும் அச்சவுணர்வுகளையுமே உருவாக்குகின்றன.

அரசு நல்லிணக்கம் தொடர்பாக சர்வதேசமெங்கும் பிரச்சாரம் செய்துவரும் ஒரு சூழ்நிலையில் 2017 ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி முதல் 14 ஆம் திகதிவரையில் தேசிய நல்லிணக்க வாரத்தைப் பிரகடனப்படுத்தியுள்ள சூழலில் நீதிஅமைச்சரின்செயற்பாடுகள் கேலிக்குரியனவாக உள்ளன.

-இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் கடந்த புதன்கிழமை நீதியமைச்சர் ஆற்றிய உரை தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு பொதுபலசேனாவின் செயலாளர் ஞானசார தேரருடன் விஜயம் செய்த நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சருமான விஜயதாச ராஜபக்ஷ, அங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் ஒரு விசேட சந்திப்பை நடத்தினார்.

அந்த விசேட சந்திப்பில் மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டியே சுமணரத்ன தேரரின் அநாகரிகமான நடவடிக்கைகள் தொடர்பாகவும் அவருடைய நடவடிக்கைகளால் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் தொடர்பாகவும் அமைச்சருக்கு தெரியப்படுத்தப்பட்டன. அவ்வாறான நட



வடிக்கைகளில் தேரர் ஈடுபடக் கூடாது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

அவற்றை ஏற்றுக்கொண்ட அமைச்சர் பின்னர், பொதுபலசேனா செயலாளரையும் மட்டக்களப்பு விகாராதிபதியையும் சந்தித்து கலந்துரையாடினார். பின்னர் ஊடகவியலாளருடன் பேசினார்.

ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்:-

"மட்டக்களப்பில் சிங்கள மக்கள் குறித்து குரல் கொடுப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இல்லை. மட்டக்களப்பு விகாராதிபதி சுமணரத்ன தேரர் அந்த மக்களுக்காகக் குரல் கொடுக்கிறார். ஆனால் இங்குள்ளோர் பௌத்த பிக்குமார்கள் இனவாத, மதவாத ரீதியில் செயற்படுகின்றனர். அதனால் பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்று கூறுகின்றனர். நாட்டில் ஒருவித மாயத் தோற்றத்தை ஏற்படுத்துகிறார்கள்.'' என்று கூறினார்.

கடந்த அரசின் காலத்தில் பொதுபலசேனா எவ்வாறு செயற்பட்டது என்பதும் இப்பொழுதும் தொடர்ச்சியாக எவ்வாறு செயற்பட்டு வருகிறது என்பதும் அமைச்சருக்குத் தெரியாத விடயம் அல்ல. முழுக்க முழுக்க இனவாதக் கண்ணோட்டத்துடன் ஏனைய மதங்களுக்கு எதிராகத் திட்டமிட்ட வகையில் செயற்பட்டு வருவதை இன்றும்கூட காணக்கூடியதாக உள்ளது.

அதேபோல்தான் மட்டக்களப்புவிகாராதிபதி சுமணரத்ன தேரரும்கூட சிங்களத்தில் இருக்கக்கூடிய மிகவும் அநாகரிக வார்த்தைகளைத் தெரிவு செய்து தமிழ் மக்களையும் அரச அதிகாரிகளையும் திட்டித் தீர்த்துள்ளார்.

இவர்களை அமைச்சர், சிங்கள மக்களின் குரலாக ஏற்றுக் கொள்வதும் அவர்கள் சிங்கள மக்களின் பிரதிநிதிகள் என்று சான்றிதழ் கொடுப்பதும் பௌத்த தீவிரவாதத்துடன் இணங்கிப்போகிறார் என்பதையே காட்டுகிறது.

ஓர் அரசமைப்பு மாற்றம் தொடர்பாக பேச்சுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சூழலில், நீதியமைச்சரின் கருத்துக்களும் செயற்பாடுகளும் ஏனைய தேசிய இனங்கள் மத்தியில் நம்பிக்கையீனங்களையும் அச்சவுணர்வுகளையுமே உருவாக்குகின்றன. இதனை எமது கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

அமைச்சர்கள் இவ்வாறாக பக்கச்சார்பாக நடந்துகொள்வது நாட்டில் நல்லிணக்கத்தையும் ஒருமைப்பாட்டையும் கட்டியெழுப்புவதற்கு வழிசமைக்காது.- என்றுள்ளது.

(ஐ-100)

## மண்ணெண்ணெய் வாங்கச் சென்றவர் விபத்தில் உயிரிழப்பு



யாழ்ப்பாணம், டிசெ.24

விளக்கு கொளுத்துதற்கு மண்ணெண்ணெய் வாங்கச் சென்ற ஒருவர் மோட்டார் சைக்கிள் மோதிப் படுகாயமடைந்த நிலையில் நேற்றுமுன்தினம் வைத்தியசாலையில் உயிரிழந்தார். விபத்துச் சம்பவம் கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்றது.

விபத்துக்குள்ளான நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு அங்கு சிகிச்சை பலனளிக்காமையால் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவத்தில் வீ.ரீ.எஸ். லேன் உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த சரவணமூர்த்தி ஸ்ரீதரன் (வயது - 53) என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

மரண விசாரணையை வைத்தியசாலையின் விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற் கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ)




இலங்கை வங்கியின் கொடிகாமம் கிளையில் ஏ.ரி.எம். இயந்திரம் மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வங்கியின் முகாமையாளர் திருமதி சுஜாத்தாவின் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கை வங்கியின் வடமாகாண உதவி முகாமையாளர் ஜே.எம்.பிரபாகரன் கலந்து கொண்டு ஏ.ரி.எம் இயந்திரத்தை திறந்து வைத்தார்.நிகழ்வில் இலங்கை வங்கியின் செயற்பாட்டு முகாமையாளர் ஜீ.சகாதேவன், பிரதேச வங்கி முகாமையாளர்கள், வர்த்தகர்கள், வாடிக்கையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ-23)

## காரைநகர் பிரதேச கலாசார பெருவிழா

காரைநகர், டிசெ.24

காரைநகர் பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் கலாசார அதிகார சபையும் இணைந்து நடத்தும் கலாசாரப்பெருவிழா எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு காரைநகர் பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் பிரதேச செயலாளரும் கலாசார அதிகார சபை மற்றும் கலாசாரப் பேரவைத் தலைவருமாகிய திருமதி தேவநந்தினி பாபு தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணமும் சிறப்பு விருந்தினராகத் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவமும் கலந்து கொள்வர். நிகழ்வில் வரவேற்புரையைக் காரைநகர் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.அகிலன் வழங்குவார்.

கலை நிகழ்வுகளாக காரைநகர் சக்தி மேம்பாட்டு நிலையத்தினரின் நடனம், வீணா இசை, காவடி நடனம், கிழவன் காடு கலாமன்றத்தினரின் இசைக் கச்சேரி, குழுப்பாடல், நாட்டியாஞ்சலி என்பன இடம்பெறும். காரைநகர் பிரதேசத்தைச் சேர்ந்த பல்துறை ஆற்றல் சார்ந்து பணியாற்றியோருக்கான கலைஞானச்சுடர் விருது வழங்கும் நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (ஐ-54)

# சுழிபுரத்தில் தொடரும் கசிப்பு வியாபாரம்: இளவாலை பொலிஸாரால் மூவர் கைது!

## கட்டுப்படுத்த உதவுமாறு மக்கள் கோரிக்கை

அச்சுவேலி டிசெ.24

சுழிபுரத்தில் இருந்து கசிப்புக் கொண்டு சென்ற மூவர் இளவாலை பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டனர். இந்தச் சம்பவம் புதன்கிழமை மாலை இடம்பெற்றதாக இளவாலை பொலிஸார் தெரிவித்தனர்.

சுழிபுரம் குடாக்கனை பிரதேசத்தில் உள்ள ஒருசில வீடுகளில் கடந்த பல வருடங்களாக கசிப்பு காய்ச்சுதல் மற்றும் விற்பனை என்பன இடம்பெற்று வருகின்றன. வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இந்தச் பிரதேசத்தில் ஒருசில நபர்கள் செய்யும் இந்த மோசமான செயலை அந்தப் பகுதி பொலிஸாரால் கட்டுப்படுத்த முடியவில்லை என்றும்-

பிற இடங்களைச் சேர்ந்தவர்கள் மேற்படி பகுதிக்குச் சென்று கசிப்பு அருந்துவது, அங்கிருந்து வாங்கிச் செல்வது போன்ற செயற்பாடுகள் அன்றாடம் நடைபெற்று வருகின்றன என்றும் பிரதேச மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இந்த நிலையில், புதனன்று சுழிபுரத்தில் இருந்து கசிப்புக் கொண்டு சென்ற மூவரைத் திருவடிநிலைக்கு சமீபமாக வைத்து இளவாலை பொலிஸார் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து ஒவ்வொன்றும் 180 மில்லிலீற்றர் அளவுடைய மூன்று போத்தல்கள் கசிப்பு மீட்கப்பட்டன என இளவாலை பொலிஸார் தெரிவித்தனர். (ம-9)

காலைக்கதிர் Kalaikkathir



# தமிழர்கள்

# மட்டக்களப்பையும் இழக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை...

இரா.துரைரத்தினம்

நீதிமன்றத்தின் உத்தரவை இலங்கையின் நீதியமைச்சரே மீறிய சம்பவம் கடந்த புதன்கிழமை மட்டக்களப்பில் அரங்கேறியுள்ளது.

மட்டக்களப்பு நீதிமன்றம் இந்த மாதத்தில் இரு உத்தரவுகளை பிறப்பித்திருந்தது.

ஒன்று செங்கலடி இலுப்படிச் சேனையில் உள்ள சைவ ஆலய பூசகர் ஒருவருக்குச் சொந்தமான உறுதிக் காணிக்குள் மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்னதேரர் செல்லக் கூடாது. இரண்டாவது காணியை அபகரிக்கும் நோக்கில் அங்கு அத்துமீறக் கூடாது என்பவையாகும். இன்னொரு தீர்ப்பில் குழப்பங்களை ஏற்படுத்தும் நோக்கில் பொதுபலசேனா பொதுச் செயலாளர் ஞானசாரதேரர் மட்டக்களப்பு மாவட்டத்துக்குள் பிரவேசிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை மட்டக்களப்பில் நடந்த சம்பவங்களை பார்க்கும் போது இந்த இரண்டு தீர்ப்புக்களையும் இலங்கையின் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவே மீறிவிட்டார் என்றே தோன்றுகிறது.

பொதுவாகவே நீதியமைச்சராக இருப்பவர்கள் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவர்களையோ அல்லது குற்றம் சுமத்தப்பட்டவர்களையோ சந்திப்பதில்லை என்பது எழுதாத சட்டம்.

மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி, பட்டிப்பளை பிரதேச செயலகத்துக்குள் அத்துமீறிப் பிரவேசித்து அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தார் என்றும் ஊழியர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்துத் தாக்க முற்பட்டார் என்றும் குற்றம் சுமத்தப்பட்டு, நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார். அது தவிர நீதிமன்ற உத்தரவை மீறி ஆள்களை திரட்டி ஆர்ப்பாட்டம் செய்தார் என குற்றம் சாட்டப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார்.

நீதிமன்றத்திலும் பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக்கும் ஒருவரைத் தேடிச் சென்று அவரின் காலில் விழுந்து வணங்கி அவருக்குத் தானம் வழங்கியிருக்கிறார் இலங்கையின் நீதியமைச்சர்.

ஞானசார தேரரையும் இன்னும் சில பிக்குகளையும் மட்டக்களப்புக்கு அழைத்து வந்தது மட்டுமன்றி தனியார் காணிக்குள் பிரவேசிக்க கூடாது என்று நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்திருந்த காணிக்குள் சென்று காணியை அபகரிக்கும் நோக்கில் பார்வையிடுவதற்கும் அனுமதித்திருக்கிறார்.

மட்டக்களப்புக்கு சென்ற நீதியமைச்சர் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில், வடக்கு, கிழக்கில் சிங்கள மக்கள் சிறுபான்மையினராக வாழ்கிறார்கள். இங்கு சிங்கள மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான குரலாக திகழும் மட்டக்களப்பு மங்களராமய விகாரை பிக்கு அம்பிட்டிய சுமணரத்ன தேரரின் குரலை பலப்படுத்த வேண்டும் தெரிவித்திருக்கிறார்.

அதன் பின் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடந்த கூட்டத்திலும் மூன்று விடயங்களை நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்.

★ செங்கலடி பதுளை வீதியில் உள்ள இலுப்படிச்சேனையில் காணி ஒன்றில் புத்தமத சின்னங்கள் காணப்படுகின்றன. அவை அனுராதபுரம் ரஜமகாவிகாரைக்குச் சொந்தமானவை. எனவே அந்தக் காணியை புதைபொருள் ஆராய்ச்சித் திணைக்களம் கையேற்று அகழ்வாராய்ச்சி செய்ய வேண்டும். அந்த இடத்தில் புத்த விகாரை ஒன்று அமைக்க வேண்டும்.

★ மட்டக்களப்பு மாவட்ட எல்லைக் கிராமமான கெவிளியாமடுவில் சிங்களவர்கள் சேனைப் பயிர் செய்வதற்குப் பட்டிப்பளை பிரதேச செயலக அதிகாரிகள் தடையாக இருக்கிறார்கள். அவர்களை அந்த கெவிளியாமடுவில் குடியேற்றி அவர்களுக்கான உறுதிப் பத்திரங்களை வழங்க வேண்டும்.

★ மட்டக்களப்பு மாவட்டத்தில் 28 ஆயிரம் சிங்கள மக்கள் முன்னர் வாழ்ந்தார்கள். அவர்களை இங்கு மீளக்குடியேற்ற வேண்டும். மட்டக்களப்பில் சிங்கள மக்களுக்கு நாடாளுமன்றத்திலோ மாகாணசபையிலோ பிரதிநிதித்துவம் கிடையாது. எனவே, அவர்களுக்கு அரசியல் பிரதிநிதித்துவம் இல்லாததால் அவர்களின் பிரதிநிதியாக செயற்படும் அம்பிட்டிய சுமணரத்ன தேரரின் கோரிக்கைகளை மாவட்டத்தில் உள்ள அதிகாரிகள் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். மாவட்ட செயலகத்திலும் பிரதேச செயலகங்களிலும் சிங்கள மக்களின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றி கொடுப்பதற்கு சிங்கள அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும்.



இந்த மூன்று கோரிக்கைகளையும் நிறைவேற்றவே தான் மட்டக்களப்புக்கு வந்தார் என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்.

மட்டக்களப்பில் இனமோதல்களை ஏற்படுத்தி வரும் மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரரை மாற்றி விட்டு இனநல்லிணக்கத்தை ஏற்படுத்தக் கூடிய பிக்கு ஒருவரை நியமிக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் மட்டக்களப்பு மக்கள் சார்பில் கோரிக்கை விடுத்த போது அதற்கு நீதியமைச்சர் மறுப்பு தெரிவித்திருக்கிறார்.

அம்பிட்டிய சுமணரத்ன தேரர் ஒரு இனவாதி அல்லர், அவர் அனைத்து இனங்களுக்காகவும் குரல் கொடுத்து வருகிறார் என்றும் அமைச்சர் விஜயதாஸ அடாவடி பிக்கு என பெயர் பெற்ற சுமணரத்ன தேரருக்கு நற்சான்றிதழ் வழங்கியிருக்கிறார்.

முதலாவது கோரிக்கை இலுப்படிச் சேனையில் தனியார் காணி ஒன்றில் புத்த விகாரை அமைப்பது. இலுப்படி சேனை காலம் காலமாக தமிழ் மக்கள் வாழும் கிராமமாகும். செங்கலடி நகரிலிருந்து நான்கு கிலோ மீற்றர் மேற்காக சென்றால் படுவான்கரையில் அமைந்திருக்கும் கிராமமாகும். அந்த கிராமத்தில் மட்டுமல்ல அயல்கிராமங்களில் கூட ஒரு சிங்களவர் கூட வாழ்ந்ததாக வரலாறு இல்லை. அங்குள்ள தனியார் காணி ஒன்றில் அரசமரம் இருந்ததை காரணம் காட்டி அங்கு புத்த மத சின்னங்கள் இருப்பதாக கூறி அக்காணியை ஆக்கிரமிக்க நினைப்பது தமிழ் பிரதேசங்களை சிங்கள மயமாக்கும் திட்டமிட்ட நடவடிக்கையாகும். அந்த காணி அரச காணி அல்ல. தமிழர் ஒருவருக்கு சொந்தமான உறுதிக்காணியாகும்.

இந்த இடத்தை பொதுபலசேனா பொதுச்செயலாளர் ஞானசார தேரர் சென்று பார்வையிட்டிருக்கிறார். அந்த இடத்தில் புதைபொருள் ஆராய்ச்சி நடத்தப்படும் என்றும் புத்தவிகாரை அமைக்கப்படும் என்றும் பொதுபல சேனா செயலாளர் ஞானசார தேரர் கூறிச்சென்றிருக்கிறார்.

இரண்டாவது கோரிக்கை கெவிளியாமடு சிங்கள குடியேற்றம் பற்றியது. மட்டக்களப்பு கெவிளியாமடுவில் கால்நடைகளுக்கான மேச்சல் தரைக்கென ஒதுக்கப்பட்ட காணிகளில் அண்மைக்காலத்தில் சிங்களவர்கள் குடியேறி வருகின்றனர். இந்த திட்டமிட்ட குடியேற்றத்தை முன்னின்று நடத்தி வருபவர் அம்பிட்டிய சுமண ரத்ன தேரராவார். குடியேற்றப்பட்ட சிங்கள குடும்பங்களுக்கு காணி உத்தரவு பத்திரங்களை வழங்குமாறே பட்டிப்பளை பிரதேச செயலக அதிகாரிகளுடன் மோதல்களில் ஈடுபட்டு வருகிறார்.

கெவிளியாமடு காணிகள் மேய்ச்சல் தரைக்கு ஒதுக்கப்பட்ட நிலம் என அரசவர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த நிலங்களை குடியிருப்புக்களுக்கு வழங்க முடியாது என்று பிரதேச செயலக அதிகாரிகள் தெரிவித்து வருகின்றனர். இப்பொழுது அந்த நிலங்களைத் தங்களுக்குச் சேனை பயிர் செய்கைக்கு வழங்குமாறும் அதற்கான உத்தரவு பத்திரங்களை வழங்குமாறும் கோரி வருகின்றனர். அந்த இடங்களில் அவர்கள் இப்போது குடியேற்றப்பட்டிருக்கின்றனர். இது சட்டவிரோத குடியேற்றம் என பிரதேச மட்ட அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மூன்றாவது கோரிக்கை மட்டக்களப்பு மாவட்டத்தில் 28 ஆயிரம் சிங்கள மக்கள் குடியேற்றப்பட வேண்டும், சிங்கள மக்களுக்கு அரசியல் பிரதிநிதித்துவம் வேண்டும், மாவட்ட செயலகத்திலும் பிரதேச செயலகத்திலும் சிங்கள அதிகாரிகள் நியமிக்க வேண்டும் என்பதாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 28ஆயிரம் சிங்கள மக்கள் வாழ்ந்தார்கள் என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவும், மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரரும் கூறிவருவது முற்றிலும் தவறான தகவலாகும்.

இலங்கையின் தேசிய புள்ளிவிவர திணைக்களத்தின் அறிக்கையிலும் மட்டக்களப்பு மாவட்ட செயலக புள்ளிவிவர அறிக்கையிலும் 28ஆயிரம் சிங்கள மக்கள் வாழ்ந்தனர் என்று எந்த ஓர் இடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

1963ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்ட போது மட்டக்களப்பின் தென்பகுதி அம்பாறையுடன் இணைக்கப்பட்டது. அதன் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 6715 பேர் மட்டுமே வாழ்ந்தனர் என்று புள்ளிவிவரத் திணைக்கள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1971ஆம் ஆண்டின் பின் மகாவலி மற்றும் மகாஓயா திட்டத்தின் கீழ் எல்லைக்கிராமங்களில் சிங்கள குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன் காரணமாக 1981ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் 11255 சிங்களவர்கள் வாழ்ந்தனர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இதன் பின்னர் 1983 க்குப் பின்னர் மட்டக்களப்பின் சில பகுதிகளிலிருந்து சிங்களவர்கள் வெளியேறியிருந்தார்கள். அதன் பின்னர் 2006 ஆம் ஆண்டின் பின் மட்டக்களப்பில் சிங்களவர்கள் குடியேறி வருகின்றனர். 2006 இல் மாவட்ட செயலகம் வெளியிட்ட அறிக்கையில் 2397 சிங்களவர்க்ள் மட்டக்களப்பில் வாழ்ந்தனர் என்றும் 2012 ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையில் 6127 சிங்களவர்கள் வாழ்வதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில் இதுவரை 15 ஆயிரத் துக்கு மேற்பட்ட சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர் என்று உத்தியோகப்பற்றற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே எந்தக்காலத்திலும் இலங்கை புள்ளிவிவர திணைக்களமும் மட்டக்களப்பு மாவட்ட செயலகமும் வெளியிட்ட அறிக்கைகளில் 28ஆயிரம் சிங்களவர்கள் மட்டக்களப்பில் வாழ்ந்ததாக தகவல் இல்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது 73வீத தமிழர்களும் 25வீத முஸ்லிம்களும் ஒரு வீத சிங்களவர்களும் வாழ்கிறார்கள். 28ஆயிரம் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டால் 8 வீதமாக சிங்களவர்களின் விகிதாசாரம் அதிகரிக்கும். தமிழ் முஸ்லிம்களின் விகிதாசாரம் வீழ்ச்சியடையும். 28ஆயிரம் சிங்களவர்கள் மட்டக்களப்பில் குடியேற்றப்பட்டால் கிழக்கு மாகாணத்தில் சிங்களவர்களே பெரும்பான்மையாக இருப்பார்கள்.

ஏற்கனவே சிங்கள குடியேற்றங்களால் திருகோணமலை மாவட்டமும் அம்பாறை மாவட்டமும் தமிழர்களிடமிருந்து பறிபோய் விட்டன. கிழக்கு மாகாணத்தில் எஞ்சியிருப்பது மட்டக்களப்பு மாவட்டம்தான். இந்த மாவட்டத்திலும் தமிழர்களின் சனத்தொகை விகிதத்தைக் குறைத்துத் தமிழர்களை கிழக்கு மாகாணத்தில் சிறுபான்மையாக்கும் திட்டத்தை அரச உதவியுடன் புத்த பிக்குகள் செய்து வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு புறத்தில் அமைச்சர்களான ஹிஸ்புல்லாவும் அமீர்அலியும் தமது அதிகார பலத்தை பாவித்து பிரதேச செயலாளர்களை மிரட்டி தமிழ் பிரதேசங்களில் உள்ள காணிகளை அபகரித்து வருகின்றனர். மறுபுறத்தில் அரசாங்கத்தின் அதிகார பலத்துடன் பொதுபல சேனாவின் உதவியுடன் அம்பிட்டிய சுமணரத்ன தேரர் தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களைச் செய்து வருகிறார். இவ்வாறான நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்களவர்களின் எண்ணிக்கை 28ஆயிரம் அல்ல அதற்கு மேலாக ஒரு லட்சமாக அதிகரித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ★

# அம்பாந்தோட்டை துறைமுக உடன்பாடு குறித்த முழு விவரங்களையும் அம்பலப்படுத்த வேண்டும்!

## ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை

கொழும்பு, டிசெ.24

அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பாக சீனாவின் மேர்ச்சன்ட் ஹோல்டிங்ஸ் நிறுவனத்துடன் இலங்கை அரசு செய்துள்ள புரிந்துணர்வு உடன்பாடு பற்றிய முழு தகவல்களும் வெளிப் படுத்தப்பட வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய கோரியுள்ளது.

கொழும்பில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, ஜாதிக ஹெல உறுமயவின் மேல் மாகாணசபை உறுப்பினர் நிசாந்த சிறிவர்ணசிங்க இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சீனாவுக்கு 99 ஆண்டு குத்தகைக்கு வழங்கப்படும் அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான உடன்பாட்டின் விதிகள் பகிரங்கப்படுத்தப் படவில்லை.

ஒலுவில், காலி போன்ற துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கு இந்த உடன்பாடு தடையாக இருக்குமா என்பது பற்றி அரசாங்கம் விளக்கமளிக்க வேண்டும்.

அதைவிட, 100 மில்லியன் டொலர் தரகுப் பணம் கைமாறியிருப்பதாகவும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

அம்பாந்தோட்டையில் சீன நிறுவனங்களுக்கு வழங்கப் படவுள்ளநிலம் தொடர்பாகவும் முரண்பாடான அறிக்கைகள் வெளியாகின்றன.

மிகப்பெரிய நாடான இந்தியாவில் உள்ள மிகப் பெரிய கைத்தொழில் வலயமான, மும்பை கைத்தொழில் வலயம் கூட, 7 ஆயிரம் ஏக்கரில்தான் அமைந்துள்ளது. இவ்வாறான நிலையில், எதற்காக அம்பாந்தோட்டையில் கைத்தொழில் வலயத்துக்கு 15 ஆயிரம் ஏக்கர் ஒதுக்கப்படுகிறது என்று தெரியவில்லை.

இலங்கையில் உள்ள 14 கைத்தொழில் வலயங்களும்,




3 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் தான் அமைந்துள்ளன.

அரசியலுக்கு மட்டுமே நல்லாட்சி அல்ல. பொருளாதாரத் துறையிலும் நல்லாட்சி இருக்க வேண்டும். எந்தவொரு வர்த்தக அல்லது வேறு உடன்பாட்டையும் செய்துகொள்ளும் போது, வெளிப்படைத்தன்மை முக்கியம். பெரும் ஊழல் காரணமாகவே ராஜபக்ஷ அரசாங்கத்தை மக்கள் வீட்டுக்கு அனுப்பினர்.

அம்பாந்தோட்டைத் துறைமுக உடன்பாடு தொடர்பான எல்லா விடயங்களையும் பகிரங்கப்படுத்தி தெளிவுபடுத்தாவிடின், தற்போதைய ஆட்சியாளர்கள் மீதும் அதே பழி விழுந்துவிடும்.

இதேவேளை, அரசமைப்பில் பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமையை இல்லாதொழிப்பதற்கோ, பலவீனப்படுத்துவதற்கோ அல்லது அந்த சரத்துக்களைக் குறைப்பதற்கோ நாம் ஒருபோதும் இணங்க மாட்டோம்.

பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமையை மேலும் பலப்படுத்த வேண்டும். புதிய அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு வழங்கப் பட்டுள்ள முன்னுரிமைக்கோ, ஒற்றையாட்சி என்ற அரச கட்டமைப்பிலேயே எந்தவொரு மாற்றமும் ஏற்படுத்தப்பட மாட்டாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தொடர்ச்சியாக கூறி வருகின்றனர்.

ஆனால், அவை முற்றிலும் பசப்பு வார்த்தைகள் என்றும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.



கொழும்பு நகரில் நத்தார் வியாபாரம் களைகட்டியுள்ளது. குறிப்பாகநீர்கொழும்பில் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் பொருள்களை கொள்வனவு செய்வதில் ஈடுபட்டுள்ளனர்.

வீதியோரங்களில் தற்காலிகக் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இக் கடைகள் பலவற்றில் மலிவு விற்பனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், நீர்கொழும்பில் அமைக்கப்பட்ட தற்காலிகக் கடை ஒன்றில் மக்கள் நந்தார் பொருள்கள் கொள்வனவில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

# ஊழல் குறைவடைந்துள்ளது துறைமுக அதிகார சபையில்!

கொழும்பு, டிசெ.24

இலங்கை துறைமுக அதிகார சபையின் ஊழல் மோசடிகள் 90 வீதத்தால் குறைவடைந்துள்ளன என்று துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை பிரதி அமைச்சர் நிசாந்த முத்துஹெட்டிகம தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற கடல்சார் கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பிரதி அமைச்சர் நிசாந்த முத்துஹெட்டிகம இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போதைய அமைச்சர் துறைமுகத்தினுள் நிகழும் திருட்டுச் செயல்கள் ஊழல் மோசடிகளை 90 வீதத்தினால் குறைத்துள்ளார்.

அவர் திருட்டுச் செயல்களில் ஈடுபடுவதில்லை, நானும் திருட்டு செயல்களில்



ஈடுபடமாட்டேன்.

துறைமுகம் அரசியல்வாதிகளின் திருட்டு செயல்களின் சொர்க்கபுரியாக காணப்பட்ட யுகத்தை மாற்றியமைத்துள்ளோம்.

எங்களுடைய அமைச்சுக்கு வருகை தருபவர்களிடமிருந்து ரூபாகளிலோ அல்லது டொலர்களிலோ பணத்தை பெற்றுக்கொள்வதற்கு நாம் தயாரில்லை. அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டே நாம் செயற்படுகின்றோம் என்றும் தெரிவித்துள்ளார்.

# மேல்மாகாணத்தில் ஐயாயிரம் வீடுகள்

## *மேல் மாகாணசபை முதலமைச்சர் இசுற தேவப்பிரிய*

கொழும்பு, டிசெ.24

மேல்மாகாணத்தில் ஐயாயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளன என்று மேல் மாகாண சபை முதலமைச்சர் இசுற தேவப்பிரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அடுத்த ஆண்டு மேல் மாகாணத்தில் ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்படும். இதற்கு பொருத்தமான காணிகளை தெரிவு செய்யும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, கொழும்பு நகரில் வாகன நெரிசலுக்கு



தீர்வு காண்பதற்காக சர்வதேச அங்கீகாரம் பெற்ற போக்குவரத்து முறை மேற்கொள்ளப் படும்.

அத்துடன், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு இலவச பாதணிகளை வழங்கும் திட்டத்தையும் மேல் மாகாணசபை அமுலாக்கவுள்ளது.

இதன் மூலம் ஒரு லட்சத்து 25 ஆயிரம் பிள்ளைகள் பயன் பெறவுள்ளனர்.

உள்ளூராட்சித் தேர்தல் எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தல் நிச்சயமாக தொகுதிவாரி முறையின் கீழே இடம்பெறும்.

தேர்தலுக்கு தயாராகுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.





பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அவரது பாரியாரும் திருப்பதி வெங்கடேஸ்வர ஆலயத்தில் நேற்று முன்தினம் வழிபாட்டில் ஈடுபட்டனர். அவர்களைத் தேவஸ்தான அறங்காவலர் குழுத் தலைவர் சதலவாடா கிருஷ்ணமூர்த்தி வரவேற்றார்.

# வடக்கு, கிழக்கில் வேலையில்லா பிரச்சினை; தீர்ப்பதற்கு அரசின் நடவடிக்கை அவசியம்

## அமைச்சர் முன்னிலையில் சிவசக்தி ஆனந்தன் எம்.பி. கோரிக்கை



வவுனியா, டிசெ.24

போரால் பாதிக்கப்பட்ட பிரதேசம் என்ற அடிப்படையில் வடக்கு, கிழக்கில் வேலையில்லா பிரச்சினையைத் தீர்க்க அரசு முன்வரவேண்டும்.

-இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் உள்நாட்டலுவல்கள் அமைச்சருக்கும், அரச உத்தியோகத்தர்களுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரை வேலையில்லாப் பிரச்சினை என்பது பெரிய பிரச்சினையாக உள்ளது. போரால் பாதிக்கப்பட்ட பிரதேசம் என்ற அடிப்படையில் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டும்.

எமது மாவட்டத்தில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றைத் தீர்த்து அபிவிருத்தி நோக்கிப் பல முன்னேற்றங்களைச் செய்ய வேண்டியுள்ளது. அது பற்றி நாங்கள் நாடாளுமன்றத்திலும் பல தடவை கூறியிருக்கின்றோம். குறிப்பாக வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரை வேலையில்லாப் பிரச்சினை என்பது பெரியதொரு பிரச்சினை. இன்று நாடு முழுவதும் உள்ள ஒரு பொதுவான பிரச்சினையாக இது இருந்தாலும், வடக்கு மாகாணம் போரால் பாதிக்கப்பட்ட மாகாணம் என்ற அடிப்படையில் இங்குள்ள இளைஞர், யுவதிகளுக்கு முடிந்தளவுக்கு வேலை வாய்ப்பை வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என உள்நாட்டலுவல்கள் அமைச்சைக் கேட்டுக் கொள்கின்றேன்.

நாங்கள் ஜனாதிபதி மற்றும் பிரதமரை அண்மையில் சந்தித்தோம். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெறும் அபிவிருத்திப் பணிகளில் மத்திய அரசும், நாங்களும் இணைந்து அபிவிருத்தி வேலைகளைச் செய்ய வேண்டும் என்று இதன்போது பிரதமர் ஒத்துழைப்புத் தெரிவித்தார்.

இந்த உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்கள் ஒரு சிரேஷ்ட அமைச்சர் என்ற ரீதியில் அவரும் அந்தக் கூட்டத்தில் இருந்தார்.

எனவே, இந்த விடயத்தில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.-என்றார். (ஐ-100)

## கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் குறைபாடுகளை தீர்க்க நடவடிக்கை

### வஜிர அபேயவர்த்தன உறுதியளிப்பு


கிளிநொச்சி,டிசெ.24

கிளிநொச்சி மாவட்டச்செயலகத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேயவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலகதுக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் மாவட்ட செயலாளர் மற்றும் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். பூநகரி பிரதேச செயலகத்தின் புதிய கட்டடத்தை திறந்து வைத்த பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பின்னர் மாவட்ட செயலகத்துக்கு விஜயம் செய்து அங்கு உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடலில் ஈடுப்பட்டார். (ஐ-70)

## இப்படியும் ஓர் உண்ணாவிரதம்!



வவுனியா, டிசெ.24

தனது மனைவியையும் மூன்று பிள்ளைகளையும் தன்னுடன் சேர்த்து வைக்கக் கோரி கணவன் ஒருவர் வவுனியா, பறநாட்டாங்கல் பகுதியில் நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

வவுனியா, பறநாட்டாங்கல் பகுதியில் வசிக்கும் சி.சிவகுமார் என்ற மூன்று பிள்ளைகளின் தந்தைக்கும் அவரது மனைவிக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாக கணவனுடன் கோபித்துக் கொண்டு மனைவி தனது மூன்று பிள்ளைகளுடன் தனது உறவினர் வீட்டுக்குச் சென்றுவிட்டார்.

மூன்று தினங்கள் கடந்த நிலையிலும் மனைவி, பிள்ளைகள் வர மறுத்தமையால் தனது பிள்ளைகளையும், மனைவியையும் தன்னுடன் சேர்த்து வைக்குமாறு கோரியே சிவகுமார் பறநாட்டாங்கல் ஆலயம் அருகில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டார்.

அவரது உண்ணாவிரதத்தை கைவிடுமாறு பொலிஸார், கிராம அலுவலர் ஆகியோர் தெரிவித்த போதும் மனைவி, பிள்ளைகள் வீடு வரும் வரை தனது உண்ணாவிரதம் தொடரும் என்று அவர் தெரிவித்துள்ளார். (ஐ-100)

## சமனங்குளம் பகுதி பயனாளிகளுக்கு தென்னை மரக்கன்றுகள் வழங்கல்



வவுனியா, டிசெ.24

வவுனியா, சமனங்குளம்பகுதியில் தென்னை மரக்கன்றுகள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

நெஸ்லே நிறுவனத்தின் அனுசரணையில் தென்னை அபிவிருத்திச் சபையால் தெரிவு செய்யப்பட்ட 175 குடும்பங்களுக்கு தென்னங் கன்றுகள் வழங்கப்பட்டன.

சமனங்குளம் கிராம அலுவலர் அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் வைத்து இவை வழங்கப்பட்டன.

வவுனியா, நெடுங்கேணி தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வட மாகாண தென்னை அபிவிருத்தி சபையின் பிராந்திய முகாமையாளர் எஸ்.வைகுந்தன், உதவி பிராந்திய முகாமையாளர் கோபாமல்லி மற்றும் உத்தியோகத்தர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண் டிருந்தனர். இதன் போது தென்னை பயிரிடும் முறைபற்றிசெயன்முறை விளக்கம் அளிக் கப்பட்டது. 175 பயனாளிகளுக்கும் தலா ஐந்து தென்னங்கன்றுகள் வீதம் வழங்கப்பட்டன. அதற்கான பசளையும் வழங்கப்பட்டது. (ஐ-100)

## தகவல் அறியும் உரிமை தொடர்பில் வவுனியாவில் விழிப்புணர்வு நிகழ்வு





வவுனியா, டிசெ.24

தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வொன்று டிரான்ஸ்பெரன்சி இன்ரநெசனல் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நிறுவனத்தின் இணைப்பாளர் ரவீந்திர டீ சில்வாவின் தலைமையில் நேற்று வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

வடமாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களிலிருந்து கிராமமட்ட குழுக்களைச் சேர்ந்த 150 பேர் இதில் கலந்து கொண்டனர்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தி மக்களுக்கு கிடைக்கும் வாய்ப்புக்கள், நலன்கள் பற்றி இதன்போது விளக்கமளிக்கப்பட்டது.

நிகழ்வில் வவுனியா மாவட்ட உதவி பிரதேச செயலாளர் சாரதா அஞ்சலி கர்ணன், டிரான்ஸ்பெரன்ஸி இன்ரநெசனல் நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் எஸ்.நிசாந்தன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ-100)

## ஓமந்தை வீட்டுத் திட்டத்தில் திருடர்கள் கைவரிசை

வவுனியா, டிசெ.24

வவுனியா - ஓமந்தை அரச ஊழியர் வசிக்கும் வீட்டுத் திட்டப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை வீடு புகுந்த திருடர்கள் பணம், நகை என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

வவுனியா, ஓமந்தை, அரச ஊழியர் வீட்டுத் திட்டத்தில் உள்ள ஆசிரியர் ஒருவரின் வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் அவர்களது வீட்டில் இருந்த பணம் மற்றும் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த நகை, நாற்பதாயிரம் ரூபா பணம் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

உறக்கத்தில் இருந்த வீட்டு உரிமையாளரின் மனைவி அதிகாலை 2.30 மணியளவில் தண்ணீர் குடிப்பதற்கு எழுந்து சென்ற போது வீட்டில் திருட்டு நடந்தது தெரிய வந்தது.

இதையடுத்து ஓமந்தைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, இந்த வீட்டுத்திட்டத்தில் தொடர்ச்சியாக திருட்டுக்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-100)

## சந்தேக நபர்கள் இருவர் கைது



வவுனியா, டிசெ.24

வவுனியாவில் இளைஞன் கடத்தப்பட்டு தாக்கப்பட்டமை தொடர்பில் இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா நகர பேருந்து நிலையத்தில் உள்ள உணவகத்தில் கடமை புரியும் இளைஞனை கடத்திச் சென்று தாக்கி வீதியில் விட்டுச் சென்றமை தொடர்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் கடத்திச் செல்வதற்குப் பயன்படுத்திய பேருந்தும் வவுனியா பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

தாக்கப்பட்ட 26 வயதான த.சுபராஜ் என்ற இளைஞன் வவுனியா வைத்தியசாலையின் அவசர சிக்கிச்சைப் பிரிவில் அனுமதிக் கப்பட்டுள்ளார். இது தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ஐ-100)

# சுவிஸ் புத்தாண்டு நிகழ்வில் சூப்பர் சிங்கர் ஜெசிக்கா



சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு 18 ஆவது தடவையாக நடத்தும் ''புத்தாண்டும் புது நிமிர்வும்'' எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி சூரிச் மாநிலத்தில் நடைபெறவுள்ளது.

சூப்பர் சிங்கர் ஈழக் குயில் ஜெசிக்கா, மற்றும் நிருஷன் ஆகியோருடன் சுவிஸ் வாழ் முன்னணி கலைஞர்கள் கலந்து கொள்ளும் இந்தப் பிரமாண்டமான நிகழ்வில் ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# சுவிஸில் பொங்கல் விழா


சுவிஸ் செங்காளன் மாநிலங்களில் உள்ள தமிழ் வித்தியாலயங்கள் இணைந்து நடத்தும் பொங்கல் விழா எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

செங்காளன் மாநிலத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் இயல், இசை, நாடக நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. தமிழர் பாரம்பரியத்துடன் கூடிய கலாசார நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)





# சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் நினைவு நிகழ்வு



புலிகளின் அரசியல் ஆலோசகர் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் பத்தாம் ஆண்டு நிகழ்வும் அரசியல் துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் உட்பட 7 மாவீரர்களினது நினைவு நிகழ்வும் புலிகளது பிரான்ஸ் கிளையில் எழுச்சியுடன் நடைபெற்றது.

சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த வணக்க நிகழ்வில் பொதுச் சுடரேற்றலுடன் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது. தொடர்ந்து ஈகச்சுடர் ஏற்றி அக வணக்கத்துடன் மலர் வணக்கம் செலுத்தப்பட்டது. மக்களால் சுடர் மலரஞ்சலி செலுத்தப்பட்ட வேளையில் மாநில வாழ் சிறுவர்களாலும் இளையோர்களாலும் எழுச்சிப் பாடல்கள் இசைக்கப்பட்டன.

மாவீர வித்துக்களான அரசியல் பெருந்தகைகள் மற்றும் புலத்தில் அயராது உழைத்த கேணல் பருதியின் நினைவுகள் சுமந்த இந்த வணக்க நிகழ்வின் எழுச்சி நிகழ்வுகளாக இளையோர் நடனங்கள், பாடல்கள் மற்றும் காலத்தின் தேவை கருதிய சிறப்புரையோடு சமகால அரசியல் சார்ந்த கலந்துரையாடலும் இடம் பெற்றன.

இந்த எழுச்சி நிகழ்வில் பல நூற்றுக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். (ஐ)

# ஈழத்துத் திறமைகள் நிகழ்வு ஜேர்மனியில்









இளையோர் மத்தியில் ஒளிந்திருக்கும் திறமைகளை வெளிக்கொண்டு வரும் முகமாக, ஜேர்மனி தமிழ் இளையோர் அமைப்பு களம் அமைத்துக் கொடுக்கும் நிகழ்வே ஈழத்துத் திறமைகள் என்னும் நிகழ்வு ஆகும். இந்த நிகழ்வு வருடந்தோறும் நடத்தப்பட்டு வருகிறது.

அதேபோல் இவ்வருடம் கடந்த 17 ஆம் திகதி சனிக்கிழமை ஜேர்மன் தமிழ் இளையோர் அமைப்பினின் ஏற்பாட்டில் ஐந்தாவது முறையாக, ஈழத்துத் திறமைகள் நிகழ்வு பேர்க்கைம் நகரில் நடைபெற்றது. பொதுச் சுடரேற்றலை தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டு நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது.

தொடர்ந்து கலைஞர்களின் போட்டி நிகழ்வுகள் நடைபெற்றன. நிகழ்வில் பங்குபற்றிய கலைஞர்கள் ஆடல், பாடல், இசைக்கருவி மீட்டல் என பல விதத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்திப் பார்வையாளர்களை மகிழ்வித்தார்கள்.

போட்டிகளை மதிப்பிட வசந்த்செல்லத்துரை, ரோஷானி மற்றும் ஜெயா ரவீந்திரன் ஆகியோர் நடுவர்களாகச் செயற்பட்டனர். நிகழ்வை நிதுசா பாஸ்கரன் தொகுத்து வழங்கினார்.

சிறுவர்களுக்கான போட்டி இளையோருக்கான போட்டி என இரு பிரிவுகளாகப் போட்டிகள் நடைபெற்றன. சிறுவர்களுக்கான போட்டியில் மயூரிஸ் முதலாம் இடத்தையும், இரண்டாம் இடத்தை நாங்க தமிழ் பசங்க குழுவினரும், மூன்றாம் இடத்தை ஸ்வரதாண்டவம் யுனியர்ஸ் குழுவினரும் பெற்றுக்கொண்டனர்.

இளையோருக்கான போட்டியில் ராகவன் சண்முகதாஸ் முதலாம் இடத்தையும், ரீ.எஸ் ஸ்குவாட் பேர்லின் இரண்டாம் இடத்தையும், எஸ்.டீ.ஆர் டேன்ஸ்க்ரூ மற்றும் ஸ்வர தாண்டவம் சீனியர்ஸ் மூன்றாம் இடத்தையும் தட்டிச் சென்றனர்.

ஈழத்துத் திறமைகளுக்கான சிறப்பு விருதை அதிசயம் குழுவினர் பெற்றுக் கொண்டனர்.

வெற்றி பெற்றவர்களுக்குக் கேடயமும், பங்குபற்றிய அனைவருக்கும் பதக்கங்களும் வழங்கப்பட்டன. (ஐ)




# ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...? 40

**அமெரிக்கா தாய்வானை புறந்தள்ள முடியாது,**

**"ஒருபோதும் 'ஒரே சீனா, இரண்டு அமைப்புமுறை' கொள்கையை ஏற்க வேண்டாம்-'ஒரே சீனா' கொள்கையை மீண்டும் குறிப்பிடக் கூட வேண்டாம்,**

ட்ரம்பின் மற்றொரு வெளியுறவு கொள்கை ஆலோசகரும் பதவி நியமன தேர்வுக்குழுவில் ஒருவருமான பீட்டர் நவார்ரோ, ஜூலையில் National Interest இல் பிரசுரிக்கப்பட்ட ஒரு கட்டுரையில் சீனா மற்றும் தாய்வானுடனான அமெரிக்க உறவுகளில் அடிப்படை மாற்றத்துக்கான கட்டமைப்பை அமைத்தார். அமெரிக்கா தாய்வானை புறந்தள்ளமுடியாது என்று தலைப்பிட்டு, நவார்ரோ எழுதுகையில், "ஒருபோதும் 'ஒரே சீனா, இரண்டு அமைப்புமுறை' கொள்கைய்யை ஏற்க வேண்டாம்-'ஒரே சீனா' கொள்கையை மீண்டும் குறிப்பிடக் கூட வேண்டாம்" என்றார். அழுத்தம் சேர்க்கப்பட்டுள்ளது


**தாய்வானை ஒரு சுதந்திரமான அமெரிக்க-சார்பு கூட்டாளியாக பேணுவது சீனாவின் வளர்ச்சிக்கு எதிராக மூலோபாயரீதியில் சமநிலை செய்வதற்கு முற்றிலும் அத்தியாவசியமாகும்,**

தாய்வானை ஒரு சுதந்திரமான அமெரிக்க-சார்பு கூட்டாளியாக பேணுவது அதிகரித்தளவில் இராணுவவாத சீனாவின் வளர்ச்சிக்கு எதிராக மூலோபாய ரீதியில் சமநிலை செய்வதற்கு முற்றிலும் அத்தியாவசியமாகும், என்று நவார்ரோ அறிவித்தார். யதார்த்தத்தில், அமெரிக்க மேலாதிக்கத்தை பேணுவதற்காக ஒபாமா நிர்வாகம் தான் அதன் ''ஆசியாவை நோக்கிய முன்னெடுப்பின்'' பாகமாக, ஆசிய-பசிபிக்கில் பாரியளவில் இராணுவ கட்டமைப்பை செய்து, தென் சீனக் கடல் போன்ற வெடிப்புப் புள்ளிகளில் சீனாவுடன் பதற்றங்களைத் தூண்டியது.

**தாய்வானுக்கு கூடுதலான இராணுவ உதவிகளுக்கு அழைப்பு**

அந்த "முன்னெடுப்பை" போதுமானளவிற்கு ஆக்ரோஷமாக பின்தொடரவில்லை என்பதற்காக பராக் ஒபாமாவை விமர்சிக்கும் நவார்ரோ, ஆசியாவில் அமெரிக்காவின் கடல்வழி மற்றும் வான்வழி பலத்தைக் குறைக்க சீனா இப்போது பயன்படுத்தி வரும் ''அதே மாதிரியான 'பிராந்தியத்திற்கு உள்நுழைவதை அணுக முடியாது தடுக்கும்' தகைமைகள்'' உட்பட அதன் பாதுகாப்பு தகைமைகளை அதிகரிப்பதற்காக தாய்வானுக்கு கூடுதலான இராணுவ உதவிகளுக்கு அழைப்புவிடுத்தார். சீன கடற்படை மற்றும் கப்பல் போக்குவரத்தை அச்சுறுத்துவதற்காக அதிநவீன டீசல் மின்சார நீர்மூழ்கிக்கப்பல் படையை அபிவிருத்தி செய்வதற்கும் தாய்வானுக்கு உதவுமாறு அவர் ஆலோசனை வழங்கினார்.

**ஒரே சீனா கொள்கை மீதோ அல்லது தாய்வான் குறித்தோ பீஜிங் பேரம் செய்யாது**



ட்ரம்பின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளுக்கு சீன அரசாங்கத்தின் விடையிறுப்பு ஒப்பீட்டளவில் குறைந்த தொனியில் உள்ளது. ஆனாலும், கடந்த வாரம் China Daily இல் வெளியான ஒரு தலையங்கம் குழப்பத்திற்கிடமற்ற வார்த்தைகளில், ஒரே சீனா கொள்கை மீதோ அல்லது தாய்வான் குறித்தோ பீஜிங் பேரம் செய்யாது என்று குறிப்பிட்டது.

**''சீனாவின் முக்கிய தேசிய நலன்கள் பட்டியலில் தாய்வான் முதலிடத்தில் இருக்கிறது, அதில் பேரம்பேச முடியாது''**

வர்த்தக உடன்பாட்டை எட்டுவதில் ட்ரம்ப் கைதேர்ந்த ஒரு சாமர்த்தியமான வியாபாரியாக இருக்கலாம். குறைவானதற்கு உடன்படுவதை விட ஒரு கடுமையான பகிரங்க பேரம்பேசலை செய்ய, அவர் அவரது வணிக கையேட்டில் இருந்து ஒரு பக்கத்தை எடுத்திருக்கலாம். ஆனால் சீனாவின் முக்கிய தேசிய நலன்கள் பட்டியலில் தாய்வான் முதலிடத்தில் இருக்கிறது, அதில் பேரம்பேச முடியாது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை, என்று அது குறிப்பிட்டது.






பேரம்பேச முடியாததை பேரம் பேசுவதற்குரியதாக நம்பச் செய்வதற்காக அவரின் ஆலோசகர்களால் என்ன காரணத்திற்காக அவர் தவறாக வழிநடத்தப்பட்டிருந்தாலும், தாய்வானைப் பொறுத்த வரையில் ஒரே சீனா கோட்பாடு விடயத்தில், விளைவுகள் கடுமையாக இருக்கும், என்று அது குறிப்பிட்டது.

தசாப்தங்களாக இருந்து வரும் இராஜாங்க வழிவகைகளை கைவிடும் விதத்தில் மற்றும் அவ்விரு அணுஆயுத சக்திகளுக்குஇடையே முரண்பாடுகளை தூண்டக்கூடிய பீஜிங் உடனான பொறுப்பற்ற ஒரு மோதல் அபாயத்தை எடுக்கும் வகையில், அவர் சீனாவை நோக்கி ஓர் ஆத்திரமூட்டும் நிலைப்பாட்டை ஏற்க விரும்புகிறார் என்பதையே, அவர் பதவி ஏற்பதற்கு முன்னரே ட்ரம்ப் எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கிறார்.

**ட்ரம்ப்பின் நிலைப்பாடு: சீன அரசாங்கம் எப்படிச் சமாளிக்கப் போகிறது?**

நான்கு தசாப்தங்களுக்கு அதிகமாக அமெரிக்க-சீன உறவுகளின் அடித்தளமாக இருந்துள்ள ''ஒரே சீனா'' கொள்கையை கேள்விக்குட்படுத்திய ட்ரம்பின் கருத்துக்கள் குறித்து, சீன ஆட்சி அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ட்ரம்பை விமர்சித்துள்ளது. 1972 இல் அமெரிக்க ஜனாதிபதி ரிச்சார்ட் நிக்சனின் பீஜிங்கிற்கான முன்னொருபோதுமில்லாத விஜயத்தின் போது அவரால் ஏற்படுத்தப்பட்ட இக்கொள்கை, தாய்வான்தீவு உள்ளடங்கலாக சீனா முழுமைக்கும் பீஜிங்கையே ஒரே சட்டபூர்வ அரசாக அங்கீகரிக்கிறது.

ட்ரம்ப் Fox News இல் பேசுகையில், வர்த்தகம் உட்பட சீனாவுடன் தொடர்புடைய ஏனைய விடயங்களில் நாம் ஓர் உடன்பாட்டுக்கு வராமல், அமெரிக்கா ஏன் "ஒரே சீனா கொள்கையில் பிணைந்திருக்க வேண்டும்" என்று பார்ப்பதாக அவர் அறிவித்தார். அவரது ஆத்திரமான பேச்சுக்களில், வர்த்தகம் மற்றும் பொருளாதார கொள்கை தொடங்கி வட கொரியா மற்றும் தென் சீனக் கடலில் சீனாவின் நடவடிக்கைகள் வரையில் ஒவ்வொன்றின் மீதும் சீனாவிடம் ஒரு விட்டுக் கொடுப்புகளுக்கான கோரிக்கை பட்டியல் இடம் பெற்றிருந்தன.

1979 இல் தாய்வானுடன் அமெரிக்கா உத்தியோகபூர்வ இராஜாங்க உறவுகளை முறித்துக் கொண்டதற்குப் பின்னர் முதலாவது தொடர்பாக, டிசெம்பர் 2 அன்று தாய்வான் ஜனாதிபதி சாய் இங்-வென்னிடம் இருந்து ஒரு தொலைபேசி அழைப்பை ஏற்றதன் மூலம், ட்ரம்ப் ஏற்கனவே ஒரே சீனா கொள்கை மீது ஒரு கேள்விக்குறி இட்டுள்ளார். அவரது ஆலோசகர்களால் பல வாரங்களுக்கு முன்னரே ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அந்த தொலைபேசி உரையாடலை அவர் மீண்டும் ஞாயிறன்றும் நியாயப் படுத்தினார். அதை ஏற்றிருக்காவிடில், அது ''மிகவும் அவமதிப்பதாக'' ஆகியிருக்கும் என்று அவர் தெரிவித்தார்.




**"தாய்வான் பிரச்சினை சீனாவின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை கவலைக்குட்படுத்துகிறது. மேலும் அதில் சீனாவின் முக்கிய நலன்கள் சம்பந்தப்பட்டுள்ளன என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்"**

சீன வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் Geng Shuang, ட்ரம்பின் கருத்துக்கள் குறித்து சீனாவின் "தீவிர கவலைகளை'' வெளியிட்டார். தாய்வான் பிரச்சினை சீனாவின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை கவலைக்குட்படுத்துகிறது. மேலும் அதில் சீனாவின் முக்கிய நலன்கள் சம்பந்தப்பட்டுள்ளன என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன் என்றார். ஒரே சீனா கொள்கையை நிலைநிறுத்துவது, அபிவிருத்தி அடைந்துவரும் சீன-அமெரிக்க உறவுகளுக்கான அரசியல் அடித்தளமாகும், என்றார்.

**சீன-அமெரிக்க உறவு உலகளாவிய மூலோபாய முக்கியத்துவம் கொண்டதாகும்.**

இந்த அடித்தளத்தில் குறுக்கீடு செய்தாலோ அல்லது அதை சேதப்படுத்தினாலோ பின் சீன- அமெரிக்க உறவுகளின் ஆரோக்கியமான அபிவிருத்தி மற்றும் முக்கிய துறைகளில் உள்ள இருதரப்பு கூட்டுறவு ஆகியவை கேள்விக்கிடமாக ஆகி விடும் சீன-அமெரிக்க உறவு உலகளாவிய மூலோபாய முக்கியத்துவம் கொண்டதாகும். இது இவ்விரு நாடுகள் மற்றும் அவற்றினது மக்களின் நல்வாழ்வு சம்பந்தப்பட்டது மட்டுமல்ல,இது ஆசிய பசிபிக் மற்றும் சர்வதேச அளவில் சமாதானம், ஸ்திரப்பாடு, அபிவிருத்தி மற்றும் வழமை நிலை சம்பந்தப்பட்டதாகும், என்று Geng எச்சரித்தார்.

**ட்ரம்ப் சீனாவின் ஏனைய இடங்களிலும், குறிப்பாக திபெத் மற்றும் ஜின்ஜியாங்கில், மறைமுகமாக பிரிவினைவாத உணர்வை ஊக்குவித்து வருகிறார்**

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி (CCP) எப்போதுமே தாய்வானை அதன் மிகவும் "அதிமுக்கிய நலனாக'' கருதி வந்துள்ளதுடன், பிரதான பெருநிலத்திலிருந்து தைப்பெய் உத்தியோகபூர்வ சுதந்திரத்தை எப்போது அறிவித்தாலும் அது அத்தீவை பலவந்தமாக கைப்பற்றும் என்பதையும் எச்சரித்துள்ளது. ஜனாதிபதி சாய் இன் கட்சி அதிக சுதந்திரமான தாய்வானை ஆதரிக்கும் நிலையில், அவருக்கு உதவி வழங்குவதன் மூலம் ட்ரம்ப் சீனாவின் ஏனைய இடங்களிலும், குறிப்பாக திபெத் மற்றும் ஜின்ஜியாங்கில், மறைமுகமாக பிரிவினைவாத உணர்வை ஊக்குவித்து வருகிறார்.

(கேள்வி தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir





# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கிய மானவர். அரசியல் ஞானம்மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.



05

## சத்தியாக்கிரகப் போராட்டம்

1958 இல் நிகழ்ந்த இனக் கலவர வெறியாட்டம் தமிழ் சிங்கள தேசிய இனங்கள் மத்தியிலான உறவில் ஆழமான பிளவை ஏற்படுத்தியது. தமிழ்த் தேசிய உணர்வு எழுச்சிப் பிரவாகம் எடுத்தது. தமிழ் அரசியல் களத்தில் மாபெரும் வெகுசனப் போராட்டங்களாக அது வடிவெடுத்தது. வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள அரசாங்கச் செயலகங்கள் முன்பாக சத்தியாக்கிரகப் போராட்டங்களை நிகழ்த்தி நேரடி நடவடிக்கையில் குதிக்க 1961 முற்பகுதியில் சமஷ்டிக் கட்சி தீர்மானித்தது. தமிழரின் தாயக மண்ணில் அரச நிர்வாகத்தை நிலைகுலையச் செய்து, ஆட்சியைச் சீர்குலைத்துத் தமிழ் மக்களின் சமஷ்டித் தன்னாட்சிக்கான கோரிக்கையை அரசு ஏற்கும்படி செய்வதே இவ்வெகுசனப் போராட்டத்தின் குறிக்கோளாக இருந்தது.

1961ஆம் ஆண்டு நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டமானது தமிழரின் தேசியப் போராட்ட வரலாற்றில் ஒரு மகத்தான நிகழ்வு என்றே கூற வேண்டும். மாபெரும் வெகுசனப் பொங்குணர்வாகவும், அரச ஒடுக்குமுறைக் கொள்கைக்கு எதிரான தேசியப் பேரெழுச்சியாகவும் இப் போராட்டம் அமையப் பெற்றது. 1961 பெப்ரவரி 20 இல் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஒத்துழையாமை இயக்கம் ஏறத்தாழ மூன்று மாத காலம் வரை நீடித்தது. அடக்குமுறை அரசுக்கு எதிராக தமது ஆத்திரத்தை வெளிக்காட்டும் வகையில் பல்லாயிரம் தமிழ் மக்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களில் பங்கு கொண்டனர். வடக்குக் கிழக்கு மாநிலத்தில் இயங்கிய அரச நிர்வாக இயந்திரம் இரண்டு வாரங்களுக்குச் செயலிழந்து முடங்கியது. தமிழர் தாயகத்தின் சகல பகுதிகளிலும் மத்திய அரசின் ஆணை ஆற்றலிழந்தது. வரலாறு கண்டிராத இம் மகத்தான போராட்ட நிகழ்வு தமிழ் மக்களிடையே மிக வேகமாக வளர்ந்து வரும் தேசிய ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தியது. தமிழ் மக்கள் தமது அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கு ஒன்றிணைந்து போராட உறுதிபூண்டுள்ளார்கள் என்பதற்கும் இது கட்டியம் கூறியது.

யாழ்ப்பாணத்தில் உள்ள அரசாங்கப் பிரதான நிர்வாகப் பணிமனையின் முன், பெருந்திரளான மக்களின் குந்து மறியல் போராட்டம் முதலில் தொடங்கியது. விரைவில் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய களங்களுக்கும் வேறு நகரங்களுக்கும் போராட்டம் வேகமாகப் பரவியது. தமிழ் பேசும் மக்களில் அனைத்துப் பிரிவினரும், சாதி சமய வேறுபாடின்றி இந்த அமைதிப் பொதுப் போராட்டத்தில் உற்சாகத்தோடு கலந்து கொண்டார்கள். மலையகத் தோட்டத் தொழிலாளரும், ஆயிரமாயிரம் பேர் தங்கள் உரிமைப் போராட்ட ஒற்றுமை உணர்வை வெளிப்படுத்த வடக்கிலும் கிழக்கிலும் ஒன்று கூடினார்கள். இந்த மாபெரும் தேசிய எழுச்சி ஊட்டிய உற்சாகத்தில் 1961 ஏப்ரல் 14 இல், அஞ்சல் சேவை ஒன்றை சமஷ்டிக் கட்சி தொடக்கியது. தமிழ்த் தேசிய அஞ்சல் தலைகள் ஆயிரமாயிரம் வெளியிடப்பட்டன. அரச அதிகாரத்தை மீறுவதாக இந்தச் செயல் அமைந்தது.

தமிழ்த் தேசிய வளர்ச்சியின் வேக அலையும் சட்ட மறுப்புப் போராட்டமும் அரசை ஆட்டம்காணச் செய்தது. அரசின் ஒடுக்குமுறை இயந்திரம் துரிதமாக முடுக்கிவிடப்பட்டது. அடக்குமுறை யந்திரம் துரிதமாக முடுக்கிவிடப்பட்டது. அடக்குமுறை நடவடிக்யையில் இராணுவம் ஈடுபடுத்தப்பட்டது. அவசர கால அதிகாரங்களுக்கு அமைவான 'சிறப்புப் பணிப்புரைகளோடு' பெரும் படையணிகளாக ஆயுதப் படைகள் தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. யாழ்ப்பாணச் சத்தியாக்கிரகிகள் மீது 1961 ஏப்ரல் 18 வைகறைப் பொழுதில் அரச படையினர் திடீரெனப் பாய்ந்தனர். துப்பாக்கி முனையாலும் குண்டாந்தடியாலும் குரூரமாகத் தாக்கினர். மண்டைகள் உடைந்தன. அவயவங்கள் முறிந்தன. சாத்வீகப் போராளிகள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அரச இராணுவக் காடைத்தனத்தின் விளைவாக நூற்றுக்கணக்கானோருக்குக் கடுங்காயம் ஏற்பட்டது. அவசரகாலச் சட்டம், ஊரடங்கு என்ற போர்வையில் தமிழர் தாயகம் முழுவதிலும் இராணுவப் பயங்கரவாதம் ஏவப்பட்டது. கடுமையான வன்முறையால் அமைதிப் போராட்டம் அடக்கப்பட்டது. தமிழ்த் தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள். சமஷ்டிக் கட்சிப் பணிமனைகள் அடித்து நொருக்கப்பட்டன. அரசின் பார்வையில் 'நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.' இவ்வாறு ஒடுக்குமுறையாளரின் வன்முறை ஒடுக்கப்பட்டவரின் சாத்வீகத்தை அடக்கி ஒடுக்கியது. சிங்களப் பேரினவாதத்தின் ஆயுத பலம் நீதி வேண்டிய தமிழ் மக்களின் 'அகிம்சையை' நொருக்கியது. இந்த வரலாற்று நிகழ்வு தமிழ்த் தேசியப் போராட்டத்தின் அரசியல் அனுபவத்துக்கு ஒரு தோற்றுவாயாகப் படிந்தது. மனிதநேயப் பண்புகளினதும் நாகரிக நடைமுறைகளினதும் ஒழுக்க சீலங்கள் அனைத்தையும் நிராகரித்தது. இனக் காழ்ப்புணர்வில் ஊறிப் போயிருக்கும் கொடிய ஒடுக்குமுறையாளரின் இராணுவ அதிகாரத்தின் முன்னே, தமிழ் மக்கள் வெறுமனே சாத்வீக அணுகுமுறையின் தார்மீக பலத்தோடு எதிர்த்து நிற்க முடியாது என்ற பாடத்தைக் கற்பித்தது. ஒடுக்குமுறையாளரைப் பொறுத்தவரையிலே இந்த நிகழ்வு அவர்களுக்கு நம்பிக்கையை ஊட்டியது. தமிழரின் அரசியல் போராட்டத்துக்கு இராணுவ பயங்கரவாதமே ஒற்றைப் பதிலாகும் என்று அவர்கள் கருதினார்கள். துப்பாக்கி முனையின் முன்னே, தமிழ் மக்களுடைய அரசியல் போராட்டத்தின் சாத்வீக அடித்தளம் பலமற்றது என்று ஆட்சியாளர்கள் முடிவு செய்தார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க) 1965 இல் ஆட்சிக்கு வந்தது. பெயரளவில் 'தேசிய அரசு' என்று பெயர் சூட்டப்பட்ட இந்த அரசுடன் கூட்டுச் சேர சமஷ்டிக் கட்சி தீர்மானித்தது. சில சலுகைகளைத் தமிழ் மக்களுக்காகப் பெற்று எடுக்க முடியும் என்று அது எதிர்பார்த்தது. தமிழ் மக்களின் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் இணக்கம் காண இந்தக் கூட்டுச் சேரல் வழிகோலும் என்று தமிழ்த் தலைமை வீணாக நம்பியது. தமிழ்த் தேசியவாதிகளைக் குளிர்மைப்படுத்தற் பொருட்டு சமஷ்டிக் கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவரை அமைச்சரவையில் கபடத்தனமாக நியமித்த ஐ.தே.க அடுத்த ஆண்டில் குறித்த சில அரச அலுவல்களில் தமிழ்மொழியைப் பயன்படுத்தும் சில ஒழுங்குப் பிரமாணங்களை நிறைவேற்றியது. மாவட்ட மன்றங்களை நிறுவும் ஏற்பாடுகள் தொடர்பாக சமஷ்டிக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களுக்கும் ஐ.தே.க.தலைவர் டட்லி சேனநாயக்க அவர்களுக்கும் இடையே ஓர் இரகசிய ஒப்பந்தம் செய்யப்பட்டது.

தமிழ்மொழி அமுலாக்கத்துக்கான ஒழுங்குப் பிரமாணங்களோ,பிரதேச மன்றங்களுக்கான அரசியல் அதிகாரப் பரவலாக்கமோ நிறைவு செய்யப்படவில்லை. பேச்சுவார்த்தை மூலம் இணக்கப்பாடு காணும் வழிமுறைக்குச் சிங்கள அரசியல் தலைவர்களின் இனவெறிப் போக்குடைய அரசியல் அணுகுமுறை இடமளிக்கவில்லை. சிங்கள தேசத்தின் இனவாத அரசியல்அணுகுமுறையில் மாறி மாறி நிகழும் ஒரு வரலாற்றுப் பாங்காக, மாற்ற முடியாத ஒரு நடைமுறையாக ஓர் உண்மையைக் கண்டுகொள்ளலாம். அதாவது, ஆட்சிப்பீடம் ஏறும் கட்சி, தமிழர் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முற்படும்பொழுது எதிர்க்கட்சியாக விளங்கும் கட்சி அம்முயற்சியை முறியடிக்கும் வகையில் தமிழ் விரோத உணர்வைத் தூண்டிவிடும். இதன்படி, சிங்கள தேசப்பற்றாளர்களாக, தம்மை இனம்காட்டி, எதிராளிக் கட்சிக்காரரைக் காட்டிலும் தாம் கெட்டிக்காரர் என உயர்த்திக் காட்டி அரசியல் லாபம் தேடும் ஒரு கீழ்த்தரமான அரசியல் நடைமுறையை சிங்கள அரசியல் கட்சிகள் மாறி மாறிக் கடைப்பிடிப்பது ஒரு வரலாற்று நியதியாகி விட்டது. இத்தகைய அரசியல் பம்மாத்தில் சிக்குண்ட ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கட்சியின் அழுத்தங்களுக்கு வளைந்து கொடுத்து உடன்படிக்கையைக் கைவிட்டது. ஒத்துழைத்து உரிமை பெறலாம் என்ற சமஷ்டிக் கட்சியின் முயற்சி மீண்டும் ஏமாற்றுப் படலத்தைச் சந்தித்தது. தலைக்குனிவோடு சமஷ்டிக் கட்சி, அரசுக்கு வழங்கிய ஆதரவை 1968 இல் நிறுத்திக் கொண்டது.

(தொடரும்...)

"1961 ஆம் ஆண்டு நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டமானது தமிழரின் தேசியப் போராட்ட வரலாற்றில் ஒரு மகத்தான நிகழ்வு என்றே கூற வேண்டும். மாபெரும் வெகுசனப் பொங்குணர்வாகவும் அரச ஒடுக்குமுறைக் கொள்கைக்கு எதிரான தேசியப் பேரெழுச்சியாகவும் இப் போராட்டம் அமையப் பெற்றது."



காலைக்கதிர்



# புத்தரின் உருவம் பொறித்த ஒருதொகை ஆடைகள் மீட்பு



கொழும்பு, டிசெ.24

புத்தரின் உருவம் பொறிக்கப்பட்ட ஒருதொகை ஆடைகள் நேற்று முன்தினம் சுங்கத்திணைக்களத்தால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொழும்புத் துறைமுகத்துக்குக் கொண்டு வரப்பட்ட கொள்கலன் ஒன்றில் இருந்தே அவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று இலங்கை சுங்கப் பிரிவின் பேச்சாளர் தர்மசேன கஹன்தவ தெரிவித்தார்.

இந்த வகையில், ஐயாயிரத்து 424 சோடி ஆடைத் தொகுதிகள் அந்தக் கொள்கலனில் இருந்து பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இந்தக் கொள்கலன் இந்தியாவில் இருந்து கடந்த 28ஆம் திகதி கொண்டுவரப்பட்டுள்ளது என்று விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த ஆடைகள் இலங்கையினூடாக ஸ்லோவேனியாவுக்குக் கொண்டு செல்லப்பட இருந்தன என்று மேலதிக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ள இலங்கை சுங்க அதிகாரிகள் இந்திய சுங்கத் துறையினிடம் தெரிவிக்க வேண்டும் என்று சுங்க திணைக்கள அதிகாரிகள் கூறியுள்ளனர். இதேவேளை, விசாரணைகளுக்குப் பின்னர் பறிமுதல் செய்யப்பட்ட பொருள்களை பௌத்த சாசன அமைச்சிடம் கையளிக்க வேண்டும் என சுங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## தினசரி ராசி பலன் 24.12.2016

சுபநேரம் : காலை : 10.45 – 11.45
மாலை : 4.45 – 5.45
ராகு காலம் : 9.00 – 10.30
குளிகன் : 6.00 – 7.30
எமகண்டம் : 1.30 – 3.00

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

சம நோக்கு நாள்

**மேஷம்:** நன்மை - நீண்ட நாளைய ஆசைகள் நிறைவேறி நன்மைகள் பல கிடைக்கும்.

**ரிஷபம்:** நலம் - இன்று மன மற்றும் உடல் ஆரோக்கியத்தில் நலம் காண்பீர்கள்.

**மிதுனம்:** பரிசு - எதிர்பாராத பரிசுப் பொருள் சேர்க்கை தரும், நீண்ட நாளைய நண்பர்களைச் சந்திக்கும் நாள்.

**கடகம்:** எதிர்ப்பு எடுக்கும் காரியங்களில் மறைமுக எதிர்ப்பு உள்ள நாள்.

**சிம்மம்:** கோபம் - வீண் கோபத்தால் அனைவரிடத்திலும் உள்ள மதிப்புக் குறையும்.

**கன்னி:** ஜெயம் - நல்முயற்சிகள் சிறக்கும், எடுக்கும் காரியத்தில் கீர்த்தி தரும் சிறப்பான நன்னாள்.

**துலாம்:** இன்பம் - மன உளைச்சல்கள் குறைந்து குடும்பத்தில் குதூகலம் ஏற்படும்.

**விருச்சிகம்:** போட்டி - இன்று தொழில் முறையில் போட்டிகள் நிலவும்.

**தனுசு:** புகழ் - செய்யும் காரியங்களில் மேன்மை தந்து புகழ் நல்கும்.

**மகரம்:** செலவு - இன்று திடீர் செலவீனங்கள் ஏற்படும்.

**கும்பம்:** சுபம் - நிகழ்வுகள் அனைத்தும் நிம்மதியாக நிறைவு பெறும்.

**மீனம்:** வெற்றி - இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் செய்யும் செயல்கள் யாவிலும் அமைதியுடன் இருந்தால் வெற்றி கிட்டும்.
சந்திராஷ்டமம் : ரேவதி

# புதிய பஸ் வழித்தட அனுமதியால் தனியார் பஸ் உரிமையாளர் பாதிப்பு

## கிழக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

திருகோணமலை, டிசெ.24

விதிமுறைகளுக்குப் புறம்பாகப் புதிய பஸ்களுக்கு வழித்தட அனுமதி வழங்கியதால், கிழக்கு மாகாணத் தனியார் பஸ் உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்தார்.

2017ஆம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண சபையின் வரவு -செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. இதனை அடுத்து, மாகாண வீதிப்போக்குவரத்து அதிகார சபை தொடர்பான விவாதம் நடைபெற்றது. இந்த விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன்போது அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு:-

"கிழக்கு மாகாண வீதிப் போக்குவரத்து அதிகார சபையால் அனுமதி வழங்கப்பட்டு, கல்முனையிலிருந்து வாகரை ஊடாக திருகோணமலை வரை அதிகமான பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இந்தநிலையில், இவற்றுக்குப் புறம்பாக எவ்வித விதிமுறைகளையும் பின்பற்றாமல் மேலும் சில பஸ்களுக்கு கிழக்கு மாகாண வீதிப் போக்கு வரத்து அதிகார சபை அனுமதி வழங்கியுள்ளது. இதன்காரணமாக ஏற்கெனவே சேவையில் ஈடுபட்டுவரும் பஸ் உரிமையாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த விடயம் தொடர்பில் கிழக்கு மாகாண முதலமைச்சருக்கும் முதலமைச்சின் செயலாளருக்கும் கிழக்கு மாகாண வீதிப் போக்குவரத்து அதிகார சபையின் தலைவருக்கும் கிழக்கு மாகாண பஸ் உரிமையாளர் சங்கம் பல தடவைகள் அறிவித்தும், எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை."- என்றார். (எ)

# அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி அதிகரித்தது 152 ரூபாவாக!

கொழும்பு, டிசெ.24

வரலாற்றில் முதல் தடவையாக அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி 152 ரூபாவாக அதிகரித்துள்ளது.

மத்திய வங்கி நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள நாணய மாற்று வீதத்தின் படி, அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 152 ரூபா 12 சதமாக அதிகரித்துள்ளது.

கடந்த அண்மிய காலத்தில் டொலரின் விலை அதிகரிக்கும் போது ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்து வந்துள்ளதைக் காட்டுவதாகவும் கூறப்படுகின்றது.

வங்கிகளில் அமெரிக்க டொலர் பற்றாக்குறை நிலவுவதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இருப்பினும், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, வங்கிகளில் டொலர் பற்றாக்குறை இல்லை என்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# சிங்கமலை காட்டில் தீ பல ஏக்கர் எரிந்து நாசம்

ஹற்றன், டிசெ.24

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட டிக்கோயா நகரப் பகுதிக்கு குடி தண்ணீர் வழங்கும் சிங்கமலை பாதுகாப்பு வனப் பிரதேசத்தினுள் நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட காட்டுத் தீயினால் பல ஏக்கர்கள் எரிந்து நாசமாகியுள்ளன என்று ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

மத்திய மாகாணத்தில் வறட்சியான காலநிலை காணப்படுவதனால் தீ வேகமாக பரவி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தீ காரணமாக அங்கு காணப்படும் அரிய வகை தாவரங்கள், விலங்குகள் அழியுண்டு இருக்கலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தீயினால் நீரூற்றுக்கள் அற்றுப் போகின்றமையால் எதிர்காலத்தில் குடி தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுவதற்கான வாய்ப்புக்களும் காணப்படுகின்றன.

காட்டுமிருகங்களை வேட்டையாடுவதற்காக தீ வைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# வெளிநாட்டு மதுபானங்கள் விற்கும் நடமாடும் வாகனம் சிக்கியது

கொழும்பு, டிசெ.24

கொழும்பில் நீண்ட காலமாக இயங்கிவந்த வெளிநாட்டு மதுபானப் போத்தல்கள் விற்பனை செய்யும் நடமாடும் வாகனம் நேற்றுமுன்தினம் சுற்றிவளைப்பில் சிக்கியது. இதன்போது சந்தேக நபர் ஒருவரையும் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

மதுவரித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் பிரிவினர் இணைந்து இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது 10 லட்சம் ரூபா பெறுமதியான மதுபானப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சொகுசு வாகனம் ஒன்றின் மூலம் இந்த வியாபாரம் கொழும்பு நகரில் நீண்டகாலமாக முன்னெடுத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட நபரிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# கூட்டு ஒப்பந்தத்துக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

கொழும்பு, டிசெ.24

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வை நிர்ணயிக்கும் கூட்டு ஒப்பந்தத்துக்கு தடை உத்தரவு பிறப்பிக்குமாறு வலியுறுத்தி மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த மனு மக்கள் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி இ.தம்பையாவால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த மனுவில் பிரதிவாதிகளாக தொழில் ஆணையாளர், சட்ட மா அதிபர் ஆகியோருடன் கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட தொழிற் சங்கங்கள், 22 தோட்ட நிர்வாகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.



சட்டத்துக்கு முரணாகவும், தொழிலாளர் நலன்களுக்கு எதிராகவும் கூட்டும் ஒப்பந்தம் அமைந்துள்ளதாக அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் சட்டத்துக்கு முரணான கூட்டு ஒப்பந்தத்தை ரத்து செய்யுமாறும், சட்டத்துக்கு முரணான விடயங்களைக் கூட்டு ஒப்பந்தத்தில் இருந்து நீக்கி புதிய கூட்டு ஒப்பந்தத்தை தொழில் ஆணையாளர் மேற்கொள்ள உத்தரவிடுமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (எ)

# விபத்தில் இரு இளைஞர்கள் காயம்

திருக்கோவில் பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமுற்ற நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.


இந்த விபத்தில் தம்பிலுவில் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு இளைஞன் உட்பட இருவரே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளவர்கள் ஆவர்.

இளைஞன் ஒருவர் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதியதால் விபத்து நிகழ்ந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

காலைக்கதிர் Kalaikkathir





# லஞ்சம் வாங்கியமை தொடர்பில் நடவடிக்கை எடுக்காமை தவறு

## அவைத் தலைவர் சி.வீ.கே. காட்டம்

''கிளிநொச்சி பனை - தென்னை கூட்டுறவுச் சங்கம் ஊழல் விசாணையில் லஞ்சம் வாங்கப்பட்டமை ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் கூட்டுறவு ஆணையாளர் அது தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. மாகாண பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழு மாகாண கூட்டுறவு ஆணையாளருக்கு ஊழல் தொடர்பாக அறிவித்திருந்தும்அவர்நடவடிக்கை எடுக்க வில்லை. கூட்டுறவுச் சங்கம் மதுவரி பரிசோதகர்களுக்கு லஞ்சம் கொடுத்தமை விசாரணையில் தெரியவந்துள்ளது'' என்று அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் தெரிவித்திருக்கின்றார்.

''யாழ்கோ மக்களிடம் மலிவாக வாங்கும் பாலை அதிக விலைக்கு நெஸ்லேக்கு விற்று இலாபமீட்டுதல் என்பது ஒரு சுரண்டல் அணுகு முறையே'' எனவும் அவர் தெரிவித்தார்.

# விவசாய தேசிய மொத்த உற்பத்தியில் வடமாகாணம் மேல்நிலைக்கு வரும் அறிகுறி

## அமைச்சர் ஐங்கரநேசன் சபையில் பெருமிதம்



வடமாகாண விவசாய, கமநல சேவைகள் கால்நடை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல், நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சின் மீதான ஒதுக்கீடுகள் விவாதத்தின் போது அமைச்சர் ஐங்கரநேசன் தனது கொள்கை விளக்கவுரையை நிகழ்த்தினார்.

''2015 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வட மாகாணம் தேசிய ரீதியிலான பங்களிப்பில் முன்னிலைக்கு வரும் அறிகுறிகள் தெரிவது பெருமைக்குரியது'' என அவர் சுட்டிக்காட்டினார்.

''அம்மாச்சி உணவகங்கள் கிளிநொச்சி, வவுனியா,முல்லைத்தீவில் இயங்கத் தொடங்கியுள்ளன. யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் அம்மாச்சி உணவகங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இது பலருக்கு வேலைவாய்ப்பை வழங்கி வருகிறது.

நிலத்தடி நீர் விவசாய இரசாயனங்களால் மாசடைவதைத் தடுக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

''பாலுற்பத்தியும் கடந்த ஆண்டில் அதிகரித்துள்ளது. பசுக்களுக்கான செயன்முறை சினைப் படுத்தலில் தேசிய ரீதியில் வடக்கு முதலிடத்தில் உள்ளது. கோழிக் குஞ்சுகளின் விநியோகமும் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வந்துள்ளது. அவை கூடுதலான முட்டைகளை இடக் கூடிய 'கொல்லைப்புறக்' கோழிகளாகும். வடக்கின் சராசரி முட்டை உற்பத்தி 2 லட்சத்தை நெருங்கியுள்ளது.

தொண்டைமானாறு தடுப்பணை வேலை, இரணைமடுக்குளம் அபிவிருத்தி, முத்தையன் கட்டுக்குள அபிவிருத்தி ஆகியன நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் முக்கியத்துவத்துடன் மேற்கொள்ளப்படுகின்றன,

இரணைமடுக்குளபுனரமைப்பு ஆசிய, அபிவிருத்தி வங்கியின் 20 மில்லியன் டொலர் நிதியுடனும், சர்வதேச விவசாய அபிவிருத்தி நிறுவனத்தின் 22 மில்லியன் தொகை நிதியுடனும் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்விரு நிதியுடனும் மேற்கொள்ளப்படும் புனரமைப்பு 2017 இல் பூர்த்தியாகும். முல்லைத்தீவில் அறுபது கோடி ரூபா செலவில் முத்தையன்கட்டுக் குளம் புனரமைக்கப்படுகின்றது.

மன்னாரில் பெரிய பண்டிவிரிச்சான் குளம் உலக வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றது. கூட்டுறவுத்துறை வரையறுக்கப்பட்ட அதிகாரங்களையே கொண்டுள்ளன. நியதிச் சட்டங்கள் தயாரிக்கப்பட்டு நியதிச் சட்டக்குழு மூலம் பேரவைச் செயலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு அபிவிருத்தி நியதிச் சட்டம், கூட்டுறவு ஆணைக்குழு நியதிச் சட்டத்தையும் அடுத்த ஆண்டு சபையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வவுனியாவிலும், யாழ்ப்பாணத்திலும் பால் பதனிடும் தொழில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எமது அமைப்புக்கு தேவை என நாம் கோரிய நிதியில் 66 வீதமே ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் பல்கலைக்கழக உதவியுடன் விவசாய போதனாசிரியர்களுக்கு பயிற்சிகளும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அவர்களை 'பயிர் மருத்துவர்களாக' மாற்றுவதற்காக கணினி வசதிகள் வழங்கப்படுகின்றன.

மாங்குளம் நகரில் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் கட்டப்படும். அவ்வாறே மாகாண விவசாய திணைக்களமும் அங்கு கட்டப்படும். மாங்குளம் எமது தலைநகராக மாறிவருகிறது எனும் அடிப்படையில் இவை மேற்கொள்ளப்படுகின்றன.- என்றார் அவர்.

# வடக்கு மாகாண சபையில்...




தொகுப்பு– ஏகன் அநேகன்

வடக்கு மாகாண சபையின் 72 ஆவது அமர்வு வியாழனன்று இடம் பெற்றது. அப்போது அங்கு சுவையான சொல்லாடல்களும் இடம் பெற்றன. அவற்றின் சுருக்கக் குறிப்புகள் இங்கே.....

## பிரமாண அடிப்படை நிதி உதவியின் கீழ்

# கள்ள மாடுகளே திரும்பத் திரும்ப விற்று வாங்கி வழங்கப்படுகின்றன

## குற்றம் சாட்டுகின்றார் தவராசா



''மாகாணசபை உறுப்பினர்களுக்குரிய பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டின் கீழ் பயனாளிகளுக்கு மாடுகள்வழங்கும்விடயத்தில் விநியோகிக்கப்படும் மாடுகள் கள்ள மாடுகளாகி விட்டன. இத்திட்டத்தின் கீழ் வாங்கி பயனாளிகளுக்குவழங்கப்படும் மாடுகளை உறுதிப்படுத்துங்கள். களவெடுத்து விற்பனை செய்வோரிடமிருந்து மாடுகளை வாங்கி மக்களுக்கு உதவியாகக் கொடுக்காதீர்கள். ஒரு குறிப்பிட்ட தொகை மாடுகளே திரும்பத் திரும்ப விற்பதும் வாங்குவதுமாக சுற்றிக் கொண்டிருக்கின்றன. மாடுகளின் எண்ணிக்கை அதிகரித்ததாகத் தெரியவில்லை''.

-இப்படிக் கூறினார் எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா.

2,500 கோடி ரூபா பெறுமதியான இரணைமடு வேலைத் திட்டத்தை வேண்டாம் என்று சொல்லி விட்டு- மறுத்துவிட்டு இப்பொழுது ஏதோ செய்கிறார்கள். அதற்கு மாற்றுத்திட்டத்தை ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு கொடுப்பதாகச் சொன்னீர்கள். அந்தத் திட்டத்துக்கு மாற்றுத் திட்டம் எங்கே? அதைச் செய்யாமல் வெறும் 60 கோடி ரூபா, 80 கோடி ரூபா போன்ற தொகைகளுக்கு 'பட்ஜெட்' போட்டு சிலாகிக்கிறீர்கள். இரணைமடுத் திட்டத்தின் யோசனைகள் தொடர்பில் ஒரு நிபுணர் குழு போட்டீர்கள். அவர்களது யோசனைகளை மதிப்பிட்டுப் பாருங்கள்.

'பீற்றா பவர்', 'யூல் பவர்' தொடர்பில் கேள்விகோரல் நடைமுறை பின்பற்றப்பட்டனவா? கேள்வி கோரல் மூலம் இன்னும் அதிக நன்மையை மக்களுக்குப் பெற்றுக் கொடுத்திருக்கலாம்.

''மருதங்கேணியில் கூட்டுறவுச் சங்கம் கடிதத் தலைப்பை மாற்றிப்பயன்படுத்தியமைக்காக நடவடிக்கை எடுத்தீர்கள். ஆனால் பெரும் ஊழல் மோசடியில் ஈடுபட்ட கிளிநொச்சி பனை - தென்னை வள கூட்டுறவுச்சங்கம் தொடர்பில் உங்கள் அதிகாரிகள் எடுத்தநடவடிக்கை என்ன? ஏன் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை'' .- என்றார் அவர்.

# மாதம்பையிலிருந்து இங்கு கள்ளு தேவையா என்று அனந்தி விசனம்




காரைநகரிலிருந்து மீன்பிடித்துக் கொண்டுவரும் கடற்றொழிலாளர்களை தரகர்கள் வழி மறித்து மலிவான விலைக்கு அவற்றைக் கைப்பற்றுகின்றனர். அதேபோல வலிகாமம் விவசாயிகளும் பிரச்சினைகளைச் சந்திக்கின்றனர். விவசாயிகளை வழியில் மறிக்கும் தரகர்கள் மலிந்த விலைக்கு மரக்கறிகளைப் பறித்தெடுக்கின்றனர்.'' என்று விசனம் தெரிவித்தார் அனந்தி சசிதரன்.

''முன்னர் மீனின் விற்பனை விலையைப் பேணுவதில் தளபதி சூசை நடவடிக்கை எடுத்திருந்தார். நெல்லின் விற்பனை விலையை நிர்ணயிப்பதில் தளபதி பால்ராஜ் உரிய நடவடிக்கைகளை எடுத்திருந்தார். இரு தளபதிகளும் உற்பத்தியாளர்களையும் நுகர்வோரையும் பாதிக்காமல் சந்தை விலை நிர்ணயிக்கப்படுவதில் சரியான நடவடிக்கைகளை எடுத்திருந்தனர். இதனை முன்னுதாரணமாக நாமும் எடுக்கலாம்.

மாதம்பைக் கள்ளுத் தொடர்பாகப் பேசியுள்ளோம். குடும்பங்கள் பிரிவதற்கும் குடும்ப வன்முறைக்கும் மதுபாவனை காரணமாகவுள்ளது. புத்தளம் மாவட்டத்தின் மாதம்பை எனும் இடத்திலிருந்து செயற்கைக் கள்ளு வடக்கிற்குக் கொண்டு வரப்பட்டு விற்கப்படுகிறது. இது ஆரோக்கியத்துக்கு உதவாத செயற்கைக் கள்ளு ஆகும். இங்கே தரமான இயற்கைக் கள்ளு உற்பத்தியாளர்கள் இருக்கும்போது மாதம்பைக் கள்ளு இங்கு அவசியமில்லை. அதைத் தடுக்க வேண்டும்''.- எனவும் அனந்தி தெரிவித்தார்.

# உடன் பாலை விற்று விட்டு தெற்கிலிருந்து பால்மா அதிக விலைக்கு வாங்கும் அவலம்

## கவலை தெரிவிக்கின்றார் சர்வேஸ்வரன்



''விவசாய அமைச்சரின் புள்ளி விவரங்கள் எந்த அளவுக்கு சரியானவை எந்த அளவுக்குநிலைபேறானவை என்பதை அமைச்சர் தனது இறுதி உரையில் குறிப்பிட வேண்டும் '' என்றார் சர்வேஸ்வரன்.

பால் உற்பத்தி அதிகரித்ததாக சொல்கிறார் உள்ளூர்ப் பசுக்கள் மூலமாகவா அது கிடைத்தது. அல்லது வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்த பசு இனங்கள் இங்கு மக்களுக்கு கொடுக்கப்பட்டனவா எனவும் சர்வேஸ் கேட்டார்.

பால் உற்பத்தியில் இந்தியப் பசுக்கள் பெறப்பட முடியுமா? அவை எங்கள் காலநிலை சுற்றுச் சூழலுக்கு பொருத்தமாக அமையும்.

யாழ்கோ பாலுற்பத்தி கூட்டுறவு நிலையம் உள்ளது. பாலுற்பத்தியில் பொருள்களை செய்கிறார்கள். முன்னேற்றம் கண்டுள்ளது யாழ்கோ. இத்தகைய நிலையில் யாழ்கோ தலைவர் குற்றஞ் சாட்டப்பட்டு குற்றம் நிரூபிக்கப்படாமலேயே வீட்டுக்கு அனுப்பப்பட்டார்.

இப்பொழுது பாலுற்பத்திப் பொருள்கள் அங்கு உற்பத்தி செய்யப்படாமல், யாழ்கோ உள்ளூரில் பாலை கொள்வனவு செய்து நெஸ்லே நிறுவனத்துக்கு விற்பனை செய்யும் முகவராக மாறியுள்ளது எனவும் சர்வேஸ் கவலை வெளியிட்டுள்ளார்.

''உடன்பாலை மலிவாக விற்றுவிட்டு தரத்தை மோசமாக்கும் குறைந்த பால்மா வகைகளை உயர்ந்த விலைக்கு தெற்கிலிருந்து வாங்குகிறோம். இவ்விடத்தில் விவசாய கால்நடை அமைச்சு கவனம் செலுத்த வேண்டும். அதிக ஊழல் நிறைந்த துறையாக கூட்டுறவுத் துறை உள்ளது. போட்டா போட்டியாக சந்தைச் சூழலில் கூட்டுறவுத்துறை புதிய மாற்றங்களையும் சீரமைப்புக்களையும் செய்தால்தான் அத்துறை முன்னேறும்'' என்றார் சர்வேஸ்.

# சென்னை விமான நிலையத்தில் சிக்கிய ஒரு தொகைப் பணம்



சென்னை, டிசெ.24

சென்னை விமான நிலையத்தில் 1.34 கோடி ரூபா மதிப்புள்ள புதிய 2 ஆயிரம் ரூபாத்தாள்கள் மத்திய வருவாய் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முன்தினம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

வெளிமாநிலங்களுக்கு புதிய ரூபா தாள்கள் கடத்தப்படுகின்றன என்று மத்திய வருவாய் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து சென்னை விமான நிலையத்தில் சோதனை மேற்கொண்ட போது அந்தப் பணம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் 5 பேரைக் கைது செய்துள்ள மத்திய வருவாய் புலனாய்வுப் பிரிவினர் அவர்களிடம் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அரச அதிகாரிகள், தொழிலதிபர்கள் வீடுகளில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு புதிய ரூபா தாள்கள் கோடிக்கணக்கில் பிடிபடும் நிலையில், தற்போது விமான நிலையத்தில் சிக்கிய பணம் யாருடையது என்பது தொடர்பில் விசாரணை நடைபெற்று வருகிறது. (எ)



இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களையும், படகுகளையும் விடுவிக்குமாறு வலியுறுத்தி பாம்பனில் மீனவர்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதில் மீனவர் சங்கத் தலைவர்களுடன் மீனவர்களின் குடும்பத்தினரும் பங்கேற்றனர்.

# போயஸ் தோட்டத்துக்கு 'ஜெ' இன் உருவச் சிலை



சென்னை, டிசெ.24

போயஸ் தோட்ட இல்லத்துக்கு ஜெயலலிதாவின் முழு உருவச் சிலை நேற்று கொண்டு செல்லப்பட்டது.

இந்தச் சிலை போயஸ் தோட்டத்தில் வைக்கப்படுமா அல்லது வேறு இடத்தில் வைக்கப்படுமா என்பது குறித்து எந்தத் தகவலும் வெளியாகவில்லை.

சென்னை ஆயிரம் விளக்கில் உள்ள அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஜெயலலிதா கடந்த 5 ஆம் திகதி மரணம் அடைந்தார். அவரது உடல் சென்னை மெரினாவில் உள்ள எம்.ஜி.ஆர். சமாதி அருகே அடக்கம் செய்யப்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கான மக்கள் தினமும் ஜெயலலிதா சமாதியில் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இதனிடையே புதுச்சேரியில் முதன் முறையாக ஜெயலலிதாவின் சிலை நிறுவப்பட்டது. இந்த நிலையில், அமைச்சர் விஜயபாஸ்கர், ஜெயலலிதாவின் சிலையை உருவாக்கி இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த சிலை போயஸ் தோட்ட இல்லத்துக்கு நேற்றுக் காலை வாகனம் ஒன்றில் கொண்டு செல்லப்பட்டது.

அது போயஸ் தோட்டத்தில் வைக்கப்படுமா அல்லது கட்சித் தலைமை அலுவலகத்தில் வைக்கப்படுமா என்பது குறித்து உறுதியான தகவல் தெரியவில்லை. (எ)

# 5 சட்டசபைகளுக்கு பெப்ரவரியில் தேர்தல்

## தேர்தல் ஆணையகம் தீர்மானம்

டில்லி, டிசெ.24

இந்தியாவிலுள்ள ஐந்து மாநிலங்களுக்கும் எதிர்வரும் பெப்ரவரியில் தேர்தல் நடத்த இந்திய தேர்தல் ஆணையகம் முடிவு செய்துள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் 400 க்கும் மேற்பட்ட தொகுதிகள் உள்ளன. இதனால் அங்கு 7 கட்டமாக தேர்தல் நடைபெற உள்ளது.

உத்தரப்பிரதேசம், உத்தரகாண்ட், பஞ்சாப், கோவா, மணிப்பூர் ஆகிய 5 மாநிலங்களிலும் அடுத்த ஆண்டு சட்டசபைக்கான பதவிக்காலம் முடிவடைகிறது.

உத்தரப்பிரதேசத்தில் எதிர்வரும் மே மாதம் 27 ஆம் திகதிக்கு முன்னர் புதிய அமைச்சரவை பதவி ஏற்க வேண்டும். மற்றைய 4 மாநிலங்களிலும் எதிர்வரும் மார்ச் மாதம் 26 ஆம் திகதிக்கு முன்பு புதிய அமைச்சரவை பதவியேற்க வேண்டும்.




உத்தரப்பிரதேசத்துக்கு தேர்தல் நடத்த அவகாசம் இருப்பதால் மற்றைய 4 மாநிலங்களுக்குத் தேர்தல் நடத்தப்பட்ட பின்னர் தனியாக நடத்தப் படலாம் என்று முன்பு கூறப்பட்டது. இது பற்றி ஆய்வு செய்து வந்த தலைமைத் தேர்தல் ஆணையகம், ஒரே நேரத்தில் 5 மாநிலங்களுக்கும் தேர்தல் நடத்த முடிவு செய்துள்ளது.

பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் அதிகாரிகளை தயார்ப்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு அம்சங்களைக் கருத்தில் கொண்டு தலைமைத் தேர்தல் ஆணையகம் இந்த முடிவுக்கு வந்துள்ளது. இதன் காரணமாக உத்தரப் பிரதேசத்துக்கு சற்று முன்னதாக சட்டசபைத் தேர்தலை நடத்தும் சூழ் நிலை உருவாகியுள்ளது.

5 மாநிலங்களின் சட்டசபைத் தேர்தலை எப்போது நடத்துவது என்பது பற்றி தலைமைத் தேர்தல் ஆணையக அதிகாரிகள் கடந்த சில தினங்களாக ஆய்வு செய்தனர். அப்போது எதிர்வரும் பெப்ரவரி - மார்ச் மாதங்களில் 5 மாநிலங்களின் சட்டசபைத் தேர்தலை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. (எ)

# டில்லி துணை ஆளுநர் ராஜினாமா



டில்லி, டிசெ.24

டில்லி மாநில துணை ஆளுநர் நஜீப் ஜங், தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலுடன் மோதல் போக்கைக் கடைப்பிடித்து வருகிறார் என்று கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளான நஜீப் ஜங், தனது ராஜினாமாக் கடிதத்தை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதுதொடர்பாக டில்லி மாநில ஆளுநர் மாளிகை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்-,

'ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, பிரதமர் மோடி, முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் மற்றும் மாநில மக்களுக்கும் ஆளுநர் நஜீப் ஜங் நன்றி தெரிவித்தார். யூனியன் பிரதேசமான டில்லியின் துணைநிலை ஆளுநராக 2013 ஆம் ஆண்டு ஜூலை 9 ஆம் திகதி தொடக்கம் நஜீப் ஜங், பதவி வகித்து வருகிறார்.' என்றுள்ளது. (எ)

# பன்னீரைச் சந்தித்தார் புதிய தலைமைச் செயலர்

சென்னை, டிசெ.24

தமிழக புதிய தலைமைச் செயலாளராக நேற்று பொறுப்பேற்ற கிரிஜா வைத்தியநாதன் தமிழக முதல்வர் ஓ.பன்னீர் செல்வத்தை மரியாதை நிமித்தமாக நேற்றுச் சந்தித்துள்ளார்.

தமிழக புதிய தலைமைச் செயலாளராக நில நிர்வாகத்துறை ஆணையாளர் கிரிஜா வைத்தியநாதன் நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டார்.

தமிழகத்தின் தலைமைச் செயலாளராக கடந்த



ஜூன் 9 ஆம் திகதி நியமிக்கப்பட்டவர் பி.ராம மோகனராவ். மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் செயலாளராக இருந்து, தலைமைச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

கடந்த புதன்கிழமை அவரது வீடு, தலைமைச் செயலகத்தில் உள்ள அலுவலக அறை மற்றும் மகன், உறவினர்களின் வீடுகளில் வருமான வரித் துறையினர் சோதனை நடத்தினர். இதில் அதிக பணம், நகை மற்றும் முக்கிய ஆவணங்கள் சிக்கின.

இதையடுத்து, தலைமைச் செயலாளர் பதவியில் இருந்து ராமமோகன ராவை நீக்கவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட பல்வேறு கட்சியினர் வலியுறுத்தினர்.

இந்த நிலையில், சிரேஷ்ட ஐ.ஏ.எஸ். அதிகாரியான கிரிஜா வைத்தியநாதன், தமிழகத்தின் புதிய தலைமைச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து புதிய தலைமைச் செயலாளராக நேற்றுப் பொறுப்பேற்றுக் கொண்ட அவர் நேற்று காலை முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தை சந்தித்தார். (எ)

# விவாகரத்துக் கோரினார் சௌந்தர்யா ரஜனிகாந்த்

சென்னை, டிசெ.24

நடிகர் ரஜனியின் இளைய மகள் சௌந்தர்யா, விவாகரத்துக் கோரி குடும்பநல முதன்மை நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

தொழிலதிபர் அஷ்வினை 2010 ஆம் ஆண்டு திருமணம் செய்தார் சௌந்தர்யா. இந்தத் தம்பதியருக்கு வேத் என்கிற மகன் உள்ளார்.

இந்நிலையில், சௌந்தர்யா-அஷ்வின் இடையே கருத்து வேறுபாடு நிலவியதால் பிரிந்து வாழ்கின்றனர். முதலில் ஊடகங்களில் இதுகுறித்து வெளியான தகவலை டுவிட்டரில் உறுதிசெய்தார் சௌந்



தர்யா. தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் அவர் கூறியதாவது:-

"என்திருமணம் தொடர்பான செய்திகள் உண்மைதான். கடந்த ஒருவருடமாக இருவரும் பிரிந்து வாழ்கிறோம். விவாகரத்துத் தொடர்பில் பேசி வருகிறோம்." என்று கூறினார்.

இதையடுத்து தனது கணவரிடமிருந்து விவாகரத்துக் கோரி குடும்பநல முதன்மை நீதிமன்றத்தில் சௌந்தர்யா மனுத்தாக்கல் செய்துள்ளார். (எ)


# இரு குழந்தைகளை வாழ வைத்த 41 நாள் சிசு

## மெய்சிலிர்க்க வைக்கும் உடலுறுப்புத் தானம்

லண்டன், டிசெ.24

பிறந்து 41 நாள்களேயான குழந்தை தனது நுரையீரல் மற்றும் இரு சிறுநீரகங்களைத் தானம் செய்த சம்பவம் அனைவரையும் மெய்சிலிர்க்கச் செய்துள்ளது.

லண்டனில் கிரேட் ஓர்மன்ட் வைத்தியசாலையில் பிறந்த தியோ ஆர்மன்டி என்ற குழந்தை பிறந்த 40 நாள்கள் வரை நலமாக இருந்த நிலையில் திடீரென சுகவீனமுற்றுள் ளது. குழந்தைக்கு சிகிச்சை அளித்த வைத்தியர்கள் குழந்தை உயிர் பிழைப்பது கடினம் என்று தெரிவித்துள்ளனர்.





இதனால் ஆர்மன்டியின் பெற்றோர் குழந்தையின் உடல் உறுப்புகளைத் தானம் செய்வதற்கு முடிவு செய்துள்ளனர்.

இந்தநிலையில் பிறந்து சில மாதங்களே ஆன இமோகன் போல்டன் எனும் குழந்தைக்கு நுரையீரல் சரியாகச் செயற்படாத நிலையில் இரண்டு முறை சத்திரசிகிச்சைகள் செய்யப்பட்டும் அது பயனளிக்கவில்லை.


இந்தநிலையில் ஆர்மன்டியின் நுரையீரல் இமோகன் போல்டன் என்ற குறித்த குழந்தைக்குப் பொருத்தப்பட்டுள்ளது.

அதேவேளை மற்றொரு சிறுவனுக்கு இரண்டு சிறுநீரகங்கள் செயலிழந்ததால் ஆர்மண்டியின் இரு சிறு நீரகங்களும் பொருத்தப் பட்டுள்ளன.

பிறந்து 41 நாள்களிலே தனது உடற்பாகத்தைத் தானம் செய்து இரண்டு உயிர்களைக் காப்பாற்றிய குழந்தை சரித்திரம் படைத்து உயிரிழந்துள்ளது.

இந்தநிகழ்வால் தங்களது குழந்தையை இட்டுத் தாம் மிகவும் பெருமையடைவதாக ஆர்மண்டியின் பெற்றோர் மனித நேயத்துடன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## பிறவியிலேயே கை இல்லாதவருக்கு இறந்தவரின் கை பொருத்திச் சாதனை



வார்சா, டிசெ.24

முதன் முறையாக பிறவியிலேயே கை இல்லாதவருக்கு இறந்தவரின் கை பொருத்திப் போலந்து வைத்தியர்கள் சாதனை படைத்தனர்.

போலந்து நாட்டைச் சேர்ந்த 32 வயது வாலிபர் பிறவியிலேயே மணிக்கட்டுக்குக் கீழ் விரல்கள் அதாவது கை இல்லாமல் பிறந்தார். இதனால் மிகச் சிரமங்களை எதிர்கொண்டு வந்த அவர் விரோல்கலா மருத்துவப் பல்கலைக்கழக ஆஸ்பத்திரியில் அறுவைச் சிகிச்சை நிபுணர் ஆடம் டொமேன்ஸ் விகாவிடம் சென்று சிகிச்சை ஆலோசனை பெற்றார்.

அப்போது மரணம் அடைந்த ஒருவரின் கையைத் தானமாகப் பெற்று அறுவைச்சிகிச்சை மூலம் பொருத்த முடிவு செய்யப்பட்டது. அதன்படி இறந்தவரின் கை தானமாகப் பெறப்பட்டது.

அதைத் தொடர்ந்து கடந்த 15 ஆம் திகதி கை இல்லாத நபருக்கு வைத்தியர் ஆடம் தலைமையிலான குழுவினர் அறுவைச் சிகிச்சை மூலம் வெற்றிகரமாகப் பொருத்தினர். தற்போது பொருத்தப்பட்ட கைகளில் நரம்பு மற்றும் இரத்த ஓட்டம் சீராகி நல்ல முறையில் செயற்படுகிறது.

இந்த அறுவைச் சிகிச்சை 13 மணி நேரம் நடைபெற்றது. இதன் மூலம் உலகிலேயே முதன் முறையாக இறந்த வரின் கையை பொருத்தி போலந்து வைத்தியர்கள் சாதனை படைத்துள்ளனர்.

# எப்போதும் வெடிக்கலாம் அணு ஆயுத பெரும்போர்!

## போட்டிபோடும் நிலையில் அமெரிக்க, ரஷ்ய வல்லரசுகள்

வொஷிங்டன், டிசெ.24

வல்லரசு நாடுகளான அமெரிக்காவும் ரஷ்யாவும் தமது அணு ஆயுத பலத்தை போட்டி போட்டுக் கொண்டு விரிவாக்கம் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளன.

இதன்மூலம் எதிர்வரும் காலத்தில் பெரிய அணு ஆயுதப் போர் மூளும் அபாயம் ஏற்படவுள்ளதாக பாதுகாப்பு நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தநிலையில் அமெரிக்காவின் அணு ஆயுத பலம் விரிவாக்கப்படுவதுடன், சக்தி மயப்படுத்தப்பட வேண்டும் என்று புதிய ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.



அவர் தமது டுவிட்டர் பக்கத்தில் இதனைப் பதிவு செய்துள்ளார். அதில் -

அணு ஆயுதங்கள் தொடர்பில் உலகம் புரிந்து கொள்ளும் நிலைக்கு வரும்வரையில், அமெரிக்கா அணு ஆயுத பலம் பொருந்தியதாக இருக்க வேண்டும்.- என்றுள்ளது.

இதேவேளை, ரஷ்யாவின் இராணுவம் தமது அணுவாயுத பலத்தை அதிகரிக்க வேண்டும் என்று நேற்றுமுன்தினம் அந்த நாட்டின் ஜனாதிபதி விளாடிமிர் புடின் அறிவுறுத்தி இருந்தார்.

இந்தச் செய்தி வெளிவந்த சில மணிநேரங்களில் டொனால்ட் ட்ரம்ப் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இந்தநிலையில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெறுவதற்கு, விளாடிமிர் புடின் நேரடியாக உதவி புரிந்துள்ளார் என்று அமெரிக்க அரசு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவிடம் தற்போது 7 ஆயிரத்து 100 அணு ஆயுதங்கள் உள்ளன.

இந்தநிலையில் ரஷ்யாவிடம் 7 ஆயிரத்து 300 அணு ஆயுதங்கள் இருக்கின்றன என்று கூறப்படுகிறது.

எது எப்படி இருந்த போதிலும் இரு அணு ஆயுத வல்லரசுகளும் போட்டி போட்டுக் கொண்டு அணு ஆயுத பலத்தை அதிகரிப்பானது எதிர்காலத்தில் பெரிய அணு ஆயுதப்போருக்கு வித்திடும் என்று பாதுகாப்பு நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (எ)

## ஆஸியில் நடைபெற இருந்த தாக்குதல் முறியடிப்பு

மெல்போர்ன், டிசெ.24

ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் நடத்தப்பட இருந்த கிறிஸ்மஸ் தின தாக்குதல் ஒன்றை அந்த நாட்டுப் பொலிஸார் முறியடித்துள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் தொடர்புடையவர்களால் கிறிஸ்மஸ் தினத்தில் பெரிய குண்டுத் தாக்குதல் ஒன்று நடத்தப்பட இருந்தது.

இது தொடர்பில் ஆறு ஆண்களும், ஒரு பெண்ணுமாக 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் அனைவரும் 30 வயதுக்கு உட்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# நீரிழிவு, இருதய நோய்களை தடுக்குமாம் சூரியக் குளியல்!

லொஸ்ஏஞ்சல்ஸ், டிசெ.24

'நீரிழிவு மற்றும் இதய நோயை சூரியக் குளியல் தடுக்கும்' என்று அமெரிக்காவைச் சேர்ந்த நிபுணர் ஸ்டீபன் பண் போல் குழுவினர் மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

சூரியக் குளியல் உடல் நலத்துக்கு நல்லது என்ற பொதுவான கருத்து நிலவுகிறது.

இதனால் மேலை நாடுகளில் கடற்கரையில் மக்கள் சூரியக் குளியலில் ஈடுபடுகின்றனர்.

இத்தகைய சூரியக் குளியலால் நீரிழிவு மற்றும் இருதய நோய்கள் வராமல் தடுக்கப்படும் என்ற புதிய தகவல் ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.



உணவுப்பொருள்களில் உள்ள அதிகளவிலான கொழுப் பால்தைரோயிட் நோய் ஏற்படுகிறது.

உடலில் விற்றமின் டி குறைபாட்டால் அத்தகைய நோய் உருவாகிறது என்று விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

இத்தகைய வளர்சிதை நோயால் நீரிழிவு மற்றும் இருதய நோய்கள் ஏற்படுகின்றன.

எனவே இவற்றுக்கு மூலகாரணமாக விளங்கும் விற்றமின் டி சூரிய ஒளியில் அதிகளவில் உள்ளது.

எனவே சூரியக்குளியல் செய்வதன் மூலம் விற்றமின் டி அதிகரிக்கச் செய்து மேற்கண்ட நோய்கள் வராமல் தடுக்க முடியும். இந்த ஆய்வை அமெரிக்காவைச் சேர்ந்த நிபுணர் ஸ்டீபன் பண்போல் குழுவினர் செய்துள்ளனர். (எ)

## ஜேர்மன் தாக்குதல் நால்வர் கைது

பெர்ளின், டிசெ.24

ஜேர்மன் தலைநகர் பெர்ளினில் இடம்பெற்ற லொறித் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.


இதனை ஜேர்மனியின் அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர் என்று வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. கைதுசெய்யப்பட்ட நால்வரும் தாக்குதல் தாரியுடன் தொடர்பு கொண்டுள்ளனர் என்று விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. எவ்வாறாயினும் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பான விவரங்கள் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

பெர்ளின் நகரில் உள்ள சந்தை தொகுதி ஒன்றினுள் லொறி ஒன்று வேகமாக நுழைந்து, தாக் குதல் நடத்தியதில் 12 பேர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)



நல்லூர் பிரதேச செயலக நலன்புரி சங்கத்தின் ஒளி விழா நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் ஒளிவிழா சிறப்புரையை மானிப்பாய் பங்குத் தந்தை அருட்பணி ஜெயரஞ்சன் அடிகளார் நிகழ்த்தினார்.

இந்த விழாவின் சிறப்பு நிகழ்வாக சென் பெனடிக் வித்தியாலய மாணவர்கள், கோண்டாவில் நல்ல சமாரியன் தேவாலய சபையினர், கொக்குவில் கல்வாரி பூரண சுவிசேஷ சபையினர், மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்தினர், நல்லூர் நாற்சதுர சுவிசேஷ சபையினர் ஆகியோரது ஏற்பாட்டில் கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. (ஐ-32)



வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரனிடம் கல்மடு முஸ்லிம் கலவன் பாடசாலைச் சமூகம் தமது கல்லூரியின் பௌதீக வளத்தை அபிவிருத்தி செய்ய உதவி கேட்டிருந்தது. இதற்கு அமைவாக, பாடசாலையின் பௌதீக வளத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் அமைச்சரின் நிதியில் இருந்து பாடசாலையின் பிரதான வாயிலுக்கு தூண்கள் அமைத்து இரும்புக் கதவுகள் போடப்பட்டன.

இந்த வேலைத் திட்டத்துக்கு அமைச்சர் நன்கொடை நிதியில் இருந்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டது.

வேலைகள் நிறைவடைந்துள்ள நிலையில் அதற்கான காசோலையை யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள அமைச்சு அலுவலகத்தில் வைத்து வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் மற்றும் உத வித் திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் ஆகியோர் இணைந்து பாடசாலையின் அதிபரிடம் உத்தியோகபூர்வமாக வழங்கினர். (ஐ)





இலங்கை வங்கி ஊர்காவற்றுறை கிளையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஏ.ரி.எம். இயந்திர திறப்பு விழா கிளை முகாமையாளர் சி.செந்தூரன் தலைமையில் இடம்பெற்றது. இலங்கை வங்கியின் வட மாகாண உதவி பொது முகாமையாளர் ஜேம்ஸ் பிரபாகரன் மக்கள் பாவனைக்காக ஏ.ரி.எம். இயந்திரத்தைத் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் விருந்தினர் வரவேற்கப்படுவதையும் மங்கல விளக்கேற்றப்படுவதையும் படங்களில் காணலாம். (ஐ-54)






புலம்பெயர்ந்து லண்டனில் வசிக்கும் ஜெ.ஜெயரூபனின் பிறந்தநாளை முன்னிட்டு வழங்கிய நிதி மூலம் ஒட்டுசுட்டானில் மாற்றுவலுவுள்ளோரின் ஒளிரும் வாழ்வு அமைப்பின் உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் ஒட்டுசுட்டான் முல்லை வேளான் உரிமையாளரால் உயர்தரம்கற்கும்நான்குமாணவர்களுக்கு நிதிஉதவிகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராஜா மாணவர்களுக்கு உதவிகளை வழங்கினார். (ஐ-81)



அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் நாடகப் போட்டியில் தேசிய ரீதியில் சிறந்த ஒளியமைப்பாளருக்கான விருதை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாக பணிப்பாளரும் மானிப்பாய் இந்துக் கல்லூரி நாடக ஆசிரியருமாகிய எஸ்.ரி. அருள்குமரன் பெற்றுக்கொண்டுள்ளார். கொழும்பில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வில் தேசிய விருது பெறுவதைப் படத்தில் காணலாம். (ஐ-54)



இலங்கை சாரணிய சங்கத்தினால் மீரிகமவில் உள்ள சாரணிய பயிற்சி நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற வருடாந்த கூட்டத்தில் தேசிய பிரதம ஆணையாளர் பேராசிரியர் நிமால் டி சில்வா யாழ். மாவட்ட சாரண ஆணையாளர் செ.தேவரஞ்சனுக்கு உதவி பயிற்றுநர் தலைவருக்கான சான்றிதழை வழங்கிய போது... (இ)

# டேவிஸ் கோப்பை டென்னிஸ்: தலைவரானார் மகேஷ் பூபதி



புதுடில்லி, டிசெ.24

டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டிகளுக்கான இந்திய அணியின் தலைவராக மகேஷ் பூபதி நியமிக்கப்பட்டுள்ளார்.

டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டிக்கான இந்திய அணித் தலைவரை தேர்வு செய்வதற்கான அகில இந்திய டென்னிஸ் சங்க கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில், தற்போது தலைவராக உள்ள விஜய் அமிர்தராஜுக்கு பதிலாக நட்சத்திர வீரர் மகேஷ் பூபதியை தலைவராக நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு பெப்ரவரி 3 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை புனேயில் ஆசிய ஓசியானியா பிரிவு 1 டேவிஸ் கோப்பை போட்டி இடம்பெறவுள்ளது.

இந்தியா, நியூசிலாந்து மோதும் இப்போட்டிக்கு பின்னர் மகேஷ் பூபதி புதிய தலைவராக பொறுப்பேற்க உள்ளார் என அகில இந்திய டென்னிஸ் சங்க பொதுச் செயலாளர் ஹிரன்மோய் சட்டர்ஜி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நியூசிலாந்துக்கு எதிரான டேவிஸ் கோப்பை போட்டிக்கான அணியிலிருந்து போபண்ணா அதிரடியாக நீக்கப் பட்டுள்ளார். அவருக்கு பதிலாக இரட்டையர் பிரிவில் லியாண்டர் பயஸுடன், ஷாகீத் மைனேனி களமிறங்குவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# சுப்பர் ஸ்மாஷ் இருபதுக்கு 20 போட்டி சாதனை படைத்தது மகேலவின் அணி

டுபாய், டிசெ.24

நியூசிலாந்தில் சுப்பர் ஸ்மாஷ் இருபதுக்கு 20 போட்டிக்கான தொடர் நடைபெற்று வருகிறது.

இதில் கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் ஒடாகோ அணியும், சென்றல் டிஸ்ரிக் அணியும் மோதின.

இப்போட்டியில் முதலில் ஆடிய ஒடாகோ அணி 20 ஓவர் முடிவில் 3 விக்கெட் இழப்பிற்கு 249 ஓட்டங்கள் குவித்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்றல் டிஸ்ரிக் அணி 20 ஓவர் முடிவில் 4 விக் கெட் இழப்பிற்கு 248 ஓட்டங்கள் குவித்து 1 ஓட்ட வித்தியாசத்தில் தோல்வியைச் சந்தித்தது.

இதில் சென்றல் டிஸ்ரிக் அணிக்காக இலங்கை அணியின் முன்னாள் வீரரான ஜெயவர்த்தன வாணவேடிக்கை நிகழ்த்தினார்.

இதில் இரண்டு அணிகளின் ஓட்டங்களையும் சேர்த்துப் பார்க்கையில் 497 ஓட்டங்கள் பெறப்பட்டுள்ளன. இந்த ஓட்டப் பெறுதியைப் பெறுவதற்கு மகேல ஜெயவர்த்தன சிறந்த பங்களிப்பை வழங்கியிருந்தார்.



இந்தப் போட்டியில் ஜெயவர்த்தன 56 பந்தில் 12 பவுண்டரி, 7 சிக்சர்கள் என 116 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

இதற்கு முன்னர், கடந்த ஒகஸ்ட் மாதம் இந்தியா மற்றும் மேற்கிந்திய தீவு அணிகள் மோதிய போது, இந்திய அணி 244 ஓட்டங்களும், மேற்கிந்திய, தீவு அணி 245 ஓட்டங்கள் குவித்து வெற்றி பெற்றது.

இந்த இரண்டு அணிகளின் எண்ணிக்கையை சேர்த்த போது 489 ஓட்டங்கள் குவித்ததே சாதனையாக இருந்தது.

தற்போது அந்த முன்னாள் சாதனையான 489 ஓட்டங்களை ஒடாகோ மற்றும் சென்றல் டிஸ்ரிக் அணியினர் முறியடித்துள்ளனர்.



# பீட்டர்சனுக்கு இரண்டு ஆண்டுகள் தடை!

ஜோகனஸ்பர்க், டிசெ.24

தென்னாபிரிக்க உள்ளூர் இருபதுக்கு 20 போட்டிகளில் சூதாட்ட புகாரில் சிக்கிய அல்விரோ பீட்டர்சனுக்கு இரண்டு ஆண்டு தடை விதிக்கப்பட்டுள்ளது.

'ராம் ஸ்லாம்' என்ற உள்ளூர் இருபதுக்கு 20 போட்டி தென்னாபிரிக்காவில் இடம்பெற்றது. இதன் 2014-2015 ஆம் ஆண்டுப் போட்டிகளில் சூதாட்டச் சர்ச்சை வெடித்தது. இதுகுறித்து தென்னாபிரிக்க கிரிக்கெட்டின் ஊழல் தடுப்புக்குழு விசாரித்தது.

இதில் தென்னாபிரிக்க முன்னாள் வீரர் குலாம் பாடி (20 ஆண்டுகள்), டிலோகிலேவுக்கு (12 ஆண்டு) தடை விதிக்கப் பட்டது. இவ்விடயத்தில் ஹைவெல்ட் லயன்ஸ் அணிக்காக விளையாடும் முன்னாள் தென்னாபிரிக்க வீரர் அல்விரோ பீட்டர்சன், (வயது 35) மீதும் புகார் எழுந்தது. இதை முதலில் மறுத்த பீட்டர்சன், பின்னர் விசாரணையில் ஒப்புக் கொண்டார்.

இதையடுத்து பீட்டர்சனுக்கு இரண்டு ஆண்டு தடை விதிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு நவம்பர் 12 வரை சி.எஸ்.ஏ. அல்லது சர்வதேச கிரிக்கெட் சபை நடத்தும் எவ்விதமான போட்டியிலும் அவர் பங்கேற்க முடியாது. பீட்டர்சன் இந்த விவகாரத்தில் சிக்கி தண்டனை பெறும் 6 ஆவது வீரராவார்.

இது குறித்து பீட்டர்சன் தெரிவித்தவை வருமாறு:-

குலாம் பாடி மற்றும் 'பிக்சிங்' நபர்களுடன் கூட்டத்தில் பங்கேற்றேன். அதேநேரம், போட்டியில் சூதாட்டத்தில் ஈடுபட்டு பணம் பெறும் நோக்கத்தில் இதைச் செய்யவில்லை. இதுகுறித்த தகவல்களை, தென்னாபிரிக்க கிரிக்கெட் (சி.எஸ்.ஏ.) நிர்வாகிகளுக்கு தெரிவித்திருக்க வேண்டும். இதை நான் செய்யவில்லை. இது தவறான முடிவு என்பதை தற்போது உணர்கிறேன்.

சி.எஸ்.ஏ. அளித்த தண்டனையை ஏற்றுக் கொள்கிறேன். என்னைப் பார்த்து மற்ற வீரர்கள் பாடம் கற்றுக்கொள்வர் என நம்புகிறேன். எனது குடும்பத்தினர், நண்பர்கள், சக வீரர்கள், ரசிகர்களிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.

## உதைபந்தாட்டப் போட்டி

பருத்தித்துறை, டிசெ.24

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது.

திக்கமுனை மைதானத்தில் இன்று பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகும் போட்டியில் 46 விளையாட்டுக் கழகங்கள் பற்றுபற்றுகின்றன. இன்று நடைபெறவுள்ள போட்டியில் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சிறி அம்பாள் 'பி' யும், பொலிகை பாரதியை எதிர்த்து கலட்டி ஐக்கியமும் மோதுகின்றன. (க-30)

சாவகச்சேரி, டிசெ.24

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கடந்த புதன் கிழமை தேசிய மட்டத்தில் சாதனை படைத்த வட மாகாண வீர, வீராங்கனைகளை கௌரவிக்கும் வர்ண இரவு நிகழ்வு சாவகச்சேரியில் இடம் பெற்றது.

சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வு வட மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் த.குருகுலராஜா கலந்து சிறப்பித்திருந்தனர்.

மேலும், நிகழ்வில் வட மாகாண சபை உறுப்பினர்களான ஆர்னோல்ட்,கேசவன் சயந்தன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கிருஷ்ணகுமார் ஆகியோரும் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் வடமாகாண பாடசாலைகளைச் சேர்ந்த நூற்றுக்கனக்கான வீர, வீராங்கனைகள் கௌரவிக் கப்பட்டனர். இந் நிகழ்வில் வடமாகாண பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (க-21)







# ஐ.சி.சியின் சிறந்த வீரரானார்

# தமிழக வீரர் அஷ்வின்



டுபாய், டிசெ.23

துடுப்பாட்டம், பந்துவீச்சு என இரு பிரிவுகளிலும் அசத்தி ஜொலித்துவரும் அஸ்வின் இந்த ஆண்டின் சிறந்த வீரர் மற்றும் சிறந்த டெஸ்ட் வீரர் என இரு பிரிவுகளில் ஐ.சி.சி. விருதுக்கு தேர்வு செய்யப் பட்டுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) சார்பில் சிறந்து விளங்கும் நட்சத்திரங்க ளுக்கு ஆண்டுதோறும் பல்வேறு பிரிவுகளில் விருது வழங்கப்படுகிறது.

அந்த வகையில் 2016 ஆம் ஆண்டுக்குரிய விரு துகள் நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டன.

இதற்காக, கடந்த 2015 செப்டெம்பர் 14 ஆம் திகதி முதல் 2016 செப்ரெம்பர் 20 வரையில் நடந்த போட் டிகளில் வீரர், வீராங்கனை கள் வெளிப்படுத்திய திறமைகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

இதில், இந்தியாவின் சகலதுறை ஆட்டக்காரரான தமிழகத்தைச் சேர்ந்த அஸ்வின் இந்த ஆண்டின் சிறந்த வீரராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ஐ.சி.சி. நிர்ணயித்த காலத்தில் இவர் 8 டெஸ்டில் பங்கேற்று 48 விக்கெட் வீழ்த்தியுள்ளார். அத்துடன், 336 ஓட்டங் களைக் குவித்துள்ளார். இது தவிர, 19 இருபதுக்கு 20 போட்டிகளில் 27 விக்கெட் கைப்பற்றி உள்ளார்.

சமீபகாலமாக டெஸ்ட் அரங்கில் மிரட்டி வரும் அஸ்வின், கடந்த ஜூலை-ஓகஸ்டில் மேற்கிந் தியத் தீவுகள் மண்ணில் நடந்த 4 போட்டிகளில் 17 விக்கெட் வீழ்த்தியதுடன் 2 சதம் உட்பட 235 ஓட்டங்களையும் குவித் திருந்தார்.

இந்த ஆண்டு மட்டும் 12 டெஸ்டில், 72 விக்கெட் கைப்பற்றினார். அத்துடன், டெஸ்ட் அரங்கில் அதிவே கமாக 200 டெஸ்ட் விக் கெட்டுகளை வீழ்த்திய இரண்டாவது பந்துவீச்சாளர் என்ற பெருமையையும் பெற்றார்.

தற்போதைய டெஸ்ட் போட்டிகளில் சிறந்த பந்துவீச்சாளர், சகலதுறை ஆட்டக்காரர் வரிசையில் அஸ்வின்தான் முதலி டத்தில் உள்ளார்.

மேலும், ராகுல் ராவிட் (2004), சச்சின் (2010) இருவருக்கும் பின்னர் ஐ.சி.சி.யின் சிறந்த வீரர் விருது பெறும் இந்திய வீரர் அஸ்வின் தான். உலகளவில் இந்த விருதை வெல்லும் 12 ஆவது வீரர் என்ற பெரு மையையும் அஸ்வின் பெற்றுள்ளார்.

அத்துடன், இந்த ஆண் டின் சிறந்த டெஸ்ட் வீரரா கவும் அஸ்வின் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இதையடுத்து, முன்னாள் இந்திய வீரர் ராகுல் ராவிட் (2004)க்குப் பின்னர் ஒரே ஆண்டில் சிறந்த வீரர் மற்றும் டெஸ்ட் வீரர் விருது வெல்லும் இரண்டா வது இந்திய வீரர் என்ற பெருமையையும் பெற்றுள் ளார்.

இந்த விருது குறித்து அஸ்வின் தெரிவித்தவை வருமாறு:-

ஒரே ஆண்டில் ஐ.சி.சி. யின் இரண்டு விருதுகளை வென்றது சிறப் பானதாகும். ராகுல் ராவிட், சச்சினுக்குப் பின் இந்த விருதை வெல்லும் இந்திய வீரர் என்பது பெருமையாக உள்ளது. இந்த வெற்றியை எனது குடும்ப உறுப்பினர்க ளுக்கு சமர்ப் பணம் செய்கி றேன்.

அவர்கள் தான், எனது வெற்றிக்கு தூணாக இருந்தனர். சக வீரர்கள், பயிற்சி யாளர் கும்ளேயின் ஆதரவுக்கும் நன்றி என்றும் தெரி வித்துள்ளார்.

அஸ்வின் 8 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 48 விக்கெட்டுகளையும் 336 ஓட்டங்களையும் குவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இவ்வாண்டு பிபா தரவரிசையில் முதல் இடத்தில் ஆர்ஜென்டினா



புவனேஸ்வர், டிசெ.24

பிபா உதைபந்து தரவரி சையில் அர்ஜென்டினா 2016 ஆம் ஆண்டை முதல் இடத்துடன் வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

பிரேசில் 2 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

அமெரிக்காவில் நடை பெற்ற கோபா அமெரிக்க உதைபந்தாட்டத் தொடரில் சிலியிடம் தோல்விய டைந்து 2 ஆவது இடம் பிடித்த அர்ஜென்டினா, இந்த வருடம் முடிவில் முதல் இடத்தோடு நிறைவு செய்துள்ளது.

அர்ஜென்டினா இந்த ஆண்டில் 15 போட்டிகளில் விளையாடி 10 இல் வெற்றி பெற்றுள்ளது. மூன்று போட்டியில் தோல்வியும், இரண்டு போட்டிகளை சமநிலையும் செய்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் பெல்ஜியத்திடம் இருந்து முதல் இடத்தை பறித்துக் கொண்ட ஆர்ஜென்டினா, தொடர்ந்து அந்த இடத்தில் நீடித்து வருகிறது.

கடந்த ஆண்டு முதல் இடத்தைப் பிடித்த பெல்ஜியம் 4 ஆவது இடத்திற்கு பின்தங்கியுள் ளது.

பிரேசில் 2 ஆவது இடத்திற்கு முன்னேற்றம் அடைந்துள்ளது.

ஜேர்மனி 3 ஆவது இடத்திலும், பெல்ஜியம் 4 ஆவது இடத்திலும், சிலி ஐந்தாவது இடத்திலும், கொலம்பியா 6 ஆவது இடத்திலும், பிரான்ஸ் 7 ஆவது இடத்திலும், போத்துக்கல் 8 ஆவது இடத்திலும், உருகுவே 9 ஆவது இடத்திலும், ஸ்பெயின் 10 ஆவது இடத்திலும் உள்ளன.

## டெஸ்ட் அணியில் கோஹ்லி புறக்கணிக்கப்பட்டது ஏன்?

டுபாய், டிசெ.24

இந்திய டெஸ்ட் அணி யின் தலைவர் விராட் கோஹ்லி இந்தாண்டு அபா ரமாக விளையாடியும் ஐ.சி.சி டெஸ்ட் கனவு அணியில் புறக்கணிக்கப் பட்டுள்ளார்.

அவர் ஏன் புறக்கணிக்கப் பட்டார் என்று தற்போது கேள்வி எழுந்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) ஆண்டின் சிறந்த வீரர், டெஸ்ட் வீரர், ஒருநாள் போட்டி வீரர் போன்ற விருதுகளை அறிவித்திருந்தது.

இதேவேளை, ஐ.சி.சி. கனவு அணிகளையும் அறிவித்திருந்தது.

இதில் டெஸ்ட் அணிக்கு தலைவராக இங்கிலாந்தின் அலைஸ்டர் குக் தெரிவா கியுள்ளார். ஜோரூட், டேவிட் வோர்னர், வில்லி யம்சன், அடம் லோக்ஸ், ஜானி பேர்ஸ்டோ, பென்ஸ் டோக்ஸ், அஸ்வின், ஹேரத், மிட்செட் ஸ்டார்க், ஸ்டெயின், 12 ஆவது வீரர் ஸ்டீவ் சுமித் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

ஆனால், இந்த ஆண்டில் 3 இரட்டைச் சதம் அடித்த இந்திய டெஸ்ட் அணி தலைவர் விராட் கோஹ்லி டெஸ்ட் கனவு அணியில் இடம் பெறவில்லை. அவர் புறக்கணிக்கப்பட்டுள்ளார். சமீபத்தில் இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் விராட் கோஹ்லி அபாரமாக விளையாடினார்.

ஆனால், அவருக்கு இடம் கிடைக்காமல் இங்கிலாந் தின் ஜோரூட் இடம் பெற்றுள்ளார்.



அதற்கு ஐ.சி.சி. வீரர்களின் செயல்பாடு களை ஆராய்ந்த காலகட் டமே காரணமாகும்.

கடந்த 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 14 ஆம் திகதி முதல் 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 ஆம் திகதி வரையிலான காலகட்டத்தில் விராட் கோஹ்லி 8 ஆட்டங்களில் ஏழு சதம், ஒரு அரை சதம் அடித்தார். ஆனால், இந்த காலகட்டத்தில் ஜோரூட் 14 ஆட்டங்களில் 1272 ஓட்டங்களை எடுத்துள்ளார். இதில் 2 சதம் 9 அரை சதங்களும் அடங்கும்.

இதனால், விராட் கோஹ்லிக்கு ஐ.சி.சி. டெஸ்ட் அணியில் இடம் கிடைக்கவில்லை. இந்த ஆண்டு செப்ரெம்பர் 2 ஆம் திகதி முதல் தற்போது வரை விராட் கோஹ்லி 8 ஆட்டங்களில் 967ஓட்டங்களைக் குவித் துள்ளார். இதில் 3 சதம் 2 அரை சதங்களும் உள் ளடங்கும். சராசரி 80.33 ஆகும்.

டெஸ்ட் அணியில் தேர்வு ஆகாவிட்டாலும், விராட் கோஹ்லி ஐ.சி.சி ஒரு நாள் போட்டி அணிக்குத் தலைவராகத் தேர்வு செய்யப் பட்டுள்ளார்.

# கருணாநிதி வீடு திரும்பினார்

சென்னை,டிசெ.24

சென்னை காவேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த தி.மு.க. தலைவர் கருணாநிதி நேற்று மாலை வீடு திரும்பினார்.

மூச்சுத்திணறல் காரணமாக கடந்த 15ஆம் திகதி காவேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வந்த கலைஞர் கருணாநிதி பூரண நலம் பெற்று விட்டமையால் நேற்று மாலை சென்னை கோபாலபுரத்தில் உள்ள அவரது இல்லத்துக்குத் திரும்பினார். கருணாநிதியை முழு ஓய்வு எடுக்குமாறு வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர். கருணாநிதிக்கு வீட்டிலேயே சிகிச்சை அளிக்கப்படும் எனவும் பார்வையாளர்களைச் சந்திப் பதை அவர் தவிர்க்க வேண் டும் எனவும் மருத்துவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## பட்ஜெட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) க் கடும் விமர்சனங்களை முன்வைத்தனர்.

மாகாண சபை உறுப்பினர்கள் விவாதத்தில் பங்குபற்றி உரையாற்றும்பொழுது,முல்லை மாவட்ட உறுப்பினர் ரவிகரன் முல்லைத்தீவுக்குஅண்மையில் விஜயம் செய்திருந்த மத்திய மீன்பிடிஅமைச்சர்மஹிந்தஅமரவீரபொய்யானவாக்குறுதிகளை வழங்கிச் சென்றிருந்தார் எனத் தெரிவித்தார். முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் பிரதேசங்களிலும்ஏனைய இடங்களிலும் தமிழ் மீனவர்களின் கடற்றொழிலும்வாழ்வாதாரங்களும் கடலில் ஆக்கிரமிப்புச் செய்து கடல் வளத்தைச் சூறையாடிச் செல்லும் தென்பகுதி மீனவர்களால் எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதைதனது உரையில் ரவிகரன் விளக்கினார். அத்தகைய சூழ்நிலையில் முல்லைத்தீவுக்கு அண்மையில் விஜயம் செய்த மத்திய மீன்பிடி அமைச்சர் மஹிந்த அமரவீர மூல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளையும் மீனவக் குடும்ப அங்கத்தவர்களையும் சந்தித்து 'இனிமேல் தென்பகுதி மீனவர்களால்தமிழ் மீனவர்கள் வாழ்வாதார ரீதியாகவும் தொழில் ரீதியாகவும் பாதிக்கப்படுகின்றமை நிறுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.'– என்று வாக்குறுதி அளித்துச் சென்றிருந்தார். ஆனால் மஹிந்த அமரவீர முல்லைத்தீவுக்கு வந்து சென்றமையின் பின்பு, மேலும் தீவிரமாகத் தென்பகுதி மீனவர்களின் கடல்வழியான சூறையாடல்களும் அத்துமீறல்களும் அதிகரித்தன எனச் செய்திகள் வெளியாகின.

இத்தகைய பின்புலத்தில் முல்லை. மாவட்ட உறுப்பினர் ரவிகரன்,மஹிந்தஅமரவீரவின் நடவடிக்கைகளைக் கண்டித்ததுடன் அமைச்சர் போலியான, பொய்யானவாக்குறுதிகளையே த்ந்திருந்தார் என்றும் அவர் முல்லை. மாவட்ட மீனவர்களை ஏமாற்றியுள்ளார் என்ற சாரப்படவும் தனது உரையில் குறிப்பிட்டார்.

சபை உறுப்பினர்களின் உரைகளும் விமர்சனங்களும் நிறைவு பெற்ற பின்பு, அமைச்சர் டெனிஸ்வரன் தனது பதிலுரையில் மத்திய மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீரவை நியாயப்படுத்தும் பாணியில் கருத்துகளை முன்வைத்தார். அச்சமயம், அமைச்சர் டெனிஸ்வரன் சார்ந்து நிற்கும் தமிழீழ விடுதலை இயக்கத்தின்(ரெலோ) சிரேஷ்ட தலைவரும் மாகாண சபை உறுப்பினருமான சிவாஜிலிங்கம் சட்டென சீறி எழுந்தார்.

அமைச்சர் டெனிஸ்வரனை அவரது கருத்துக்காகக் கண்டித்தமையுடன், பொய் கூறி மீனவர்களை ஏமாற்றிய மஹிந்த அமரவீரவை ஆதரிக்க வேண்டாம் என்று காட்டமாகக் கூறினார்.

" பொய் கூறிய மத்திய மீன்பிடி அமைச்சர் மஹிந்த அமரவீர வுக்காக வக்காலத்து வாங்க வேண்டாம்" என்றும் ரவிகரன் உரத்துக் கூறினார்.

"இப்படிப்பொய்கூறியமத்திய மீன்பிடிஅமைச்சரை ஆதரித்து எமது மாகாண அமைச்சர் கதைத்தால் அமைச்சர் டெனிஸ்வரனின் அமைச்சுக்குரிய ஒதுக்கீடு தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தியே அங்கீகரிக்க வேண்டும் என அவைத் தலைவரைக் கோர வேண்டிவரும்'' என டெனிஸ்வரனுக்கு தீவிர எச்சரிக்கை விடுத்தார் சிவாஜி.

சிவாஜியின் அணுகுமுறையை சற்றும் எதிர்ப்பாராத சிவாஜியின் அதே கட்சியான ரெலோவைச் சேர்ந்த மாகாண அமைச்சர்டெனிஸ்வரன்சற்றுத் தடுமாறி ஒருவாறு சுதாகரிக்க முற்பட்டார்.

இந்நிலையில் சிவாஜியும் ரவிகரனும் வரவு – செலவுத் திட்டவிவாதத்தின் இறுதிக்கட்டத்தில் சூடேறிக் குமும்பிப் போயுள்ளமையை உணர்ந்த அவைத் தலைவர்,"உங்கள்ஒதுக்கீடுகள் தொடர்பில் விவாதமும் உங்கள் பதிலுரையும் நிறைவடைந்துவிட்டன. நேரமும் போய்விட்டது. தயவுசெயது உடனே பிரேரியுங்கள், பிரேரியுங்கள்" – என்று துரிதப்படுத்தினார்.

அமைச்சர் டெனிஸ்வரன் துரிதகதியில்தனது அமைச்சின் ஒதுக்கீடு தொடர்பான முன்மொழிவை சபையில் மேற்கொண்டார். எதிர்க் கட்சித் தலைவர் அதனை வழிமொழிந்தார். அதனையடுத்து அவைத் தலைவர் குறிப்பிட்ட அமைச்சுக்கான ஒதுக்கீட்டை சபை ஏற்று அங்கீகரிக்கிறது என்று அறிவிக்க முற்பட்ட வேளை –

சிவாஜி மீண்டும் எழுந்து 'அவ்வாறு நீங்கள் அறிவிக்க முடியாது' என்று ஆட்சேபித்தார்.

"அமைச்சின்ஒதுக்கீடுதொடர்பான பிரேரணைக்கு ஏதாவது எதிர்ப்புக்கள் உள்ளனவா? என முதலில் கேளுங்கள். அவ்வாறு இல்லையெனக் கண்டால் மட்டுமே சபை அங்கீகரிக்கிறது என்று அவைத் தலைவராகிய நீங்கள் அறிவிக்க முடியும்." – என்றார் சிவாஜி.

அதை ஏற்றுக் கொண்ட அவைத்தலைவர் சி.வீ.கே. ஏதாவது ஆட்சேபனைகள், எதிர்ப்புக்கள் உள்ளனவா? எனக் கேட்க சிவாஜிலிங்கம் 'என்னுடைய ஆதரவு பிரேரணைக்கு இல்லை' என்று அறிவித்தார்.

உடனே அமைச்சர் டெனிஸ்வரன் 'அவரது எதிர்ப்பைப் பதிவிலிடுங்கள் மேலும் வேறுயாராவது எதிர்த்தாலும் அதையும் பதிவு செய்யுங்கள்.' – என்றார்.

ஆனால் அவைத் தலைவர் சிவஞானம் "சிவாஜிலிங்கம் ஒலிவாங்கி 'Off' நிலையிருக்கும் போது அவர் கூறியமையை ஏற்றுக்கொள்ளமுடியாது"–என்று சொன் னார்.

'அது சும்மா சொல்கிறார் கௌரவ சிவாஜிலிங்கம்' – என்றும் கூறி சி.வீ.கே.சிரித்தார்.

எனினும் சிவாஜியிடமிருந்து 'இடியோ, மின்னலோ' தொடங்கி விடுமோ எனப் பயந்த ஏனைய அனைத்து உறுப்பினர்களுடன் அவைத்தலைவரும் துரிதமாக, ஏகமனதாக மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக – வாணிப, கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சின் ஒதுக்கீடு ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது என அறிவித்தார். சிவாஜியைத் தவிர வேறு எவரும் எதிர்ப்புத் தெரிவிக்காதமையால் ஒதுக்கீடு அங்கீகரிக்கப்பட்டது.

அத்துடன், வடக்கு மாகாண சபையின் முழு வரவு – செலவுத் திட்டமும் நிறைவேறியது. (உ)

## நேற்றைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கார்ந்திருந்து மாகாண சபை அமர்வை அவதானித்துக் கொண்டிருந்த அதிபர் சேவைப் பரீட்சையில் முறைப்படியாக சித்தியடைந்த அதிபர் சங்கப் பிரதிநிதிகள் ஆகிய இருதரப்பினரின் செயற்பாடுகளாலும் இந்த நிலைமை ஏற்பட்டது.

நேற்றையதினம் சபையில் உரையாற்றிய உறுப்பினர்கள் பலரும் இந்த இருதரப்பு அதிபர்களின் நிலைமைகளையும் எடுத்துரைத்துபிரஸ்தாபித்தனர். இரண்டு தரப்பினரையுமே தாஜா செய்யும் வகையிலேயே பெரும்பாலான உறுப்பினர்களின் கருத்துக்கள் அமைந்திருந்தன.

எனினும், இந்த அதிபர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தீர்க்கமான ஆலோசனையை எந்த உறுப்பினரும் கூறவில்லை.

நேற்று மாலை 6 மணிக்கு 'பட்ஜெட்' விவாதம் முடிவை எட்டும் நிலையை அண்மித்தது. வடமாகாண முதல்வர் நிதிக் கூற்று அறிக்கையின் முழுமையான வடிவத்தையும் பிரேரித்தார். அதனை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா வழிமொழிய எவ்வித எதிர்ப்புக்களும் இல்லாமையால் அது ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து சபையை அடுத்த அமர்வுக்கு ஒத்திவைக்க அவைத் தலைவர் தயாரானார். அச்சமயம் திடீரென எழுந்தார் வடமாகாண சபையின் ஒரேயொரு பெண் உறுப்பினரான திருமதி அனந்தி சசிதரன்.

"கௌரவ சபாநாயகர் அவர்களே!" என்று அவைத் தலைவரை விளித்துக்குரல்கொடுத்தார்.

''ஏன் அவைத் தலைவர் என்று அழைக்காமல் சபாநாயகர் என அழைக்கிறீர்கள்?" என சக உறுப்பினர்கள் சிலர் வினவ –

"அவரை சபாநாயகர் என்று அழைத்தால் அவரது தரமும் சபையின் தரமும் அதிகரிக்கும் என்பதால்தான்...'' என்றார் அனந்தி.

தொடர்ந்து 'சீரியஸாகவே' பேசிக்கொண்டிருந்த அனந்தி –

" கடமை நிறைவேற்று அதிபர்கள் வியாழக்கிழமை இங்கு வந்த போது அவர்களை பேரவைச் செயலகத்துக்குள்ளே வருவதற்கு அவைத்தலைவரின் உத்தரவுப்படி பேரவைச்செயலக அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. அவர்கள் வெளியி லேயே நிற்க வேண்டியதாயிற்று. ஆனால், பரீட்சை எழுதிச் சித்தி யெய்திய பல அதிபர்கள் இன்று உள்ளே நுழையவும் சபை நடவடிக்கைகளைப் பார்க்கவும் அனுமதித்துள்ளீர்கள். இரு தரப் பும் சமமாக நடத்தப்படவில்லை. இது ஒரு பாரபட்சமான நடவடிக்கையாகும்" என்று தனது மனக்குமுறலை வெளியிட்டார்.

"அவர்கள்வெளியேநின்றவர்கள் வெளியேயே நின்றார்கள். இவர்களில் சிலர் உள்ளே வந்தார்கள். உள்ளே இருந்தார்கள். இவற்றில் எவற்றுக்கும் நான் பொறுப்பு அல்லன். ஆனால், இன்று அதிபர்கள் சிலரை உள்ளே வர நான் அனுமதி வழங்கியமை உண்மையே! இதில்தவறுகள்நடந்திருக்கலாம். தப்பு அபிப்பிராயங்கள் ஏற்பட்டிருக்கலாம். அதற்கு நான் வருத்தம் தெரிவிக்கின்றேன்." என்று அனந்தியின் மனக் கவலைக்கு ஆறுதல் அளிக்க முற்பட்டார் சிவஞானம்.

"இங்கு ஒருசிலர் இன்று வந்த அதிபர்களை உள்ளே அனுமதித்துவிட்டு அவர்கள் பார்த்திருக்க அவர்களை ஆதரித்துப் பேசுவது என்பது, ஏற்கனவே திட்டமிடப்பட்ட தமது நலன்களை நிறுவிக்கொள்வதற்காக சபை நடவடிக்கைகளைப் பயன்படுத்தும் தவறான அணுகு முறையாகும்" என்று அதிபர்களை தமது செல்வாக்கு மூலமாக உள்ளே அழைத்து வந்த ஒரு சில மாகாண சபை அங்கத்தவர்களை காட்டமாகக்கண்டித்தார் அய்யூப் அஸ்மின்.

''நடைமுறையில் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத செயற்பாடுகளும் அணுகு முறைகளும் இம் மாகாண சபையில் நிலவுகின்றன. அதற்காக வருத்தம் தெரிவிக்கிறேன்" என்று அனந்தியை நோக்கி அவைத் தலைவர் ஆறுதல் கூற, அனந்தி ஆறுதலும் சமாதானமும் அடைந்தார். (உ)

## அதிபர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சித்தியடையாத பதில் அதிபர்களைக் கொண்டிருக்கும் பாடசாலைகளை அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த அதிபர்களைக் கொண்டு நிரப்புவது என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கல்விக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்தன.

மத்திய கல்வி அமைச்சின் வழிகாட்டுதலுக்கு அமைவாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் –

கடமை நிறைவேற்று அதிபர்களின் குழு ஒன்று நேற்று முன்தினம் வடக்கு மாகாண சபை அமர்வு நடைபெற்ற சமயம் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது.

இதனையடுத்து போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த அதிபர்களுக்குப் பதவி நியமனம் வழங்கும் முடிவை தள்ளிப் போடுவதற்கு வடக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சர் தீர்மானித்திருக்கிறார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதனையடுத்தே நீதிமன்றத்தை நாடுவதற்கான முஸ்தீபுகளில் புதிய அதிபர்கள் சங்கம் இறங்கியிருக்கிறது எனத் தெரியவந்தது.

புதிய அதிபர்கள் நியமனம் கடந்த, ஏழு மாதங்களாக இழுபட்டு ஒருவாறு தீர்வு வருகிறது என எதிபார்க்கப்பட்ட சமயத்தில், மீண்டும் அது இழுபறிக்கு உள்ளாகியிருப்பது குறித்து பரீட்சையில் சித்தியடைந்து புதிய அதிபர் பதவிக்குத் தகுதிபெற்றுள்ளோர் விசனம் வெளியிட்டுள்ளனர்.

நேற்று அவர்களின் பிரதிநிதிகள் வடக்கு மாகாண சபைக்கு வருகைதந்து மாகாணசபை உறுப்பினர்கள், அமைச்சர்கள், முதலமைச்சர் எனப் பலரிடம் தங்களின் எதிபார்ப்புக் குறித்து முறைப்பாடு செய்தனர். (உ)

## ரவிராஜ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உளவுத்துறையின் பிரதிப் பணிப்பாளரும், தற்போதைய பணிப்பாளருமான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிலந்த ஜயவர்த்தன கலந்துரையாடினார் எனவும் அவர் நீதிமன்றில் குறிப்பிட்டார்.

நடராஜா ரவிராஜ் படுகொலை தொடர்பில் பிரதிவாதி தரப்பில் நீதிமன்றில் சாட்சியம் அளித்த உளவுத்துறையின் பணிப்பாளர் நிலந்த ஜயவர்த்தனவை குறுக்குக் கேள்விகளுக்கு உட்படுத்திய போதே ரொஹந்த அபேசூரிய இவ்வாறு கூறினார்.

ஆயினும், உளவுத்துறையின் பணிப்பாளர் நிலந்த ஜயவர்த்தன முற்றாக அவற்றை நிராகரித்தார்.

நடராஜா ரவிராஜ் படுகொலை தொடர்பில் முறைப்பாட்டாளர் தரப்பு சாட்சி விசாரணைகள் முடிவடைந்த நிலையில், கடந்த வியாழக்கிழமை பிரதிவாதி தரப்பு சார்பில் நீதிமன்றுக்குச் சாட்சியம் அளிக்க அழைக்கப்பட்டிருந்தது.

இதன்போது இலங்கையில் தேசிய உளவுத்துறை பணிப்பாளர் நிலந்த ஜயவர்த்தனவின் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

இவரின் சாட்சியம் பதிவு செய்யப்பட்ட பின்னர் நிலந்த ஜயவர்த்தனவிடம் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ரொஹந்த அபேசூரிய குறுக்குக் கேள்வி கேட்டார்.

இதன்போது ரவிராஜ் படுகொலை செய்யப்பட்ட சில நாள்களுக்குமுன்னர் அந்தக்கொலை அல்லது கொலைக்கான திட்டம் தொடர்பில் அல்லது அதனுடன் தொடர்புடைய தகவல் ஒன்றை அபேரத்ன உம்மிடம் தெரிவித்துள்ளார். அது தொடர்பில் நீர் உமது மேல் அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளீர். பின்னர் மீளவும் அபேரத்தினவுக்கு அது தொடர்பில் தேடவேண்டாம் எனவும் அது பெரிய இடத்து சமாச்சாரம் எனவும் நீர் கூறியுள்ளீர் என சிரேஷ்ட பிரதி சொலி சிட்டர் அபேசூரிய தெரிவித்தார்.

எனினும்அக்கூற்றைமுற்றாக மறுத்த நிலந்த ஜயவர்த்தன, ரவிராஜ் கொலை தொடர்பில் எந்தவிதமானதகவலும்தனக்குக் கிடைக்கவில்லைஎனக்கூறினார்.

இந்த நிலையில், தேசிய உளவுத்துறைப் பணிப்பாளர் நிலந்த ஜயவர்த்தனவை குறுக்குக் கேள்விகளுக்கு உட்படுத்த பாதிக்கப்பட்ட தரப்பு சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி சுமந்திரன் நீதிமன்றில் விண்ணப்பம் செய்தபோது, அது நீதிபதியால் நிராகரிக்கப்பட்டது.

## மாணவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கள், வேறு அதிகாரிகள், அரசியல்வாதிகள் ஆகியோரின் மனைவிமார் எல்லோரும் சொகுசாக தமது வீட்டுக்கு அருகிலுள்ள பாடசாலைகளில் கற்பிக்கிறார்கள். ஆனால், ஏழ்மையான, அப்பாவித்தனமான ஆசிரியைகள் தொலை தூரங்களுக்கு நோய்களுடன் அலைகிறார்கள்" எனவும் மனம் வருந்தினார் அவர்.

"பாடசாலைகளில் பெண் பிள்ளைகளுக்கு விளையாட்டுப் பயிற்சி கொடுக்கும்போது பெண் ஆசிரியர்கள் அங்கு முழுநேரமும் சமுகமளித்திருக்க வேண்டும்."

"யாழ். கோட்டைக்கு சோடி சோடியாக மாணவ, மாணவியர் வருகிறார்கள். யாழ். நகருக்கு ரியூசனுக்குவரும் ஆண்–பெண் மாணவரே வகுப்புகளுக்குச் செல்லாமல் சோடி சோடியாக யாழ். கோட்டைக்குள் சென்று சீரழிகிறார்கள். இச்சீரழிவு மாணவர் கல்வியையும் சமூக ஒழுங்கையும் குழப்பி அழிக்கிறது.

" இங்குள்ளமை போன்ற அதிபர்கள் பிரச்சினைகள் ஏழு மாகாணங்களில் இல்லை. கடந்த காலங்களில் ஏனைய மாகாணங்களில் 3 முறை கடமை நிறைவேற்று அதிபர் களுக்கு நியமனம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், இங்கு பதிவு செய்யப்படாத புதிய அதிபர் சங்கமொன்று வழக்குத் தாக்கல் செய்கிறது. தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கிறது. இங்கு வடக்கில்தான் இவ்வாறான பிரச்சினை ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடமை நிறைவேற்று அதிபர்கள் கஷ்டமான கால கட்டத்தில் கடினமான பிரதேசங்களில் பணியாற்றியோராவர். சித்தியடைந்த அதிபர்களின் நியமனங்களைப் பாதிக்காமல் கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு நியமனங்கள் வழங்க வேண்டும் –எனவும் அனந்தி தெரிவித்தார். (உ)

காலைக்கதிர்
Kalaikkathir

## பயணிகளுடன் கடத்தப்பட்ட லிபிய விமானம் விடுவிக்கப்பட்டது

நேற்று 118 பயணிகளுடன் கடத்தப்பட்ட லிபியாவின் பயணிகள்விமானம்பலமணிநேரங்களின் பின்னர் மீட்கப்பட்டது.

குண்டு வைத்து தகர்க்கப் போவதாக மிரட்டி விமானத்தை கடத்திச் சென்ற கடத்தல் காரர்கள் வலுக்கட்டாயமாக விமானத்தை மால்டா சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கினர்.

மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட அதிகாரிகள் பயணிகளுக்குபாதிப்பின்றிவிமானத்தை விடுவித்தனர். கடத்தல் காரர்கள் இருவர் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

## 7.30 மணிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கியுள்ளானர். இந்நேரம் பிரச்சினைகளுக்கு தீர்வு அவசியம். நடந்து கஷ்டப்படும் மாணவர்களுக்கு பிரமாண அடிப்படை உதவித் திட்டத்தின் மூலம் துவிச்சக்கரவண்டிகள் வாங்கிக் கொடுக்க வேண்டும் என ஜவாஹீர் குறிப்பிட்டார்.

காலை வேளையில் 7 மணிக்கு அல்லது 7.30 மணிக்கு பாடசாலை ஆரம்பிக்கும் முடிவினால், பாடசாலைகளில் இடைவிலகல் அதிகரிக்கும் - எனவும் ஜவாஹீர் கூறினார்.

7.30 மணிக்கு பாடசாலைகளை ஆரம்பிக்கும் முடிவு சபையில் எடுக்கப்படவில்லை. பருத்தித்துறையிலிருந்து வடமராட்சி கிழக்குக்கு வருவதற்கு இரண்டரை மணிநேரம் தேவை. ஆகவே, பின்தங்கிய பிரதேசத்தில் இந்த முறையைத் தளர்த்த வேண்டும் எனக் கோரினார் சுகிர்தன்.

7.30 மணிக்கு பாடசாலைகளை ஆரம்பிப்பதாயின் அதற்கு முன் ஆயத்த நிர்வாக நடவடிக்கைகள் அவசியம். போக்குவரத்துப்பாதைகள் ஒழுங்காக இருக்கவேண்டும். 7.30க்கு முன்னர் நகர, கிராமப் பாதைகள் துப்புரவு செய்யப்பட வேண்டும். இது உளவியல் ரீதியான தாக் கத்தை ஏற்படுத்தக் கூடிய விடயம். பல தரப்புகள் சேர்ந்து பணியாற்ற வேண்டிய சந்தர்ப்பங்கள் இதில் உள்ளன. - என்று சுட்டிக் காட்டினார் ஆர்னோல்ட். (உ)

## கச்சதீவு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இராமேஸ்வரத்திலிருந்துமூன்று படகுள் மூலம் 82 பேர் வருகை தந்திருந்தனர்.

அதேவேளையாழ்.வேலணை மற்றும் நெடுந்தீவில் இருந்தும் மக்கள் பங்கு பற்றியிருந்தனர்.

இந்நிகழ்லே நெடுந்தீவு பங்குத்தந்தை அருட்திரு. அ. ஜெ. அன்ரனிஜெயரஞ்சன், யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் அ.நடராஜன், வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, இலங்கை கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜே குணரட்ண, வடபிராந்திய கடற்படை கட்டளைத்தளபதி றியல் அட்மிரல் பியர் டி.சில்வா ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கடந்த மே மாதம் 9 ஆம் திகதி யாழ். மறை மாவட்ட குரு முதல்வர்அருட்திரு.பக்திநாதர்ஜோசப் தாஸ்ஜெயரட்ணத்தினால் இந்த ஆலய நிர்மாணித்துக்காக உத்தியோகபூர்வமாக அடிக்கல் நாட்டப்பட்டது. ஆறு மாதங்களின் பின்னர் நேற்று ஆலயத்தின் நிர்மாணப்பணிகள் நிறைவடைந்து புதுபொலிவுடன் அது யாழ். மறைமாவட்ட ரோமன்கத்தோலிக்கத் திருச்சபையிடம் கையளிக்கப்பட்டது.

சுமார் 77 லட்சம் ரூபா செலவில் கடற்படையினரே இந்தக் கட்டுமானப் பணியை முன்னெடுத்திருந்தனர். (உ-10)

## 3,000 முஸ்லிம்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பதியுதீனின் நீண்ட கால முயற்சியின் அடிப்படையில் - 2011 முதல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் பலனாக - மன்னார் மாவட்டத்திலும், வவுனியா மாவட்டத்திலும் அரச காணிகள் அடையாளம் காணப்பட்டு முஸ்லிம் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதனை தனது மாகாண சபையின் சாதனையாக காட்ட முயற்சிக்கின்றார் முதல்வர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் போனஸ் ஆசனத்துக்காக நியமிக்கப்பட்ட முஸ்லிம் உறுப்பிரான அயூப் அஸ்மினே மீள் குடியேற்ற விடயத்தில் முஸ்லிம்களின் பாதிப்பை வேதனையுடன் எடுத்துச் சொல்கின்றார் என்றால் நாம் அதனை பிரஸ்தாபிக்கத் தேவையில்லை. - என்று எதிரணி முஸ்லிம் உறுப்பினரான ஜவாகீர் மேலும் தெரிவித்தார்.

அவரது நீண்ட அறிக்கையில் வடமாகாண சபையால் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்படுகின்றமை தொடர்பில் பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

மூவாயிரம் முஸ்லிம்குடும்பங்களுக்கு அல்ல, மூன்று குடும்பங்களுக்காவது வடக்கு மாகாண சபை காணி பெற்றுக் கொடுத்தமையை வடக்கு முதல்வரால் நிரூபிக்க முடியுமா என்றும் அந்த சவால் விடுத்துள்ளார். (உ)

காலைக்கதிர்
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 222 3000

N.P.K. Computer Repair
CCT கமரா பொருத்துதல் மற்றும் திருத்த வேலைகள் 2 வருட உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். கணனி உரிப்பாகங்கள் விற்பனை மற்றும் திருத்த வேலைகள் வடமாகாணத்தின் எப்பாகங்களிலும் செய்து கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு:-0777064151
C/086

அதிரடி சேல் விரையுங்கள்
+ அப்பியாசக் கொப்பிகள் 25% முதல் 30% வரை
+ பாட நூல்கள், உலக பிரசித்தி நாவல்கள், மருத்துவ நூல்கள், அகராதிகள் 10% முதல் 50% வரை
+ பிரமாண்டமான காட்சியறை உங்கள் எண்ணம் போல் தேர்வு செய்திட ஒருமுறை விஜயம் செய்யுங்கள் வித்தியாசத்தை உணர்வீர்கள்.
ஞாயிற்றுக்கிழமைகளிலும் எமது சேவை வழமைபோல் இடம்பெறும்.
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
இல. 212, 214, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.:021 222 5542, 021 567 1527, acdil@gmail.com




இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.12.2016 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.